## இயல் - 1

## திறன் அறிவோம்

### பலவுள் தெரிக.

1. **"மெத்த வணிகலன்"** என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது.

அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்

ஆ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும்

இ) ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும்

ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்

விடை : **அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்.**

2. **காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்** நிலத்துக்கு நல்ல உரங்கள், இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது -

அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும்

இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்

விடை : **ஈ) சருகும் சண்டும்**

3. **"எந்தமிழ்நா"** என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்

அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா

இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா

விடை : **இ) எம் + தமிழ் + நா**

4. **"கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது"** – தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே -

அ) பாடிய ; கேட்டவர் ஆ) பாடல் ; பாடிய

இ) கேட்டவர் ; பாடிய ஈ) பாடல் ; கேட்டவர்

விடை : **ஈ) பாடல் : கேட்டவர்**

5. **வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை** ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை

அ) குலை வகை ஆ) மணி வகை

இ) கொழுந்து வகை ஈ) இலை வகை

விடை : **ஆ) மணி வகை**

### குறுவினா

1. **"வேங்கை"** என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.

- வேங்கை – மரம், புலி – தனிமொழி
- வேம்+கை – வேகின்ற கை – தொடர்மொழி

எனவே இது பொதுமொழி.

2. **"மன்னும் சிலம்பே! மணிமே கலைவடிவே!**
**முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!"** - இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள ஐம்பெருங்காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள காப்பியங்களின் பெயர்களை எழுதுக.

- சீவக சிந்தாமணி
- வளையாபதி
- குண்டலகேசி

3. **ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.**
**ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.**

**ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.**

மேற்கண்ட தொடர்களில் சரியான தொடர்களைச் சுட்டிக்காட்டி, எஞ்சிய பிழையான தொடரிலுள்ள பிழைக்கான காரணத்தை எழுதுக.

சரியான தொடர்கள் :

- ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.
- ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.

பிழையான தொடர் :

- ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.

காரணம் :

- பல சீப்பு வாழைப்பழங்கள் சேர்த்தே ஒரு தாறு.

4. **"உடுப்பதூஉம் உண்பதூஉம்** காணின் பிறர்மேல் வடுக்காண் வற்றாகும் கீழ்" - இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகைளைச் சுட்டி, அதன் இலக்கணம் தருக.

- உடுப்பதூஉம் - இன்னிசை அளபெடை
- உண்பதூஉம் - இன்னிசை அளபெடை

இலக்கணம் :

- செய்யுளில் ஓசை குறையாத போதும் இனிய ஓசைக்காக அளபெடுக்கும்.

5. தற்கால **உரைநடையில் சிலேடை** அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

ஒரு சொல்லோ, சொற்றொடரோ இரு பொருள்பட வருவது சிலேடை எனப்படும்.

எ.கா: பல்துறை வித்தகர்

- பல துறைகளில் வல்லவர்.
- பல் மருத்துவத்தில் வல்லவர்.

## சிறுவினா

1. **தமிழன்னையை வாழ்த்துவதற்கான** காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

**தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன:**

- முதன் முதலாகத் தோன்றிய நறுங்கனியாகவும்
- குமரிக் கண்டத்தில் நிலைத்து அரசாண்ட மண்ணுலகப் பேரரசாகவும்
- பாண்டிய மன்னனின் மகளாகவும்
- திருக்குறளின் மாண்புகழாகவும்
- பெருமைபெற்ற சங்க இலக்கியங்களாகவும்
- நிலைத்த புகழுடைய சிலப்பதிகாரமாகவும்
- அழியா ஓவியமான மணிமேகலையாகவும்

விளங்குவதால் தமிழன்னையை வாழ்த்துகிறார்.

2. **"புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது"** - இதுபோல் இளம்பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

இளம் பயிர் வகைகள் :

- தென்னம்பிள்ளை வளர்கிறது.
- கொய்யாக்கன்று நட்டேன்.
- மாங்கன்றுகள் வளர்கின்றன.
- நெல்நாற்றுகளைப் பார்த்தேன்.
- வாழைக்குருத்து வளர்கிறது.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- பனைவடலியைப் பார்த்தேன்.

3. அறிந்தது, அறியாதது, புரிந்தது, புரியாதது, தெரிந்தது, தெரியாதது, பிறந்தது, பிறவாதது இவை அனைத்தையும் யாம் அறிவோம். அதுபற்றி உமது அறிவுரை எமக்குத் தேவை இல்லை. எல்லாம் எமக்குத் தெரியும். இக்கூற்றில் வண்ண எழுத்துகளில் உள்ள வினைமுற்றுகளைத் தொழிற்-பெயர்களாக மாற்றி எழுதுக.

தொழிற்பெயர்

அறிதல் - அறியாமை

புரிதல் - புரியாமை

தெரிதல் - தெரியாமை

பிறத்தல் - பிறவாமை

4. தமிழழகனார் **தமிழையும் கடலையும் இரட்டுற மொழியும்** பாங்கினை விளக்குக.

| பாடல் அடிகள் | தமிழ் | கடல் |
|---|---|---|
| முத்தமிழ் | இயல், இசை, நாடகம் | முத்தினை அமிழ்ந்து எடுத்தல் |
| முச்சங்கம் | முதல், இடை, கடைச்சங்கங்கள் | மூன்று வகையான சங்குகள் |
| மெத்தவணிகலன் | ஐம்பெருங்காப்பியங்கள் | மிகுதியான வணிகக் கப்பல்கள் |
| சங்கத்தவர் காக்க | சங்கப் புலவர்கள் காத்தனர் | சங்கினைக் காத்தல் |

## நெடுவினா

1. **மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப்** பாடலையும் **பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும்** ஒப்பிட்டு மேடைப் பேச்சு ஒன்றை உருவாக்குக:-

**அனைவருக்கும் வணக்கம்!**

தமிழ்த்தாயைப் பாடாத புலவர் இல்லை. மனோன்மணீயம் சுந்தரனாரும், பெருஞ்சித்திரனாரும் தமிழன்னையை வாழ்த்தியதைப் பற்றிக் காண்போம்.

"நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்...
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!

என்று மனோன்மணியம் சுந்தரனார் அலைகடலை ஆடையாக அணிந்த பூமித்தாய்க்கு பாரதநாடு முகமாகவும், அம்முகத்திற்கு தென்திசை நாடுகள் பிறைநிலவுபோன்ற நெற்றியாகவும், அங்கே நறுமணம் மிக்கத்திலகமாகத் தமிழகம் உள்ளதாக மனோன்மணியம் சுந்தரனார் கூறியுள்ளார். மேலும் தமிழே, தாயே உன்னை வாழ்த்துகிறேன் என்கிறார்.

அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!
முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!
கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்
மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!
தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!
இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!
மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!

என்று பாவலரேறு பெருஞ்சித்திரனார் தமிழை முதன் முதலாகத் தோன்றிய நறுங்கனியாகவும், குமரிக் கண்டத்தில் நிலைத்து அரசாண்ட மண்ணுலகப் பேரரசாகவும், பாண்டிய மன்னனின்

மகளாகவும், பெருமை பெற்ற சங்க இலக்கியங்களாகவும், நிலைத்த புகழுடைய சிலப்பதிகாரமாகவும், அழியா ஓவியமான மணிமேகலையாகவும் விளங்குவதாக பெருஞ்சித்திரனார் கூறியுள்ளார். மேலும் தமிழைச் சுவைத்து தமிழின் பெருமையை எங்கும் முழங்குவோம் என்கிறார்.

இவ்வாறு மனோன்மணீயம் சுந்தரனாரும், பெருஞ்சித்திரனாரும் தமிழின் பெருமையைப் பாடியுள்ளனர்.

2. **தமிழின் சொல்வளம்** பற்றியும் **புதிய சொல்லாக்கத்திற்கான** தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்புகளை எழுதுக.

சொல்வளம்:

சொல்வளம் எல்லா மொழிகளுக்கும் பொதுவானாலும் அவற்றுள் தமிழ் மட்டும் தலைசிறந்ததாகும். தமிழ்ச் சொல் வளத்தைப் பல துறைகளில் காணலாம். ஆனாலும் இங்கு பயிர்வகைச் சொற்களை மட்டும் காணலாம். குறிப்பாக அடிவகை, கிளைப்பிரிவுகள், இலைவகைகள், கொழுந்துவகை, பிஞ்சுவகை, குலைவகை, கெட்டுப்போன காய்கனி வகை, பழத்தோல்வகை, மணிவகை, இளம்பயிர் வகை என இவற்றை நோக்கும் போது தமிழ் சொல் வளம் உடையது என்பது விளங்கும்.

புதிய சொல்லாக்கத்திற்கான தேவை:

**"நாடும் மொழியும் நமதிரு கண்கள்"**

காலவெள்ளத்தில் கரைந்து போன மொழிகளுக்கிடையில் நீந்தி தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது தமிழ். திருந்திய மக்களைப் பிற உயிர்களின்றும் பிரித்துக் காட்டுவது மொழியே. ஒரு நாட்டாரின் அல்லது ஒரு இனத்தாரின் நாகரிகத்தை அளந்தறிய சிறந்த வழி மொழியே ஆகும். ஆகையால் நாம் இன்னும் பெருமை பெற்றுத் திகழ நுண்பாகுபாடு சொற்களையும், புதிய அறிவியல் சொற்களுக்கான கலைச்சொல் வளத்தையும் பெருக்கிக் கொள்ள வேண்டும்.

3. **ஒரு பக்க அளவில் உரையாடல் எழுதுக:-**

சூழல் - வெளிநாட்டிலிருந்து உங்கள் இல்லத்திற்கு வந்திருக்கும் உறவினரின் மகளுக்குத் தமிழ் மொழியைப் பேச மட்டுமே தெரியும். ஆங்கில இலக்கியம் படித்த அவரிடம் **தமிழ் உரைநடையின் சிறப்புப் பற்றி உரையாடுதல்.**

செல்வி : வா மேகலா. நலமா?

**மேகலா** : நலமே செல்வி. நீ நலமா?

செல்வி : ஆம், நீ என்ன படித்திருக்கிறாய்?

**மேகலா** : நான் ஆங்கில இலக்கியம் படித்துள்ளேன். ஆனால் எனக்குத் தமிழ் இலக்கியமும் கற்றுக் கொள்ள ஆசை.

செல்வி : அப்படியா? ரொம்ப மகிழ்ச்சி.அதை நான் சொல்லித் தருகிறேன்.

**மேகலா** : தமிழ் வாசிக்கக் கடினமானதா?

செல்வி : இல்லை. எழுத்துகளின் உச்சரிப்புகள் தெரிந்தால் படித்து விடலாம். சரி. உரைநடை பற்றித் தெரியுமா?

**மேகலா** : தெரியாது?

செல்வி : நீயும் நானும் பேசுவதுதான் உரைநடை.

**மேகலா** : அப்படியா? உரைநடையின் சிறப்பென்ன?

செல்வி : எளிதில் புரிந்து கொள்ளலாம். இங்கும் உவமை, உருவகங்கள், பயன் படுத்தப் படுகின்றன.

**மேகலா** : வேறென்ன உள்ளன?

செல்வி : இணைஒப்பு, இலக்கணை, முரண்படு மெய்ம்மை, சொல்முரண், எதிரிணை இசைவு, உச்சநிலை போன்ற சிறப்புகளும் உள்ளன.

Padasalai.Net

**மேகலா** : இவற்றை விளக்கமாகக் கூறுவாயா?

**செல்வி** : சரி. மதிய உணவுக்குப் பின் சொல்லித் தருகிறேன்.

## மொழியை ஆள்வோம்

**சந்தக் கவிதையில் வந்த பிழைகளைத் திருத்துக.**

"தேணிலே ஊரிய செந்தமிழின் - சுவை
தேரும் சிலப்பதி காறமதை
ஊனிலே எம்முயிர் உல்லலவும் - நிதம்
ஓதி யுனர்ந்தின் புருவோமே.

விடை:-

"தே**னி**லே ஊ**றி**ய செந்தமிழின் - சுவை
தே**று**ம் சிலப்பதி கா**ர**மதை
ஊனிலே எம்முயிர் உ**ள்ளள**வும் - நிதம்
ஓதி யு**ண**ர்ந்தின் பு**று**வோமே.

**கீழ்க்காணும் சொற்களின் கூட்டப்பெயர்களைக் கண்டுபிடித்து எழுதுக.**

( குவியல், குலை, மந்தை, கட்டு )

| சொல் | கூட்டப்பெயர் | சொல் | கூட்டப்பெயர் |
|---|---|---|---|
| கல் | கற்குவியல் | புல் | புற்கட்டு |
| பழம் | பழக்குலை | ஆடு | ஆட்டுமந்தை |

**வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக.**

1. கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறார். அவரை அழைத்து வாருங்கள்.
   கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறவரை அழைத்து வாருங்கள்.
2. ஊட்டமிகு உணவு உண்டார். அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.
   ஊட்டமிகு உணவு உண்டவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.
3. நேற்று என்னைச் சந்தித்தார். அவர் என் நண்பர்.
   நேற்று என்னைச் சந்தித்தவர் என் நண்பர்.
4. பொது அறிவு நூல்களைத் தேடிப்படித்தார். போட்டித் தேர்வில் வென்றார்.
   பொது அறிவு நூல்களைத் தேடிப்படித்தவர் போட்டித் தேர்வில் வென்றார்.

**தொடர்களில் உள்ள தடித்தசொற்களுக்குப் பதிலாக அதே பொருளுடைய வேறு சொற்களைப் பயன்படுத்தித் தொடர்களை மீள எழுதுக.**

1. **உலகில்** வாழும் **மக்களில்** சிலர் **கனி**யிருக்கக் காய் **புசி**த்தலைப் போல இன்சொல் இருக்க வன்சொல் பேசி **இன்னற்**படுகின்றனர்.
   **பூமியில்** வாழும் **மனிதர்களில்** சிலர் **பழமி**ருக்கக் காய் **ருசி**த்தலைப் போல இன்சொல் இருக்க வன்சொல் பேசி **அல்லற்**படுகின்றனர்.
2. வள்ளல் குமணன் **வறுமையால்** வாடிவந்த **புலவனுக்குத்** தனது தலையைக் **கொடுத்து** மங்காப் **புகழ்** பெற்றான்.
   வள்ளல் குமணன் **ஏழ்மையால்** வாடிவந்த **கவிஞனுக்குத்** தனது தலையை **ஈந்து** மங்காப் **பெருமை** பெற்றான்.
3. நளனும் அவனது **துணைவியும்** நிடதநாட்டுக்கு வந்ததைக் கண்டு அந்நாட்டு மக்கள் மழை**முகில்** கண்ட **மஞ்ஞை** போலக் **களி** கொண்டனர்.
   நளனும் அவனது **மனைவியும்** நிடதநாட்டுக்கு வந்ததைக் கண்டு அந்நாட்டு மக்கள் மழை**மேகம்** கண்ட **மயில்** போல **மகிழ்ச்சி** கொண்டனர்.

Padasalai.Net

4. **சோலையிற்** பூத்த மணமலர்களில் **சுரும்புகள்** மொய்த்துப் பண்பாடி **மது**வுண்டன.

**பூங்காவிற்** பூத்த மணமலர்களில் **வண்டுகள்** மொய்த்துப் பண்பாடி **தேனு**ண்டன.

5. **பசுப்**போல் **சாந்தமும்** புலிபோல் **தீரமும் யானை** போல் உழைப்பும் மனிதனுக்கு வேண்டும்.

**ஆப்**போல் **அமைதியும்** புலிபோல் **வீரமும் களிறு** போல் உழைப்பும் மனிதனுக்கு வேண்டும்.

**கட்டுரை எழுதுக.**

குமரிக் கடல் முனையையும் வேங்கடமலை முகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும் எழில்சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்கு, பிள்ளைத்தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணிபாடி கலம்பகம் கண்டு, உலாவந்து, அந்தாதி கூறி, கோவை யாத்து, அணியாகப் பூட்டி அழகூட்டி அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள். இக்கருத்தைக் கருவாகக் கொண்டு "சான்றோர் வளர்த்த தமிழ்" என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

**சான்றோர் வளர்த்த தமிழ்**

முன்னுரை:-

**அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!**
**முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!**

குமரிக்கடல் முனையையும், வேங்கடமலை முகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை தகைசால் தமிழன்னையைச் சாரும்.

தமிழ் இலக்கியங்கள்:-

**தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!**
**இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!**
**மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!**

எழில்சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்கு பிள்ளைத்தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணிபாடி, கலம்பகம் கண்டு, உலாவந்து, அந்தாதி கூறி, கோவை யாத்து, அணியாகப் பூட்டி அழகூட்டி அகம் மிக மகிழ்ந்தனர் செந்நாப்புலவர்கள்.

தமிழ் வளர்த்த சான்றோர்கள்:-

தமிழ்த்தாத்தா உ.வே.சா. அவர்கள் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, காப்பியங்கள் என அனைத்தையும் அச்சிலிட்டு தமிழை அழகுபடுத்தினார். பிரிதிமாற்கலைஞர் தமிழ் மொழியை "உயர்தனிச் செம்மொழியாகச்" செய்தார். மறைமலை அடிகள் தனித் தமிழ் இயக்கத்தை உருவாக்கித் தமிழை வளர்த்தார்.

தேவநேயப்பாவாணர், மு. வரதராசனார், மீனாட்சி சுந்தரனார், ச. வையாபுரி, ரா.பி.சே., ஜி.யு.போப், கால்டுவெல், வீரமாமுனிவர் போன்ற பலராலும் தமிழன்னை வளர்க்கப் பட்டாள். பாண்டியரும் சங்கம் வைத்து தமிழை மகள் போல வளர்த்தனர்.

**"தென்னன் மகளே!"**

தமிழன்னையின் அணிகலன்கள்:-

ஐம்பெருங்காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி, சீவகசிந்தாமணி இவை ஐந்தும் தமிழன்னையின் அணிகலன்களாகவும், திருக்குறள் செங்கோலாகவும் திகழ்கின்றது.

முடிவுரை:-

**"மன்னும் சிலம்பே! மணிமே கலைவடிவே!**
**முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!"**

தமிழ் இலக்கியங்களைக் கற்று இன்புறுவோம். தமிழன்னையை வாழ்த்தி வணங்குவோம். புது அணிகலன்களை உருவாக்குவோம்.

Padasalai.Net

நயம் பாராட்டுக.

தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே
தென்னாடு விளங்குறத் திகழுந்தென் மொழியே!
ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே!
உணர்வினுக் குணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே!
வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே!
மாந்தருக் கிருகணா வயங்குநன் மொழியே!
தானனி சிறப்புறுந் தனித்தமிழ் மொழியே!
தழைத்தினி தோங்குவாய் தண்டமிழ் மொழியே!

திரண்ட கருத்து:-

தேனைவிட இனிய செந்தமிழ் மொழியே, தென்னாடு பெருமை கொள்ளும்படி திகழும் மொழியே, உடம்பில் ஒளிவிட்டு விளங்கும் உயர்ந்த மொழியே, வானைவிட உயர்ந்த வண்டமிழ் மொழியே, மனிதர்களுக்கு இரு கண்ணாக விளங்கும் நல்ல மொழியே, தானாகவே சிறப்புறும் தனிதமிழ் மொழியே நீ தழைத்து இனிது உயர்வாயாக தனித் தமிழ் மொழியே.

மையக் கருத்து:-

தமிழ்மொழியின் சிறப்புகள் பலவாறாகக் கூறப்பட்டுள்ளது.

மோனைத்தொடை:- (முதல் எழுத்து ஒன்றி வரும்)

- தேனினும் - தென்னாடு
- ஊனினும் - உணர்வினும்
- தானனி - தழைத்தினி

எதுகைத் தொடை:- (இரண்டாம் எழுத்து ஒன்றி வரும்)

- தேனினும்,
- ஊனினும்,
- வானினும்,
- தானனி.

இயைபுத்தொடை:- (செய்யுளின் ஈற்று அசை அல்லது சீர்கள் ஒன்றி வரும்.)

"மொழியே"

அணிநயம்:- உயர்வு நவிற்சி அணி.

முடிவுரை:- இப்பாடலில், கருத்து, மோனை, எதுகை, இயைபு, அணி நயங்கள் சிறப்புற அமைந்துள்ளது.

## மொழியோடு விளையாடு

1. **சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.**

(தேன், விளக்கு, மழை, விண், மணி, விலங்கு, செய், மேகலை, வான், பொன், பூ)

**எ.கா: - பூமணி**

- தேன்மழை, பொன்விளக்கு, பொன்மணி.
- செய்தேன், வான்மழை, பொன்விலங்கு.
- தேன்பூ, பூமழை, பூவிலங்கு.
- மணிவிளக்கு, மணிமேகலை, செய்வான்.
- செய்விளக்கு, விண்விளக்கு, பொன்மேகலை.

2. **குறிப்புகளைக் கொண்டு வினாவிலேயே விடை இருப்பது போன்று வினாத் தொடர்களை அமைக்க.**

(குறளின்பம், சுவைக்காத இளநீர், காப்பியச் சுவை, மனிதகுல மேன்மை, விடுமுறைநாள்)

**எ.கா:-** குறளின்பத்தில் திளைக்காத தமிழன் உண்டா?

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

1. சுவைக்காத இளநீர் உண்டா?
2. காப்பியச் சுவை இல்லாத தமிழா?
3. மனிதகுல மேன்மை இல்லாமலா போயிற்று?
4. விடுமுறைநாள் வாராமல் இருக்குமா?

**3. எண்ணுப் பெயர்களைக் கண்டு தமிழ் எண்களில் எழுதுக.**

| செய்யுள் அடி | எண்ணுப் பெயர் | தமிழ் எண் |
|---|---|---|
| நாற்றிசையும் செல்லாத நாடில்லை. | நான்கு - 4 | ச |
| எறும்புந்தன் கையால் எண்சாண் | எட்டு - 8 | அ |
| ஐந்து சால்பு ஊன்றிய தூண் | ஐந்து - 5 | ரு |
| நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி | நான்கு – 4, இரண்டு - 2 | ச,உ |
| ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மானவனுக்கு வகுப்பது பரணி | ஆயிரம் - 1000 | க000 |

**4. அகராதியில் காண்க:-**

அடவி - காடு, திரள், சோலை.

அவல் - நெல் இடியல், பள்ளம், குளம்.

சுவல் - மேடு, தோள், முதுகு, குதிரை.

செறு - வயல், பாத்தி, குளம்.

பழனம் - வயல், குளம்.

புறவு - காடு, புறா.

**5. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக:-**

**கவிதை**

ஏடெடுத்தேன்
ஏதாவது எழுதலாமென்று
எழுது கோல் எடுத்தேன்
எதையாவது எழுதலாமென்று
கண்முன்னே வந்து நின்றது
கண்கொள்ளாக் காட்சி ஒன்று
புத்தகம் படி அறிவைத்திறக்கும
மகிழ்ச்சிதரும், நல்வாழ்வுதரும்
மடமை நீக்கும், அறியாமை நீக்கும்
கற்றோருக்கு என்றென்றும்
சென்ற இடமெல்லாம் சிறப்பு.

**6. நிற்க அதற்குத் தக.**

| இன்சொல்வழி | தீய சொல் வழி |
|---|---|
| பிறர் மனம் மகிழும் | பிறர் மனம் வாடும் |
| அறம் வளரும் | அறம் தேயும் |
| புகழ் பெருகும் | இகழ் பெருகும் |
| நல்ல நண்பர்கள் சேருவர் | நல்ல நண்பர்கள் விலகுவர் |



Padasalai.Net

அன்பு நிறையும் பகைமை நிறையும்

இதில் நீங்கள் செல்லும் வழி யாது? உங்கள் நண்பருக்குக் காட்டும் வழி யாது?

விடை:

இதில் நாங்கள் செல்லும் வழி இன்சொல் வழி. எங்கள் நண்பருக்குக் காட்டும் வழி இன்சொல் வழி.

**7. கலைச்சொல் அறிவோம்:-**

Vowel – உயிரெழுத்து, Monolingual – ஒருமொழி.

Consonant – மெய்யெழுத்து, Conversation – உரையாடல்.

Homograph – ஒப்பெழுத்து, Disscussion – கலத்துரையாடல்.

**8. அறிவை விரிவு செய்:-**

நாம் ஏன் தமிழ் காக்க வேண்டும் - முனைவர் சேதுமணி மணியன்.

தவறின்றித் தமிழ் எழுதுவோம் - மா. நன்னன்.

பச்சை நிழல் - உதயசங்கர்.

**9. சொல்லும் பொருளும் :**

துய்ப்பது - கற்பது, தருதல்

மேவலால் - பொருந்துதல், பெறுதல்

முகிழ்த்த - தோன்றிய

மன்னி - நிலைத்து

தென்னன் - பாண்டியன்

பாப்பத்தே - பத்துபாட்டே

எண்தொகை - எட்டுத்தொகை

நற்கணக்கு - பதினெண்கீழ்க்கணக்கு

மன்னும் - நிலைபெற்ற

செப்பரிய - சொல்லுதற்கரிய

நெடு நிலைப்பு - நீண்ட நிலைப்பு

**10. இலக்கணக் குறிப்பு :**

முகிழ்த்த - பெயரெச்சம்

உந்தி - வினையெச்சம்

Padasalai.Net

* * * *

**இயல் - 2** **உயிரின் ஓசை**

**பலவுள் தெரிக.**

1. **"உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்**
**உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்"** - பாரதியின் இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள நயங்கள் யாவை?

அ) உருவகம், எதுகை ஆ) மோனை, எதுகை

இ) முரண், இயைபு ஈ) உவமை, எதுகை

விடை : **ஆ) மோனை, எதுகை**

2. **செய்தி 1** – ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 15ஐ உலகக் கற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.
**செய்தி 2** – காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் இரண்டாமிடம் என்பது எனக்குப் பெருமையே.

**செய்தி 3** – காற்றின் ஆற்றலைப் பயன்படுத்திக் கடல்கடந்து வணிகம் செய்து அதில் வெற்றி கண்டவர்கள் தமிழர்கள்!

அ) செய்தி 1 மட்டும் சரி ஆ) செய்தி 1,2 ஆகியன சரி

இ) செய்தி 3 மட்டும் சரி ஈ) செய்தி 1,3 ஆகியன சரி

விடை : **ஈ) செய்தி 1,3 ஆகியன சரி**

3. **"பாடுஇமிழ் பனிக்கடல் பருகி"** என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?

அ) கடல் நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல் நீர் குளிர்ச்சி அடைதல்

இ) கடல் நீர் ஒலித்தல் ஈ) கடல் நீர் கொந்தளித்தல்

விடை : **அ) கடல் நீர் ஆவியாகி மேகமாதல்**

4. **"பெரிய மீசை" சிரித்தார்** – வண்ணச் சொல்லுக்கான தொகையின் வகை எது?

அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை

இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை

விடை : **இ) அன்மொழித்தொகை**

5. பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க.

**அ) கொண்டல் - 1. மேற்கு**

**ஆ) கோடை - 2. தெற்கு**

**இ) வாடை - 3. கிழக்கு**

**ஈ) தென்றல் - 4. வடக்கு**

அ) 1,2,3,4 ஆ) 3,1,4,2

இ) 4,3,2,1 ஈ) 3,4,1,2

விடை : **ஆ) 3,1,4,2**

## குறுவினா

1. **"நமக்கு உயிர் காற்று**
**காற்றுக்கு வரம் மரம் - மரங்களை**
**வெட்டி எறியாமல் நட்டு வளர்ப்போம்"** - இது போன்று உலகக் காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத்தொடர்களை எழுதுக.

- மரங்களை நடுவோம்.
- மாசற்ற காற்றைப் பெறுவோம்!
- காற்று மாசைத் தடுப்போம்!
- நோயற்ற வாழ்வைப் பெறுவோம்!

2. **வசன கவிதை** – குறிப்பு வரைக.

உரைநடையும் கவிதையும் இணைந்து யாப்புக் கட்டுகளுக்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும் கவிதை வடிவம் வசன கவிதை ஆகும்.

3. **தண்ணீர் குடி, தயிர்க்குடம்** ஆகிய தொகைச் சொற்களை விரித்து எழுதுக; தொடரில் அமைக்க.

- **தண்ணீர் குடி** : தண்ணீரைக் குடி.
- **தொடர்** : நீ அடிக்கடி தண்ணீர் குடி.
- **தயிர்க்குடம்** : தயிரை உடைய குடம்.
- **தொடர்** : ராதை தயிர்க்குடம் கொண்டு சென்றாள்.

4. பெற்றோர் வேலையிலிருந்து திரும்பத் தாமதமாகும்போது **அழும் தம்பிக்கு** நீங்கள் கூறும் **ஆறுதல் சொற்களை** எழுதுக.

**தம்பிக்கு ஆறுதல் :**

Padasalai.Net

- தம்பி அழாதே.
- அம்மா வந்து விடுவார்.
- நான் இருக்கிறேன்.
- பயம் கொள்ளாதே.

5. **மாஅல்** - பொருளும் இலக்கணக் குறிப்பும் தருக.

**மாஅல் :**

- **பொருள்** - திருமால்.
- **இலக்கணக்குறிப்பு** - செய்யுளிசை அளபெடை.

## சிறுவினா

1. **உயிராக நான், பல பெயர்களில் நான், நான்கு திசையிலும் நான், இலக்கியத்தில் நான், முந்நீர் நாவாய் ஓட்டியாக நான்...** முதலிய தலைப்புகளில் காற்று தன்னைப் பற்றிப் பேசுகிறது. இவ்வாறு **'நீர்'** தன்னைப் பற்றிப் பேசினால்... உங்களுடைய கற்பனையில் தலைப்புகளை எழுதுக.

- ஊயிராக நான்
- பல பெயர்களில் நான்
- இலக்கியத்தல் நான்
- முந்நீராய் நான்
- குழாய் நீராய் நான்
- குடிநீராய் நான்
- புட்டி நீராய் நான்
- நாளை.... நான்

2. **சோலைக் (பூங்கா)** காற்றும் **மின்விசிறிக்** காற்றும் பேசிக்கொள்வதுபோல் ஓர் உரையாடல் அமைக்க.

**மின்விசிறி** : ஹாய்... வரும்போதே எவ்வளவு ஜில்லென்று இருக்கிறாய்?

**சோலைக்காற்று** : ஆம் வடகிழக்குப் பருவகாலம் தொடங்கி விட்டதே!

**மின்விசிறி** : எனக்கு எந்தப் பருவ காலமும் கிடையாது.

**சோலைக்காற்று** : ஏன் அப்படி கூறுகிறாய்?

**மின்விசிறி** : மின்சாரம் இருந்தால் ஓடுவேன். இல்லையென்றால் இல்லை.

**சோலைக்காற்று** : சரி கவலைப்படாதே.

**மின்விசிறி** : ஆம். நீ வந்தால் சூடான எனது காற்று குளிர்ச்சியடையும்.

**சோலைக்காற்று** : அவ்வளவுதானா?

**மின்விசிறி** : இல்லை. மலர்களின் நறுமணமும் கூடவே வரும். ஆனால், சில நேரங்களில்....துர்மணமும் வருகிறது.

**சோலைக்காற்று** : இந்த மனிதர்கள் மலர்தரும் மரம் செடி, கொடிகளை நட்டு வளர்த்தால் நறுமணத்தை அள்ளிக்கொண்டு வருவேன். இல்லையென்றால்....

**மின்விசிறி** : துர்மணத்தையும், நோய்க்கிருமிகளையும் அள்ளிக் கொண்டு வருவாய். அப்படித்தானே.

**சோலைக்காற்று** : ஆம். சுத்தமாக இருந்தால் நறுமணம், இல்லையென்றால் துர்மணம்.

**மின்விசிறி** : அது சரிதான்.

**சோலைக்காற்று** : சரி. நான் சென்று வருகிறேன்.

**மின்விசிறி** : சரி, சென்று வா.

3. தோட்டத்தில் மல்லிப்பூ பறித்த பூங்கொடி, வரும்வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள்.

Padasalai.Net

இப்பத்தியில் உள்ள **தொகைச் சொற்களின் வகைகளைக்** குறிப்பிட்டு, விரித்து எழுதுக.

**தொகைநிலைத் தொடர்களின் வகைகளை எழுதுக.**

1. மல்லிகைப்பூ - இரு பெயரொட்டுப் பண்புத் தொகை.
2. பூங்கொடி - அன்மொழித்தொகை.
3. ஆடுமாடுகள் - உம்மைத் தொகை.
4. தண்ணீர்த்தொட்டி - 2ம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை.
5. குடிநீர் - வினைத்தொகை.
6. மணிபார்த்தாள் - 2ம் வேற்றுமைத் தொகை.

4. **மழைநின்றவுடன் புலப்படும் காட்சியை வருணித்து எழுதுக.**

குறிப்பு : இலைகளில் சொட்டும் நீர் – உடலில் ஓடும் மெல்லிய குளிர் – தேங்கிய குட்டையில் 'சளப் தளப்' என்று குதிக்கும் குழந்தைகள் - ஓடும் நீரில் காகிதக் கப்பல்.

- பசுமையான இலைகளில் சொட்டுமம் நீர் அழகாக இருந்தது.
- உடலில் ஓடும் மெல்லிய குளிர் இதமாக இருந்தது.
- தேங்கிய குட்டையில் 'சளப் தளப்' என்று குதிக்கும் குழந்தைகள் மகிழ்ந்தனர்.
- ஓடும் நீரில் காகிதக் கப்பல் செய்து விட்டேன்

## நெடுவினா

1. முல்லைப் பாட்டில் உள்ள **கார்காலச் செய்திகளை** விவரித்து எழுதுக.

கார்காலச் செய்திகள் :

- அகன்ற உலகத்தை வளைத்துப் பெருமழை பொழிகிறது.
- மேகம் வலமாய் எழுந்து, மலையைச் சூழ்ந்து பெருமழையைப் பொழிகிறது.
- முதிய பெண்கள் காவலுடைய ஊரப்பக்கம் சென்றனர்.
- வண்டுகள் ஆரவாரிக்கும் நறுமண மலர்கள்.
- நாழியில் நெல்லையும், முல்லை மலர்களையும் தெய்வத்தின் முன் தூவினர்.
- தலைவிக்காத் தொழுது நின்றனர்.
- இளங்கன்று பசியால் வாடிக் கொண்டிருந்தது.
- அதனை ஓர் இடைமகள் கண்டாள்.
- உன் தாய்மார், எம் இடையர் ஓட்டிவர இப்போது வந்துவிடுவர் வருந்தாதே, என்றாள்.
- இது நல்ல சொல் எனக் கொண்டு தலைவியிடம் 'நாங்கள் நற்சொல் கேட்டோம்' என்றனர்.
- துலைவன் திரைப்பொருளோடு வருவான்.
- வருந்தாதே என்று கூறினர்.

2. **புயலிலே ஒரு தோணி** கதையில் இடம்பெற்றுள்ள **வருணனைகளும் அடுக்குத் தொடர்களும்** ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?

**தோணி படும் பாடு :**

- மேகம் திரண்டு இருண்டது.
- அலைகள் எண்ணெய் பூசியவை போல் மொழுமொழுவென நெளிந்தன.
- கிடுகிடுக்கும் இடிமுழக்கம்.
- மின்னல் கீற்றுகள் வானைப் பிளந்தன.
- தொங்கானில் நடப்பன கிடப்பனவற்றை உலுக்கியது.
- அச்சம் சூழ்ந்து கொண்டது.
- மழையும் காற்றும் கூடிக்கலந்து கெக்கலித்தன.
- தொங்கான் அப்படியும் இப்படியும் குதித்தது.

Padasalai.Net

- எலும்புகள் நொறுநொறுவென நொறுங்கல் ஒலி.
- மீண்டும் வானம் பிளந்து தீக்கக்கியது. கடலும் காற்றும் மழையும் வெறிக் கூத்தாடின.
- நொய்ங் புய்ங், நொய்ங் புய்ங் - சீனப் பிசாசுகளின் ஒலிகள்.
- இரவு பகலாகி, பகல் இரவாகி ஐந்தாம் நாள் ஆனது.
- கடல் கூத்து முடிந்திருந்தது.
- கரை! கரை! கரை! -

3. **மலர்ந்தும் மலராத பாதிமலர் போல்**
**வளரும் விழி வண்ணமே – வந்து**
**விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக**
**விளைந்த கலை அன்னமே**
**நதியில் விளையாடி கொடியில் தலைசீவி**
**நடந்த இளந் தென்றலே – வளர்**
**பொதிகை மலைதோன்றி மதுரை நகர் கண்டு**
**பொலிந்த தமிழ் மன்றமே**

- கவிஞர் கண்ணதாசனின் இப்பாடலில் **தவழும் காற்றையும் கவிதை நயத்தையும்** பாராட்டி உரைசெய்க.

**அனைவருக்கும் வணக்கம்!**

இப்பாடலில் தமிழின் சிறப்புகள் பாடப் பட்டுள்ளன.

" மலர்ந்தும் மலராத பாதிமலர் போல்
வளரும் விழி வண்ணமே -"

ஒரு மொட்டானது மெதுமெதுவாகவே விரிந்து மலராகும். அதுபோல பிறந்த ஒரு குழந்தையின் கண்களும் மெதுமெதுவாக விரிந்து வளரும். இவ்வாறு விரிந்து வளரும் தன்மை கொண்டதே தமிழ் என்பதை அழகாகக் கூறியுள்ளார்.

"விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக
விளைந்த கலை அன்னமே"

இருள் அகலப் போகிறது என்பதை உணர்த்துவதே விடிந்தும் விடியாத காலைப் பொழுது. அத்தகைய காலைப் பொழுதாகக் கிடைத்த தமிழை கலை அன்னமாகக் கூறுகிறார்.

" நதியில் விளையாடி கொடியில் தலைசீவி
நடந்த இளந் தென்றலே"

இளந்தென்றல் நதியை வருடி வந்தால் குளிர்ச்சியாகவும், கொடிகளை வருடி வந்தால் உயிர்க் காற்றும், நல்ல மணமும் கொண்டதாக இருக்கும். இத்தகைய இளந்தென்றலாக இருப்பவள் தமிழென்று கூறுகிறார்.

"பொதிகை மலைதோன்றி மதுரை நகர் கண்டு
பொலிந்த தமிழ் மன்றமே"

அகத்தியமாக பொதிகைமலையில் தோன்றி, மதுரையில் தமிழ்ச் சங்கம் கண்டு வளர்ந்த தமிழை சிறந்த தமிழ் மன்றமாகக் கூறுகிறார்.

மலர்ந்தும் X மலராத / விடிந்தும் X விடியாத என்ற முரண் சொற்களும் விழி வண்ணமே, கலை அன்னமே, இளந்தென்றலே, தமிழ் மன்றமே என்ற சந்த நயம் கொண்ட இயைபுச் சொற்களும் மலர்ந்த, விடிந்த, விளைந்த, நடந்த, பொலிந்த போன்ற ஓசை நயம் கொண்ட சொற்களும், கற்பனை நயங்களும் பாடலுக்கு அழகு சேர்த்துள்ளன.

Padasalai.Net

## மொழியை ஆள்வோம்!

**2. சொற்களில் மறைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க.**

(இன்சொல், எழுகதிர், கீரிபாம்பு, பூங்குழல் வந்தாள், மலை வாழ்வார், முத்துப்பல்)

எ.கா : இன்சொல் - பண்புத்தொகை

தொடர் - இனிமையான சொல் கூறுதல் சான்றோர்க்கு அழகு.

1. எழுகதிர் - வினைத்தொகை.

தொடர் - காலையில் எழுகின்ற கதிர் காட்சிக்கு அழகு.

2. பூங்குழல் வந்தாள் - அன்மொழித் தொகை.

தொடர் - பூச்சூடிய குழலை உடைய பெண் வந்தாள்

3. கீரிபாம்பு - உம்மைத் தொகை.

தொடர் - கீரியும் பாம்பும் ஒன்றுக்கொன்று பகை விலங்குகள்.

4. மலை வாழைவார் - ஏழாம் வேற்றுமைத் தொகை.

தொடர் - முனிவர்கள் மலையின் கண் வாழ்வார்.

5. முத்துப்பல் - உவமைத் தொகை.

தொடர் - முத்துப் போன்ற பல் முகத்திற்கு அழகு.

**3. செய்திகளைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

பூக்களைப் பற்றிய அரிய இலக்கியச் செய்திகள்.

பூ உண்டு. ஆனால் கண்ணிற்குக் காட்சி தராமல் காண்டற்கு அரியனவாய் இருக்கும் மலர்கள் : ஆல மலர் : பலா மலர்.

மலர் உண்டு : பெயரும் உண்டு : ஆனால் இதுதான் அது என்று உறுதியாக அறிய இயலாதுள்ள நிலையில் இருக்கும் மலர்கள் : சுள்ளி மலர், பாங்கர் மலர்.

அகவிதழ் முதலிய உறுப்புகள் இருந்து அவை புறத்தே காட்சிப்படாமல் உள்ளேயே பொதிந்திருக்கும் மலர்கள்: அத்தி, ஆலம், கொழிஞ்சி, பலா.

பயன்பாடு, நாற்றம், மக்களது விருப்பில் இடம் பெறாமை, பொதுவில் ஒதுக்கப்பட்டமை கொண்டு மலரில் சில எளியவை ஆகின்றன. அவையாவன: நெருஞ்சி, எருக்கு, பூளை, குரீஇப் பூளை, வேளை, ஊமத்தம், கள்ளி, முருங்கை. இலுப்பைப் பூக்கள் இனிப்பானவை. கரடிகள் மரத்தின் மீதேறி அவற்றைப் பறித்து உண்ணும். பாதிரிப் பூ குடிநீருக்குத் தன் மணத்தை ஏற்றும். மூங்கில் பூவில் காய் தோன்றிக் கனியாகி அதிலிருந்து ஒருவகை அரிசி தோன்றும். இது மூங்கில் அரிசி எனப்படும்.

1. மலர் உண்டு : பெயரும் உண்டு - இரண்டு தொடர்களையும் ஒரு தொடராக்குக. மலரும் பெயரும் உண்டு.
2. அரும்பாகி மொட்டாகிப் பூவாகி.... என்பதை ஒத்து அமைந்துள்ள தொடரைக் கண்டறிக.

   மூங்கில் பூவில் காய் தோன்றிக் கனியாகி அதிலிருந்து ஒருவகை அரிசி தோன்றும்.
3. நீங்கள் அறிந்த இரு பூக்களின் பெயர்களையும் பயன்களையும் எழுதுக.

   முருங்கை – சக்தி நிறைந்தது.

   தும்பை – மருத்துவ பயன் நிறைந்தது.
4. அரிய மலர் - இலக்கணக் குறிப்புத் தருக. குறிப்புநிலைப் பெயரெச்சம்
5. தொடரில் பொருந்தாப் பொருள்தரும் மயங்கொலி எழுத்துகளைத் திருத்துக. இலுப்பைப் பூக்கள் இனிப்பானவை. கரடிகள் மறத்தின் மீதேறி அவற்றைப் பரித்து உண்ணும். பாதிரிப் பூ குடிநீருக்குத் தன் மனத்தை ஏற்றும்.

இலுப்பைப் பூக்கள் இனிப்பானவை. கரடிகள் மரத்தின் மீதேறி அவற்றைப் பறித்து உண்ணும். பாதிரிப் பூ குடிநீருக்குத் தன் மணத்தை ஏற்றும்.

**4. வாழ்த்து மடல்.**

மாநில அளவில் நடைபெற்ற "மரம் இயற்கையின் வரம்" எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்றத் தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

வடக்குத் தெரு,
அஅஅஅ,
09.06.2023.

அன்புத் தோழனே! ராகவா!

நான் இங்கு நலம். அங்கு உன்நலம், மற்றும் அனைவர் நலனும் அறிய ஆவல்.

மாநில அளவில் நடைபெற்ற மரம் இயற்கையின் வரம் என்னும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்றதை அறிந்தேன். மிக்க மகிழ்ச்சி எனது வாழ்த்துகள். நீ மேலும் மேலும் வளர வாழ்த்துகள்.

அஅஅஅ,
09.06.2023.

என்றும் அன்புடன்,
ம. செல்வன்.

**உறைமேல் முகவரி :**

கா. ராகவன்,
வடக்கு ரத வீதி,
மதுரை.

**5. பாரதியின் வசனநடை – சிட்டுக்குருவி**

சிறியதானியம் போன்ற மூக்கு: சின்னக்கண்கள்: சின்னத்தலை: வெள்ளைக் கழுத்து: அழகிய மங்கல் வெண்மை நிறமுடைய பட்டுப்போர்த்த வயிறு. கருமையும் வெண்மையும் கலந்த சாம்பல் நிறத்தாலாகிய பட்டுப்போர்த்த முதுகு: சிறிய தோகை: துளித்துளிக் கால்கள்: இத்தனையும் சேர்த்து ஒரு பச்சைக் குழந்தையின் கைப்பிடியிலே பிடித்து விடலாம். இவ்விதமான உடலைச் சுமந்து கொண்டு என் வீட்டிலே இரண்டு உயிர்கள் வாழ்கின்றன, அவற்றில் ஒன்று ஆண் மற்றொன்று பெண்.

- இது போன்று உங்களுக்குப் பிடித்த ஏதேனும் ஒன்றைப் பற்றி வசனநடையில் எழுதுக.

**வசன நடை – அணில்**

சிறிய மூக்கு. அழகான கண்கள். உருண்டையான தலை, வெள்ளைக் கழுத்து, மங்கல் நிறமுடைய பட்டுப் போர்த்த வயிறு, கருமையும், வெண்மையும் கலந்த பட்டுப் போர்த்த முதுகு, முதுகில் மூன்று கோடுகள், மெத்து மெத்துக் கால்கள், அழகான வால், கீச் கீச் என்ற சத்தம் இத்தனையும் சேர்த்து ஒரு பச்சைக் குழந்தையின் கைப்பிடியிலே பிடித்து விடலாம். இவ்விதமான உடலைச் சுமந்து கொண்டு என்வீட்டுத் தோட்டத்திலே இரண்டு அணில்கள் வாழ்கின்றன. அவற்றில் ஒன்று ஆண், மற்றொன்று பெண்.

## மொழியோடு விளையாடு

**1. சொல்லைக் கண்டுபிடித்துப் புதிரை விடுவிக்க.**

(காடு, புதுமை, விண்மீன், காற்று, நறுமணம்)

1. முதல் இரண்டை நீக்கினாலும் வாசனை தரும்; நீக்காவிட்டாலும் வாசனை தரும். நறுமணம்.
2. பழமைக்கு எதிரானது – எழுதுகோலில் பயன்படும். புதுமை.
3. இருக்கும்போது உருவமில்லை - இல்லாமல் உயிரினம் இல்லை. காற்று.
4. நாலெழுத்தில் கண் சிமிட்டும் - கடையிரண்டில் நீந்திச் செல்லும். விண்மீன்.

Padasalai.Net

5. ஓரெழுத்தில் சோலை - இரண்டெழுத்தில் வனம். காடு.

**2. நயமிகு தொடர்களைப் படித்து ஏற்ற தலைப்புகளை எடுத்தெழுதுக.**

(வனத்தின் நடனம், மிதக்கும் வாசம், காற்றின் பாடல், மொட்டின் வருகை, உயிர்ப்பின் ஏக்கம், நீரின் சிலிர்ப்பு)

எ.கா: கொளுத்தும் வெயில் சட்டெனத் தணிந்தது: வானம் இருண்டது: வாடைக் காற்று வீசியது. காற்றின் பாடல்.

1. புவி சிலிர்த்து, மண்ணிலிருந்து சின்னஞ்சிறு மொட்டு முகிழ்த்தது: அச்செடியை வரவேற்கும் விதமாகப் பக்கத்துச் செடிகள் தலையாட்டி மகிழ்கின்றன. மொட்டின் வருகை.
2. சோலைக்குள் சத்தமில்லாமல் வீசியது தென்றல்; பூக்கள் அதன் வருகையை உணர்ந்து நறுமணத்துடன் வரவேற்கின்றன. பூவாசம் கலந்த தென்றலில் வண்டுகள் மிதந்து சென்று மலர்களில் அமர்கின்றன. மிதக்கும் வாசம்.
3. இரவின் இருளமைதியில் இரைச்சலாய்ச் சில சுவர்க்கோழிகள், வறண்ட வானத்தின் இருண்ட புழுக்கம்: மழைக்கு ஏங்கும் புவி வெப்பப் பெருமூச்சு விடும்: கசகசத்த உயிரினங்கள். ஊயிர்ப்பின் ஏக்கம்.
4. நின்றுவிட்ட மழை தரும் குளிர்: சொட்டுச் சொட்டாக விளிம்புகளிலிருந்தும் மரங்களிலிருந்தும் விழும் மழைநீர்பட்டுச் சிலிர்க்கும் உயிரினம். நீரின் சிலிர்ப்பு.
5. குயில்களின் கூவலிசை. புள்ளினங்களின் மேய்ச்சலும் பாய்ச்சலும். இலைகளின் அசைவுகள், சூறைக்காற்றின் ஆலோலம். வானத்தின் நடனம்.

**அகராதியில் காண்க.**

1. அகன்சுடர் - கதிரவன், சூரியன்.
2. ஆர்கலி - கடல்.
3. கட்புள் - ஆந்தை. (கண் விழித்திருக்கும் பறவை)
4. கொடுவாய் - வளைந்தவாய்.
5. திருவில் - வானவில்.

**3. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**

மரங்களை நடுவோம்!
மாசற்ற காற்றைப் பெறுவோம்!
காற்று மாசைத் தடுப்போம்!
நோயற்ற வாழ்வைப் பெறுவோம்!
இயற்கை வளத்தைக் காப்போம்!
நல்ல காற்றை சுவாசிப்போம்!

**நிற்க அதற்கு தக.**

- வானொலியின் அறிவிப்பைப் பின்பற்றுவேன்.
- தேவையான உணவுப் பொருட்களை வாங்கி வைப்பேன்.
- தேவையான குடிநீரை எடுத்து வைப்பேன்.
- தேவையான முதலுதவிப் பொருட்களை எடுத்து வைப்பேன்.
- மின்சாதனங்களை உபயோகப் படுத்த மாட்டேன்.

**5. கலைச்சொல் அறிவோம்:**

| | | | |
|---|---|---|---|
| Storm | - புயல் | Land Breeze | - நிலக்காற்று |
| Tornado | - சூறாவளி | Sea Breeze | - கடற்காற்று |
| Tempest | - பெருங்காற்று | Whirlwind | - சுழல்காற்று |

**6. அறிவை விரிவு செய்.**

குயில்பாட்டு - பாரதியார்
அதோ அந்தப் பறவை போல - ச. முகமது அலி
உலகின் மிகச் சிறிய தவளை - எஸ். ராமகிருஷ்ணன்

**7. சொல்லும் பொருளும் :**

| | | | |
|---|---|---|---|
| மயலுறுத்து | - மயங்கச்செய் | விரிச்சி | - நற்சொல் |
| ப்ராணரஸம் | - உயிர்வளி | சுவல் | - தோள் |
| லயத்துடன் | - சீராக | மாஅல் | - திருமால் |
| நனந்தலை உலகம் | - அகன்ற உலகம் | பெரும்பெயல் | - பெருமழை |
| நேமி | - சக்கரம் | கடி | - காவல் |
| கோடு | - மலை | ஆர்ப்ப | - ஒலிப்ப |
| கொடுஞ்செலவு | - விரைவாகச் செல்லுதல் | சிறுதாம்பு | - சிறுகயிறு |
| நறுவீ | - நறுமண மலர்கள் | | |
| தூஉய் | - தூவி | | |

**8. இலக்கணக் குறிப்பு :**

மூதூர் - பண்புத்தொகை
உறுதுயர் - வினைத்தொகை
கைதொழுது - மூன்றாம் வேற்றுமைத் தொகை
தடக்கை - உரிச்சொற்றொடர்

**9. பகுபத உறுப்பிலக்கணம் :**

பொறித்த – பொறி + த் + த் + அ
பொறி – பகுதி
த் - சந்தி
த் - இறந்தகால இடைநிலை
அ - பெயரெச்ச விகுதி

* * *

**இயல் 3** கூட்டாஞ்சோறு

**பலவுள் தெரிக.**

1. **பின்வனவற்றுள் முறையான தொடர் -**

அ) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு.
ஆ) தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு.
இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.
ஈ) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு.

**விடை** : இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.

2. **“சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி” என்னும் அடியில் பாக்கம் என்பது -**

அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்

**விடை** : ஈ) சிற்றூர்

3. **அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது-**

அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய் இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

Padasalai.Net

விடை : அ) வேற்றுமை உருபு

4. **காசிக்காண்டம் என்பது -**

அ) காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல். ஆ) காசி நகரத்தைக் குறிக்கும் மறுபெயர்.

இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல். ஈ) காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல்.

விடை : இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல்.

5. **"விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால், தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு" - இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை -**

அ) நிலத்திற்கேற்ற விருந்து. ஆ) இன்மையிலும் விருந்து.

இ) அல்லிலும் விருந்து. ஈ) உற்றாரின் விருந்து.

விடை : ஆ) இன்மையிலும் விருந்து.

## குறுவினா

1. **விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.**

- வாருங்கள்
- நலமா
- அமருங்கள்
- இளைப்பாறுங்கள்
- நீர் அருந்துங்கள்
- உணவு உண்ணுங்கள்
- அருகில் அமர்தல்
- பிடித்தவற்றைப் பேசுதல்
- ஏழு அடி நடந்து சென்று வழியனுப்புதல்.

2. **"தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த தினையை உரலில் இட்டுக் குற்றியெடுத்து விருந்தினருக்கு விருந்தளித்தாள் தலைவி"** என்பது இலக்கியச் செய்தி. விருந்தோம்பலுக்குச் செல்வம் மட்டுமெ இன்றியமையாத ஒன்றா? உங்கள் கருத்தைக் குறிப்பிடுக.

- விருந்தோம்பலுக்கு செல்வம் மட்டுமெ இன்றியமையாதது இல்லை.
- ஏதும் இல்லாத நிலையிலும் விருந்தினருக்கு விருந்தளிக்ளும் நல்ல மனம் போதும்.

3. **"எழுது என்றாள்"** என்பது விரைவு காரணமாக **"எழுது எழுது என்றாள்"** என அடுக்குத்தொடரானது. **"சிரித்துப் பேசினார்"** என்பது எவ்வாறு அடுக்குத் தொடராகும்?

- சிரித்து சிரித்துப் பேசினார் என்று அடுக்குத்தொடராகும்.

4. **"இறடிப் பொம்மல் பெறுகுவீர்"** - இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.

- "இறடிப்பொம்மல் பெறுகுவிர்" இத்தொடர் உணர்த்தும் பொருள் "தினைச் சோற்றை உணவாகப் பெறுவீர்கள்."

5. **பாரதியார் கவிஞர், நூலகம் சென்றார், அவர் யார்? ஆகிய தொடர்களில் எழுவாயுடன் தொடரும் பயனிலைகள் யாவை?**

- பாரதியார் கவிஞர் - பெயர்ப் பயனிலை.
- நூலகம் சென்றார் - வினைப் பயனிலை.
- அவர் யார்? - வினாப் பயனிலை.

## சிறுவினா

1. **கீழ்காணும் தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.**

- கண்ணே கண்ணுறங்கு! - விளித்தொடர்.
- காலையில் நீயெழும்பு! - வேற்றுமைத்தொடர்.

Padasalai.Net

- மாமழை பெய்கையிலே - உரிச்சொல் தொடர்.
- மாம்பூவே கண்ணுறங்கு! - விளித்தொடர்.
- பாடினேன் தாலாட்டு! - வினைமுற்றுத் தொடர்.
- ஆடி ஆடி ஓய்ந்துறங்கு - அடுக்குத் தொடர்.

2. முல்லை நிலத்திலிருந்தும் மருத நிலத்திலிருந்தும் கிடைக்கும் உணவுப் பொருள்கள் யாவை?

- முல்லை - வரகு, சாமை, கம்பு, சோளம், தினை, குதிரைவாலி.
- மருதம் - செந்நெல், வெண்ணெல், பயறு வகைகள், காய்கறிகள், கரும்பு.

3. புதிதாக வருவோர் இரவில் தங்குவதற்கு வீட்டின் முன்புறம் திண்ணையும் அதில் தலை வைக்கத் திண்டும் அமைத்தனர்.

திருவிழாக் காலங்களில் ஊருக்கு வரும் புதியவர்களையும் அழைத்து அன்போடு விருந்தளிப்பதைச் சிலஇடங்களில் காணமுடிகிறது.

இப்படியாகக் காலமாற்றம், தமிழர் விருந்தோம்பலில் ஏற்படுத்திய மாற்றங்கள் குறித்த கருத்துகளை எழுதுக.

**காலமாற்றம், தமிழர் விருந்தோம்பலில் ஏற்படுத்திய மாற்றங்கள் :**

அன்று வீட்டின் முன்புறம் திண்ணையும் அதில் தலை வைக்கத் திண்டும் அமைத்தனர், நம் முன்னோர்கள். இன்று வீட்டின் முன்புறம் தின்னையும் அதில் தலை வைக்கத் திண்டும் அமைக்க அஞ்சுகின்றனர்.

அன்று திருவிழாக் காலங்களில் ஊருக்கு வரும் புதியவர்களையும் அழைத்து அன்போடு விருந்தளிப்பதை வழக்கமாகக் காணமுடிந்தது. இன்று திருவிழாக் காலங்களில் ஊருக்கு வரும் புதியவர்களையும் அழைத்து அன்போடு விருந்தளிப்பதை சிலஇடங்களில் தான் காணமுடிகிறது.

4. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

**கூத்தரைக் கூத்தர் ஆற்றுப்படுத்துதல் :**

- பகலில் இளைப்பாறி இரவில் சேர்ந்து தங்குங்கள்.
- பூங்கொத்துகளைச் சுற்றத்தோடு சூடிக் கொள்ளுங்கள்.
- அசோக மரங்களை உடைய பாதையில் செல்லுங்கள்.
- அசையும் மூங்கில்கள் ஓசை எழுப்பும் கடினப் பாதையில் சென்று அங்கு உள்ள சிற்றூரை அடையுங்கள்.
- அங்குள்ளவர்களிடம், நன்னனின் கூத்தர்கள் என்று சொல்லுங்கள்.
- அதன் பிறகு உங்கள் வீட்டிற்குள் போவது போலவே அவர்களின் வீட்டுக்குள் உரிமையுடன் செல்லுங்கள்.
- உறவினர் போலவே உங்களுடன் பழகுவர்.
- இனிய சொற்களைக் கூறுவர்.
- களைப்பைப் போக்குவர்.
- நெய்யில் வெந்த மாமிசப் பொரியலையும் தினைச் சோற்றையும் உணவாகப் பெறுவீர்கள்.

**நெடுவினா.**

1. ஆற்றுப்படுதல் என்பது அன்றைக்குப் புலவர்களையும் கலைஞர்களையும் வள்ளல்களை நோக்கி நெறிப்படுத்துவதாக இருந்தது. அது இன்றைய நிலையில் ஒரு வழிகாட்டுதலாக மாறியிருப்பதை விளக்குக.

**ஆற்றுப் படுத்துதல் :**

ஆற்றுப்படுத்தும் கூத்தர், வள்ளலை நாடி எதிர்வரும் கூத்தனை அழைத்து, யாம் இவ்விடத்தே சென்று இன்னவெல்லாம் பெற்று வருகின்றோம், நீயும் அந்த வள்ளலிடம் சென்று வளம் பெற்று வாழ்வாயாக என்று கூறுதல் ஆற்றுப்படை ஆகும்.

Padasalai.Net

இவ்வாறு ஆற்றுப்படுத்துதல் என்பது பொருள் பெறுவதன் பொருட்டே மட்டும் அமைந்திருந்தது.

**வழிகாட்டுதல் :**

வழிகாட்டுதல் என்பது ஆற்றுப்படுத்தல் போல பொருள் பெற மட்டும் நிகழ்வதல்ல. எல்லா நிலைகளிலும் வழிகாட்டுதல்கள் நிகழ்கின்றன.

**கல்வி வழிகாட்டல் :**

மேல்நிலை வகுப்புகளிலும், அதன் பின் என்னென்ன பிரிவுகள் எடுத்துப் படித்தால் என்னென்ன வேலைகளுக்குச் செல்லலாம் என்ற வழிகாட்டுதல்கள் ஆசிரியர்கள் மூலமும், கற்றோர்கள் மூலமும் நடந்து கொண்டுதான் இருக்கின்றன.

**நலத்திட்ட வழிகாட்டல் :**

அரசு மக்களுக்காக அறிமுகம் செய்துள்ள நலத்திட்டங்கள் பற்றி எடுத்துக்கூறி நலத்திட்ட உதவிகளை சரியாகப் பெறுவதற்கான வழிகாட்டுதல்களும் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

**பெண்களுக்கான.வழிகாட்டல் :**

பெண்கள் சமுதாயத்தில் எவ்வித அச்சமும் இன்றி தங்கள் பணியினையும், கடமைகளையும், உரிமைகளையும், பெறுவதற்கான வழிகாட்டுதல்களும் கற்றோராலும், பெற்றோராலும் வழங்கப்பட்டுதான் வருகிறது.

இதுபோல இன்றும் மருத்துவம், விவசாயம், குழந்தைகள், சுற்றுச்சூழல், ஆரோக்கிய வாழ்வு, சாலை விதிகள், என்று அத்தனை நிலைகளிலும் வழிகாட்டுதல்கள் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கினறன.

**முடிவுரை :**

வழிகாட்டுதல் என்பது பிறரால் மட்டுமல்ல நம்மாலும் நடைபெறவேண்டும். நாமும் நம்மால் ஆன வழிகாட்டுதல்களைப் பிறருக்குச் செய்ய வேண்டும்.

**2. அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.**

**அன்னமய்யா கதை :**

- யாரோ ஒரு சன்னியாசியைக் கூட்டிக்கொண்டு அன்னமய்யா தூரத்தில் வந்தார்.
- கிட்டே வந்து பார்த்தால் அவன் ஒரு வாலிபன்.
- குடிக்கத் தண்ணீர் வேண்டும் என்றான்.
- ஒரு வேப்பமரத்தின் அடியில் ஏகப்பட்ட மண்கலயங்கள்.
- அன்னமய்யா ஒரு கலயத்தின் மேல் வைக்கப்பட்ட கல்லை அகற்றினான்.
- சிரட்டையை எடுத்துச் சுத்தப் படுத்தினான்.
- நீத்துப்பாகத்தை அவனிடம் நீட்டினான்.
- உறிஞ்சும் போது கண்கள் சொருகின.
- சோற்றின் மகுளியையும் வார்த்துக் கொடுத்தான்.
- அனுபவிப்பின் குரல் அவனிடமிருந்து வந்தது.
- வேப்பமரத்து அடியில் அயர்ந்து தூங்கினான்.
- வந்தவனுக்கு ஒரு நிறைவு.
- கொடுத்தவனுக்கும் ஒரு நிறைவு.

**3. உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.**

**எங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நாங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்தல் :**

**வரவேற்பு :**

ஒரு நாள் எங்கள் சித்தி – சித்தப்பா குடும்பம் எங்கள் வீட்டிற்கு வந்திருந்தனர். அவர்கள் வந்ததும் முகமலர்ச்சியோடு வரவேற்று வீட்டினுள் அழைத்துச் சென்றோம்.

Padasalai.Net

**இன்சொல் கூறுதல் :**

சித்தி வீட்டாரை வீட்டினுள் அமரச் செய்தோம். அருந்துவதற்கு நீர், கொடுத்தோம். நலம் விசாரித்தோம். இளைப்பாறச் செய்தோம். அவர்கள் விரும்பும் வண்ணம் பேசிக் கொண்டே இருந்தோம்.

**உபசரிப்பு :**

சித்தி வீட்டாருக்கு காலை, மதிய, இரவு உணவுகள் அளித்தோம். விதவிதமாகச் செய்தோம். ஆசைஆசையாய்ப் பரிமாறினோம். பேசிபேசி உணவுண்டோம். காலை, மாலை சிற்றுண்டி நேரமும் இதுபோலவே இருந்தது. மாலை நேரங்களில் பொழுதுபோக்கும் இடங்களுக்குச் சென்று வந்தோம். புதுப்புதுப் பொருட்கள் வாங்கிப் பகிர்ந்து கொண்டோம்.

**வழியனுப்புதல் :**

சித்தி வீட்டார் ஊருக்குப் புறப்பட்ட போது நாங்கள் பிரிய மனமில்லாமல் இருந்தோம். வாசல் வரையிலும் வந்து வழியனுப்பினோம்.

## மொழியை ஆள்வோம்

**பழமொழிகளை நிறைவு செய்க.**

1. உப்பில்லாப் பண்டம் குப்பையிலே.
2. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்.
3. உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
4. விருந்தும் மருந்தும் மூன்றே நாள்.
5. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.

**பத்தியைப் படித்துக் கருத்தைச் சுருக்கி எழுதுக.**

பழையசோறு

நெல்லை அவித்து, காய்ந்து, குத்திய அந்தப் புழுங்கல் அரிசிச்சோறு இரவு முழுவதும் நீரில் ஊறும். விடிந்த இந்தக் காலையில் அதன் பெயர் பழைய சோறு அல்லது பழையது.

பழையசோறு – அது கிராமத்தின் உன்னதம்.

**கதையாக்குக.**

**மனித வாழ்வில் ஒவ்வொருவரும் நாளும் நாளும் புதுப்புது மனிதர்களைப் பார்க்கிறோம்: புதுப்புதுச் செய்திகள் கிட்டும்! கிட்டுகிற கருப்பொருள்களைத் திரட்டி, கற்பனை நயம் கூட்டிக் கதையாக்குவது ஒரு கலை. அது சிறுகதையாக இருக்கலாம். புதினமாக இருக்கலாம். அன்பை எதிர்பார்த்திருப்பவராக, யாருமற்றவராக....இருக்கும் ஒருவர் உங்களின் உதவியால் மனம் மகிழ்ந்த நிகழ்வினைக் கதையாக்குக.**

**கதை:**

ஒருநாள் சாலையோரத்தில் ஒரு சிறுவன் அழுதுகொண்டிருந்தான் அவனிடம் பேசினேன். அவனது பெற்றோரும், அக்காவும் விபத்தில் இறந்துவிட்டதாகவும், தன்னைக் கவனிக்க வேறு யாரும் இல்லையென்றும் அழுது கொண்டே கூறினான்.

அவனை என் பெற்றோரிடம் அழைத்துச் சென்றேன். அனைத்தையும் கூறினேன். என் பெற்றோரும் அவன்மீது இரக்கம் கொண்டு எங்களில் ஒருவனாக சேர்த்துக் கொண்டனர். நான் படிக்கும் பள்ளியிலேயே அவனையும் சேர்த்தனர். நானும் அவனும் ஒன்றாகவே பள்ளிக்குச் செல்கிறோம். ஒன்றாகவேப் படிக்கின்றோம், ஒன்றாகவே விளையாடுகின்றோம், ஒன்றாகவே தூங்குகின்றோம். அவன் மகிழ்ச்சியாக இருப்பதைக் கண்டு நானும் மகிழ்ந்துள்ளேன். ஒருநாள் அவன் என்னிடம் "நான் இவ்வளவு மகிழ்ச்சியாக இருப்பதற்கு நீதான் காரணம்" என்றான். அதைக்கேட்டு நான் மிகவும் மகிழ்ந்தேன்.

**கடிதம் எழுதுக.**

**உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலைகூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.**

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

அனுப்புநர்

அஅஅ,

20, ஆஆஆ ஊர்,

இஇஇ மாவட்டம்.

பெறுநர்

உயர்திரு உணவுப் பாதுகாப்பு ஆணையர் அவர்கள்,

உணவுப் பாதுகாப்பு ஆணையம்,

இஇஇ மாவட்டம்.

ஐயா,

பொருள் : **உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து.**

இஇஇ மாவட்டத்தில் ஒரு குறிப்பிட்ட உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும், விலை கூடுதலாகவும் இருந்தது.

எனவே அந்த குறிப்பிட்ட உணவு விடுதியின் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி பணிந்து வேண்டுகிறேன்.

அதற்குரிய சான்றுகளை இத்துடன் இணைத்து அனுப்பியுள்ளேன்.

ஆஆஆ ஊர், இப்படிக்கு

26.08.2024 தங்கள் உண்மையுள்ள,

**அஅஅ.**

**உறைமேல் முகவரி**

பெறுநர்

உயர்திரு உணவுப் பாதுகாப்பு ஆணையர்,

உணவுப் பாதுகாப்பு ஆணையம்,

இஇஇ மாவட்டம்.

நயம் பாராட்டுக

**"கத்துகடல் சூழ்நாகைக் காத்தான்தன் சத்திரத்தில்**
**அத்தமிக்கும் போது அரிசிவரும் - குத்தி**
**உலையிலிட ஊரடங்கும் ஓர்அகப்பை அன்னம்**
**இலையிலிட வெள்ளி எழும்."**

**- காளமேகப் புலவர்**

திரண்ட கருத்து :

உழுது பாதுகாத்த நெற்கதிரை அறுவடை செய்து உரலில் இட்டுக் குத்தி உலையில் இடும்போது ஊர் அடங்கும். சமைத்த அன்னத்தை இலையில் பரிமாறும்போது பசி அடங்கும். உழைத்த மக்களின் மனம் மகிழ்ச்சியடையும்.

மையக் கருத்து :

உழைப்பின் சிறப்பும், உணவின் சிறப்பும் அழகாகச் சொல்லப் பட்டுள்ளது.

மோனைத் தொடை :

**சீர்தோறும், அடிதோறும் முதல் எழுத்து ஒன்றி வரும்.**

| | | |
|---|---|---|
| கத்துகடல் | - காத்தான் | - சீர்மோனை |
| அத்தமிக்கும் | - அரிசிவரும் | - சீர்மோனை |
| உலையிட | - ஊரடங்கும் | - சீர்மோனை |

எதுகைத் தொடை :

**அடிதோறும், சீர்கள்தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வரும்.**

கத்துகடல் - காத்தான் - அடி எதுகை

உலையிலிட - இலையிலிட - அடி எதுகை

இயைபுத் தொடை :

**அடிதோறும் இறுதி எழுத்தோ! அசையோ ஒன்றி வரும்.**

அன்னம் - எழும்

முரண் தொடை : அடங்கும் × எழும்

அணி நயம் : இப்பாடலில் இரட்டுற மொழிதல் அணி பயின்று வந்துள்ளது.

## மொழியோடு விளையாடு

**விடுபட்ட எழுத்துகளை நிரப்புக. - ஒளிந்துள்ள நூலைக் காண்க.**

1. இறகு (பறவையிடம் இருப்பது)
2. குருதி (சிவப்பு நிறத்தில் இருக்கும்)
3. வாள் (மன்னரிடம் இருப்பது)
4. அக்கா (தங்கைக்கு மூத்தவள்)
5. மதி (அறிவின் மறுபெயர்)
6. படகு (நீரில் செல்வது)

ஒளிந்துள்ள நூல் **திருக்குறள்.**

**இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**

சிலை – சீலை, தொடு – தோடு, மடு – மாடு, மலை – மாலை, வளி – வாளி, விடு – வீடு.

**எ.கா : சிலையைத் திரைச்சீலையால் மறைத்திருக்கிறார்கள்.**

1. அம்மன் சிலைக்குப் பட்டுச் சீலை கட்டினர்.
2. என் காதைத் தொடும் தோடு அழகானது.
3. ஆற்றங்கரை மடுவில் மாடு தண்ணீர்க் குடித்தது.
4. மலைக் கோவிலுக்கு மாலையில் சென்றேன்.
5. வளியின் வேகத்தில் வாளி கீழே விழுந்தது.
6. கோபத்தை விடும் போது வீடு இன்பமாகும்.

**அகராதியில் கண்டு பொருள் எழுதுக.**

**அ) ஊண், ஊன் ஆ) திணை, தினை இ) அண்ணம், அன்னம் ஈ) வெல்லம், வெள்ளம்.**

அ) ஊண் - உணவு. (சோறு)

ஊன் - இறைச்சி.

ஆ) திணை - ஒழுக்கம்.

தினை - சிறு தானியம்.

இ) அண்ணம் - மேல்வாய்.

அன்னம் - உணவு, ஒரு பறவை.

ஈ) வெல்லம் - இனிப்பு.

வெள்ளம் - மிகுதியான நீர்.

**காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**

பகிர்ந்து உண்டால்

பலன் உண்டு

பசிவந்தால்

Padasalai.Net

பத்தும் பறந்திடும்
உயிர்களின் பசியைப்
போக்குவதே அறமாகும்
எல்லா உயிர்களுக்கும்
பசி என்பது ஒன்றே.
எல்லா உயிர்களும்
நம் நண்பர்களே.

**கலைச்சொல் அறிவோம்.**

| | | |
|---|---|---|
| செவ்விலக்கியம் | - | Classical literature. |
| காப்பிய இலக்கியம் | - | Epic literature. |
| பக்தி இலக்கியம் | - | Devotional literature. |
| பண்டைய இலக்கியம் | - | Ancient literature. |
| வட்டார இலக்கியம் | - | Regional literature. |
| நாட்டுப்புற இலக்கியம் | - | Folk literature. |
| நவீன இலக்கியம் | - | Modern literature. |

**நிற்க அதற்குத் தக :**

பாரம்பரிய உணவை விட்டுச் செல்லும் குழந்தைகளுக்கான அறிவுரை.

- குழந்தைகளுக்குப் பாரம்பரிய உணவின் நன்மைகளைக் கூற வேண்டும்.
- பாரம்பரிய உணவுகளைப் பழக்கத்திற்குக் கொண்டு வர வேண்டும்.
- இயற்கை உணவின் நன்மைகளைக் கூற வேண்டும்.
- கீரை, கிழங்குகளின் நன்மைகளைக் கூற வேண்டும்.
- இயற்கை அல்லாதவற்றின் தீமைகளையும் கூற வேண்டும்.

**அறிவை விரிவு செய்.**

திருக்குறள் தெளிவுரை - வ.உ.சிதம்பரனார்.
சிறுவர் நாடோடிக் கதைகள் - கி. ராஜநாராயணன்.
ஆறாம் திணை - மருத்துவர் கு. சிவராமன்.

## திருக்குறள்

**குறுவினா**

1. **"நச்சப் படாதவன்"** செல்வம் - இத்தொடரில் வண்ணமிட்ட சொல்லுக்குப் பொருள் தருக.
   நச்சப்படாதவன் - பிறருக்கு உதவி செய்யாததால் ஒருவராலும் விரும்பப்படாதவன்.
2. **கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கி**
   கோடிஉண் டாயினும் இல் - இக்குறளில் வரும் அளபெடைகளை எடுத்து எழுதுக.
   கொடுப்பதூஉம், துய்ப்பதூஉம் - இன்னிசை அளபெடை.
3. **பொருளுக்கேற்ற அடியைப் பொருத்துக.**

| | |
|---|---|
| உயிரைவிடச் சிறப்பாகப் பேணிக் காக்கப்படும். | உயிரினும் ஓம்பப் படும். |
| ஊரின் நடுவில் நச்சுமரம் பழுத்தது போன்றது. | நடு ஊருள் நச்சு மரம் பழுத்தற்று. |
| ஒழுக்கத்தின் வழி உயர்வு அடைவர். | ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை. |

Padasalai.Net

4. **எய்துவர் எய்தாப் பழி** – இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்பாடு எது?

அ) கூவிளம் தேமா மலர் ஆ) கூவிளம் புளிமா நாள்

இ) தேமா புளிமா காசு ஈ) புளிமா தேமா பிறப்பு

**விடை** : அ) கூவிளம் தேமா மலர்

## சிறுவினா

1. **வேலொடு நின்றான் இடுஎன்றது போலும்**
**கோலொடு நின்றான் இரவு.** - குறளில் பயின்றுவரும் அணியை விளக்குக.

அணி : உவமை அணி.

விளக்கம் : உவமேயம், உவமை, உவம உருபு மூன்றும் வெளிப்படையாக அமைவது உவமை அணி

அணிப் பொருத்தம் :

**உவமேயம்** - கோலொடு நின்றான் இரவு.

**உவமை** - வேலொடு நின்றான் இடு.

**உவம உருபு** - போலும்.

2. **கவிதையைத் தொடர்க.**

தண்ணீர் நிறைந்த குளம்
தவித்தபடி வெளிநீட்டும் கை
கரையில் கைபேசி பட மெடுத்தபடி
துன்பத்தில் கை கொடுப்பதும்
கரை சேர்ப்பதும்
மறந்து விட்டது
இந்த மானிடர்க்கு, படமெடுப்பதும்
பகிர்ந்து கொள்வதுமே
பிடித்துப் போயிற்று
மனிதநேயம் மறந்து போயிற்று.

## சொல்லும் பொருளும்.

| | | | |
|---|---|---|---|
| அசைஇ | - இளைப்பாறி | கடும்பு | - சுற்றம் |
| ஆரி | - அருமை | வயிரியம் | - கூத்தர் |
| இறடி | - தினை | அல்கி | - தங்கி |
| நரலும் | - ஒலிக்கும் | படுகர் | - பள்ளம் |
| வேவை | - வெந்தது | பொம்மல் | - சோறு |
| அருகுற | - அருகில் | முகமன் | - விருந்தோம்பல் சொற்கள் |
| விழுப்பம் | - சிறப்பு | எய்துவர் | - அடைவர் |
| ஒட்ட | - பொருந்த | வெகுளி | - சினம் |
| மயக்கம் | - அறியாமை | தமராக | - உறவாக |
| இடிப்பாரை | - திருத்துபவர் | ஏமரா | - பாதுகாப்பில்லாத |
| கோலொடு | - செங்கோலோடு | நாடி | - ஆராய்ந்து |
| முறை | - நீதி | பண் | - இசை |
| இயைபு | - பொருத்தம் | கண்ணோட்டம் | - இரக்கம் |
| கருமம் | - தொழில் | நயத்தக்க | - விரும்பத்தக்க |
| அசாவாமை | - சோர்வடையாமை | தாளாண்மை | - கடும் முயற்சி |

Padasalai.Net

இன்மை - இல்லாமை (வறுமை) பொறி - உறுப்பு
ஊழை - விதி உப்பக்கம் - புறமுதுகு
தாளாது - தளராது

**இலக்கணக்குறிப்பு.**

நன்மொழி - பண்புத்தொகை
வியத்தல், நோக்கல்,
எழுதுதல், உரைத்தல், - தொழிற்பெயர்
செப்பல், இருத்தல்,
வழங்கல்

**பகுபத உறுப்பிலக்கணம்.**

**உரைத்த - உரை + த் + த் + அ**
உரை - பகுதி
த் - சந்தி
த் - இறந்த காலஇடைநிலை
அ - பெயரெச்ச விகுதி

**வருக - வா(வரு) + க**
வா - பகுதி
வரு எனத் திரிந்தது விகாரம்
க - வியங்கோள் வினைமுற்று விகுதி

* * *

**இயல் 4** **நான்காம் தமிழ்**

**பலவுள் தெரிக.**

1. **"உனதருளே பார்ப்பன் அடியேனே"** – யாரிடம் யார் கூறியது?

அ) குலசேகராழ்வாரிடம் இறைவன் ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்
இ) மருத்துவரிடம் நோயாளி ஈ) நோயாளியிடம் மருத்துவர்

**விடை** : ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்

2. தலைப்புக்கும் குறிப்புகளுக்கும் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.

**தலைப்பு : செயற்கை நுண்ணறிவு**

**குறிப்புகள் : கண்காணிப்புக் கருவி, அசைவு நிகழும் பக்கம் தன் பார்வையைத் திருப்புகிறது. திறன்பேசியில் உள்ள வரைப்படம் போக்குவரத்திற்குச் சுருக்கமான வழியைக் காண்பிப்பது.**

அ) தலைப்புக்குப் பொருத்தமான குறிப்புகள் இடம்பொற்றுள்ளன.
ஆ) குறிப்புகளுக்குத் தொடர்பில்லாத தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளன.
இ) தலைப்புக்குத் தொடர்பில்லாத குறிப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.
ஈ) குறிப்புகளுக்குப் பொருத்தமில்லாத தலைப்பு வழங்கப்பட்டுள்ளது.

**விடை** : அ) தலைப்புக்குப் பொருத்தமான குறிப்புகள் இடம்பொற்றுள்ளன.

3. பரிபாடல் அடியில் **"விசும்பும் இசையும்"** என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?

அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வானத்தையும் புகழையும்

இ) வானத்தையும் பூமியையும் ஈ) வானத்தையும் பேரொலியையும்

விடை : ஈ) வானத்தையும் பேரொலியையும்

4. **குலசேகர ஆழ்வார் "வித்துவக்கோட்டம்மா"** என்று ஆண் தெய்வத்தை அழைத்துப் பாடுகிறார். பூனையார் பால்சோற்றைக் கண்டதும் வருகிறார் ஆகிய தொடர்களில் இடம்பொற்றுள்ள வழுவமைதி முறையே -

அ) மரபு வழுவமைதி, திணை வழுவமைதி ஆ) இடவழுவமைதி, மரபு வழுவமைதி

இ) பால் வழுவமைதி, திணை வழுவமைதி ஈ) கால வழுவமைதி, இடவழுவமைதி

விடை : இ) பால் வழுவமைதி, திணை வழுவமைதி

5. **பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?**

அ) துலா ஆ) சீலா இ) குலா இ) குலா

விடை : ஈ) இலா

குறுவினா.

1. **வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.**

- செயற்கை நுண்ணறிவால் இயங்கும் விவசாயக் கருவிகள்.
- செயற்கை நுண்ணறிவால் இயங்கும் போக்குவரத்துக் கருவிகள்.

2. **வருகின்ற கோடை விடுமுறையில் காற்றாலை மின் உற்பத்தியை நேரில் காண்பதற்கு ஆரல்வாய்மொழிக்குச் செல்கிறேன் - இத்தொடர் கால வழுவமைதிக்கு எடுத்துக்காட்டாக அமைவது எவ்வாறு?**

- "செல்வேன்" - என அமைய வேண்டும்.
- செயலின் உறுதித்தன்மைக் காரணமாக "செல்கிறேன்" - என கால வழுவமைதி ஆனது.

3. **மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.**

- மருத்துவர் உடலை கத்தியால் அறுத்துச் சுட்டாலும் நோயாளி அவரை நம்புகிறார்.
- மருத்துவர் அன்போடு நோயாளியைக் குணப்படுத்துகிறார்.

4. **உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையெனப் பரிபாடல்வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக.**

- நீர் - தொடர்ந்து பெய்த மழை.
- காற்று - சுழன்று வீசிய காற்று.
- நெருப்பு - நெருப்புப் பந்தானது பூமி.
- வானம் - வானத்தில் கரு வளர்ந்தது.
- நிலம் - உயிர்கள் வாழும்படியான நிலம் தோன்றியது.

5. **"சீசர் எப்போதும் என் சொல்பேச்சைக் கேட்பான். புதியவர்களைப் பார்த்துக் கத்துவானே தவிர கடிக்க மாட்டான்" என்று இளமாறன் தன்னுடைய வளர்ப்பு நாயைப் பற்றிப் பெருமையாகக் கூறினார் - இதில் உள்ள திணை வழுவமைதிகளைத் திருத்தி எழுதுக.**

- சீசர் எப்போதும் என் சொல் பேச்சைக் கேட்கும்.
- புதியவர்களைப் பார்த்து "குரைக்குமே" தவிர "கடிக்காது".

சிறுவினா.

1. **"மாளாத காதல் நோயாளன் போல்" என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக.**

மாளாத காதல் நோயாளன் போல் :

- உவமை : மருத்துவர் உடலை கத்தியால் அறுத்துச் சுட்டாலும் நோயாளி அவரை நேசிப்பார். அதுபோல,
- செய்தி : இறைவன் நீங்கா துன்பத்தைத் தந்தாலும் அந்த இறைவனிடம் நீங்காத அன்பு வைத்திருக்கிறேன் என்று குலசேகரர் கூறுகிறார்.

Padasalai.Net

**2. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.**

- இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றன.
- கடின வேலைகளை எளிதாக்குகின்றன.
- உணவு, உடை, இருப்பிடம், மருத்துவம், தொலைத்தொடர்பு போன்றவற்றில் மனிதனை மேம்படுத்தி உள்ளது.
- காலை முதல் இரவு வரையிலும் அறிவியல் சாதனங்கள் இன்றி மனிதன் இல்லை.

3. மனிதர்களின் மூளையைப் போன்றது, செயற்கை நுண்ணறிவு கொண்ட கணினியின் மென்பொருள், மனிதனைப் போலவே பேச, எழுத, சிந்திக்க இத்தொழில்நுட்பம் மேம்படுத்தப்படுகிறது. இதனால் மனிதகுலத்துக்கு ஏற்படுகிற நன்மைகளைப் பற்றி அறிவியல் இதழ் ஒன்றுக்கு **"எதிர்காலத் தொழில்நுட்பம்"** என்ற தலைப்பில் எழுதுக.

- மனிதர்களின் மூளையைப் போன்றது, செயற்கை நுண்ணறிவு கொண்ட கணிணியின் மென்பொருள்
- மனிதனைப் போல பேச, எழுத, சிந்திக்க இத்தொழில் நுட்பம் பயன்படுத்தப் படுகிறது.
- இதனால் மனித குலத்திற்கு ஏற்படுகிற நன்மைகள் அதிகம்.
- கண்காணிப்புக் கேமரா முதல் ரோபோ வரையிலும் இதன் பயன் நிறைந்துள்ளது.
- ஊலகின் ஒவ்வொரு துறையிலும் அளவிடற்கரிய முன்னேற்றத்தைத் தரும்.

4. நேற்றிரவு பெய்த மழை எல்லாம் தொட்டியை நிறைத்திருந்தது. வாழைத் தோப்பில் குட்டியுடன் நின்றிருந்த மாடு கத்தியது; தந்தை என்னிடம், **"இலச்சுமி கூப்பிடுகிறாள் போய்ப் பார்"** என்றார். **"இதோ சென்றுவிட்டேன்"** என்றவாறே அங்குச் சென்றேன். துள்ளிய குட்டியைத் தடவிக்கொடுத்து, **"என்னடா விளையாடவேண்டுமா?"** என்று கேட்டு அவனை அவிழ்த்துவிட்டேன். என் தங்கை அங்கே வந்தாள். அவளிடம், **"நீயும் இவனும் விளையாடுங்கள்"** என்று கூறினேன். அவிழ்த்துவிடப்பட்ட இலச்சுமி தொட்டியிலிருந்த நீரைக் குடித்தாள்.

**இப்பத்தியிலுள்ள வழுவமைதிகளைப் பட்டியலிட்டு எடுதுக.**

**வழுவமைதிகள் :**

- இலட்சுமி கூப்பிடுகிறாள் - திணை வழுவமைதி
- இதோ சென்றுவிட்டேன் - கால வழுவமைதி
- என்னடா - திணை வழுவமைதி
- இவனும் - திணை வழுவமைதி
- குடித்தாள் - திணை வழுவமைதி
- குட்டியுடன் - மரபு வழுவமைதி
- மாடு - மரபு வழுவமைதி

**நெடுவினா.**

1. ஒரு குழந்தையைத் தூக்கவும் கீழே விழுந்த ஒரு தேனீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறைகொள்ளுமா? வெறும் வணிகத்துடன் நின்றுவிடுமா? இக்கருத்துகளை ஒட்டிச் **"செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள்"** பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

**செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள் :**

- இவ்வுலகை மிகுதியாக ஆளக்கூடியது செயற்கை நுண்ணறிவு.
- "ரோபோவிடம்" குழந்தைகளை ஒப்படைத்துவிட்டு அலுவலகம் செல்லலாம்.

Padasalai.Net

- வயதானவர்களுக்கு உதவிகள் செய்து உற்ற தோழனாய் இருக்கும்.
- மனிதர் செய்ய இயலாத கடினமான செயல்களைச் செய்யும்.
- விடுதிகளில், வங்கிகளில் அலுவலகங்களில் சேவைகளை ரோபோக்கள் அளிக்கும்.
- நம்முடன் உரையாடும்
- ஆலோசனைகள் வழங்கும்.
- பயண ஏற்பாடு செய்து தரும்.
- தண்ணீர் கொண்டு வந்து தரும்.
- குழந்தைகளுக்கு வேடிக்கை காட்டும்.
- ஊர்திகளை இயக்கும்.
- அதன்மூலம் பயண நேரம் குறையும் எரிபொருளும் மிச்சப்படும்.
- விபத்துகள் குறையும்.
- வேலைவாய்ப்புகளில் புதுமையைக் கொண்டுவரும்.
- எதிர்காலத்தில் உலகின் ஒவ்வொரு துறையிலும் அளவிடற்கரிய முன்னேற்றத்தைத் தரும்.

**2. நம் முன்னோர் அறிவியல் கருத்துகளை இயற்கையுடன் இணைத்துக் கூறுவதாகத் தொடங்குகின்ற பின்வரும் சொற்பொழிவைத் தொடந்து நிறைவு செய்க.**

**பேரன்பிற்குரிய அவையோர் அனைவருக்கும் வணக்கம்! இன்று இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழுடன் அறிவியலை நான்காம் தமிழாகக் கூறுகின்றனர். ஆதிகாலந்தொட்டு இயங்கிவரும் தமிழ்மொழியில் அறிவியல் என்பது தமிழர் வாழ்வியலோடு கலந்து கரைந்து வந்துள்ளதை இலக்கியங்கள் மூலம் அறிகிறோம். அண்டத்தை அளந்தும், புவியின் தோற்றத்தை ஊகித்தும் கூறும் அறிவியல் செய்திகள் இலக்கியங்களில் உள்ளன. சங்க இலக்கியமான பரிபாடலில்..... ...... ...**

- பெருவெளியில் அண்டத்தின் கரு பேரொலியுடன் தோன்றியது,
- உருவம் இல்லாத அணுக்களுடன் வளர்ந்தது வானம்.
- அந்த அணுக்களின் ஆற்றல் கிளர்ந்து பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல ஊழிக் காலங்கள் கடந்து சென்றன.
- பிறகு நெருப்புப் பந்துபோலப் புவி உருவாகி விளங்கிய ஊழிக்காலம் தொடர்ந்தது.
- பின்னர் தொடர்ந்து பெய்த மழையால் பூமி வெள்ளத்தில் மூழ்கியது.
- மீண்டும் மீண்டும் மூழ்குதல் நடந்தது.
- அச்சூழலில் உயிர்கள் தோன்றி நிலைபெறும் ஊழிக்காலம் வந்தது.

3. **“அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெளிப் பயணம்”** என்னும தலைப்பில் கற்பனைக் கதை ஒன்று எழுதுக.

**அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெளிப் பயணம் :**

- அறிவியல் தொடர்பான தேர்வில் நான் வெற்றி பெற்றேன்.
- என்னுடைய மின்னஞ்சலில் எனக்கு ஓர் அழைப்பிதழ் வந்திருந்தது.
- என்னை அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெளிப் பயணத்துக்கு அழைத்துச் செல்லும் அழைப்பிதழ்தான் அது.
- நான் விண்வெளிப் பயணம் மேற்கொள்ளும் நாளும் வந்தது.
- நானும் அறிவியலாளர் மட்டுமெ செல்லவிருப்பதாக் கூறினர். எனக்கு அளவில்லா ஆனந்தம்.
- நாங்கள் இருவரும் விண்கலத்திற்கு தானியங்கி தூக்கி மூலம் சென்றோம்.
- ராக்கெட் புறப்படும்போது எனக்குப் புதுவிதமான அனுபவம் கிடைத்தது.
- சிறிது நேரத்தில் விண்வெளியில் நுழைந்துவிட்டது விண்கலம்.

- விண்வெளியில் சுற்றிக் கொண்டிருந்தோம்.
- மிக அருகிலேயே சூரிய உதயத்தைப் பார்த்தோம்.
- வானவில்லைப் பார்த்து மகிழ்ந்தேன்.
- அறிவியலாளர் விண்வெளியில் விண்மீன்களைச் சுட்டிக்காட்டினார்.
- பூமியைப் பார்த்தது போலவே மற்ற கோள்களையும் அவற்றின் நிறம் வடிவம் பற்றியும் ஸ்டீபன் மிகவும் எளிமையாகக் கூறினார்.
- அவர் கூறிய விளக்கம் என் எண்ணத்தை விட்டு நீங்காது.
- வானில் பரவியுள்ள ஓசோன் படலத்தைப் பற்றிக் கூறினார்.
- புறஊதாக் கதிர்கள் பற்றியும் கூறினார்.
- குளிரூட்டும் பெட்டியினால் விளையும் தீமையைப் பற்றியும் விளக்கினார்.
- அவருடைய அனுபவங்களை என்னுடன் பகிர்ந்து கொண்டார்.
- அவருடன் சென்ற விண்வெளிப் பயண அனுபவங்கள் பற்றி நான் என் பள்ளியில் உள்ள நண்பர்களிடமும் என் உறவினர்களிடமும் பகிர்ந்து கொண்டேன்.

## மொழியை ஆள்வோம்!

**கொடுக்கப்பட்டுள்ள இருசொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க.**

அ) இயற்கை - செயற்கை ஆ) கொடு - கோடு

இ) கொள் - கோள் ஈ) சிறு - சீறு

உ) தான் - தாம் ஊ) விதி - வீதி

**எ.கா : அ) இயற்கை - செயற்கை**

**இயற்கைக் காடுகளில் பயணிக்கச் செயற்கைக் கருவிகள் பயன்படுகின்றன.**

ஆ) அம்மா கொடுத்த பென்சிலால் கோடு போட்டாள்.

இ) ஒன்பது கோள்களையும் தெரிந்து கொள்.

ஈ) சிறு பாம்பு என்றாலும் சீறும்

உ) தான் செய்த செயல்கள் தாம் வெற்றியடைந்தன.

ஊ) விதியின் வசத்தால் கண்ணகி வீதிக்கு வந்தாள்.

**பத்தியைப் படித்துப் பதில் தருக.**

**பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல ஊழிக் காலங்கள் கடந்து சென்றன. புவி உருவானபோது நெருப்புப் பந்துபோல் விளங்கிய ஊழிக்காலம் தோன்றியது. பின்னர்ப் புவி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக் காலம் கடந்தது. அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது. இப்படி மீண்டும் மீண்டும் சிறப்பாகிய ஆற்றல் மிகுந்து செறிந்து திரண்டு இப்படியாக (வெள்ளத்தில் மூழ்குதல்) நடந்த இந்தப் பெரிய உலகத்தில், உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாகிய உள்ளீடு தோன்றியது. உயிர்கள் தோன்றி நிலைபெறும்படியாக இப்பெரிய புவியில் ஊழிக்காலம் கடந்தது.**

1. பத்தியில் உள்ள அடுக்குத்தொடர்களை எடுத்து எழுதுக. மீண்டும் மீண்டும்.
2. புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கியது? தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது.
3. பெய்த மழை - இத்தொடரை வினைத்தொகையாக மாற்றுக. பெய்மழை.
4. இப்பத்தி உணர்த்தும் அறிவியல் கொள்கை யாது? பெருவெடிப்புக் கொள்கை.
5. உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாக நீவிர் கருதுவன யாவை? நிலம், நீர், நெருப்பு, காற்று, வானம்.

**கட்டுரை எழுதுக.**

தலைப்பு – விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்.

**முன்னுரை :**

"அச்சமும் மடமையும் இல்லாத பெண்கள்

அழகிய பாரத நாட்டின் இரு கண்கள்"

விண்வெளிக்குப் பயணம் செய்த முதல் இந்திய வீராங்கனை கல்பனாசாவ்லா ஆவார். ஊலகமே போற்றும் அளவுக்கு விண்வெளியில் மிகச்சிறந்த சாதனை செய்துள்ளார்.

**பிறப்பு :**

"மங்கையராய்ப் பிறப்பதற்கே
மாதவம்செய்திட வேண்டுமம்மா"

இந்தியாவின் ஹரியானாவில் கர்னலில் ஜுலை 01, 1961 ஆம் ஆண்டு பனாரஸ்லால்-சன்யோகிதா தேவி இவர்களுக்கு மகளாகப் பிறந்தாள்.

**கல்வி :**

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெணகள் நடத்த வந்தோம்."

விமான ஊர்தியியல் துறையில் இளங்கலைப் பட்டமும், விண்வெளி பொறியியல் துறையில் முதுகலைப் பட்டமும், முனைவர் பட்டமும் பெற்றார்.

**விண்வெளிப்பயணம் :**

"வானை அளப்போம் கடல் மீனை அளப்போம்
சந்திர மண்டலம் முழுதும் கண்டு தெளிவோம்."

இந்திய கொலம்பிய விண்வெளி ஊர்தியான எஸ்.டி.எஸ் - 87ல் விண்வெளிப் பயணம் மேற்கொண்டார். சுமார் 372 மணிநேரம் விண்வெளியில் இருந்து வெற்றிகரமாகப் பூமி திரும்பினார்.

**மரணம் :**

ஜனவரி 16, 2003ம் ஆண்டு கொலம்பிய விண்கலம் எஸ்.டி.எஸ். 107 விண்வெளி சென்றது. அதில் கல்பனா சாவ்லா உள்பட 7 பேர் பயணம் செய்தனர். 16 நாள் ஆய்வை முடித்து வெற்றிகரமாகப் பூமிக்குத் திரும்பும் போது விண்கலம் வெடித்துச் சிதறியது. கல்பனா சாவ்லா உட்பட அனைவரும் பலியாகினர்.

**முடிவுரை :**

நியூயார்க் நகரிலுள்ள ஒரு சாலைக்கு இவருடைய பெயர் சூட்டப்பட்டுள்ளது. இந்தியாவில் ஆண்டுதோறும் பிப்பிரவரி 1ம் நாள் இவரின் நினைவு தினமாகக் கொண்டாடப்படுகிறது. ஆண்டுதோறும் சாதனைப் பெண்களுக்கு தமிழக அரசின் "கல்பன சாவ்லா" விருது வழங்கப் படுகிறது.

"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று."

**நயம் பாராட்டுக.**

**நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும்**
**நேர்ப்பட வைத்தாங்கே**
**குலாவும் அமுதக் குழம்பைக் குடித்தொரு**
**கோல வெறிபடைத்தோம்:**
**உலாவும் மனச்சிறு புள்ளினை எங்கணும்**
**ஓட்டி மகிழ்ந்திடுவோம்:**
**பலாவின் கனிச்சுளை வண்டியில் ஓர் வண்டு**
**பாடுவது வியப்போ?**

**திரண்ட கருத்து :**

நிலாவையும் விண்மீனையும் வைத்து அமுதக் குழம்பைக் குடித்து அங்கே கோலம் படைத்தோம். மனம் சிறகடித்துப் பறக்கும் வண்டுபோலப் பாடுவோம்.

**எதுகைக் தொடை :** இரண்டாம் எழுத்து ஒன்றிவரும்.

Padasalai.Net

**அடி எதுகை :**

நிலாவை

குலாவும்

உலாவும்

பலாவின்

**மோனைத் தொடை :** முதல் எழுத்து ஒன்றிவரும்.

**அடிமோனை:**

நிலா - நேர்

குலாவும் - கோல

உலாவும் - ஓட்டி

பலாவின் - பாடுவதும்.

**இயைபுத் தொடை :** (கடைசி சீர் அல்லது அசை ஒன்றி வரும்)

காற்றையும், படைத்தோம்

எங்கனும் ,மகிழ்ந்திடுவோம்

**அணிநயம் :** உயர்வு நவிற்சி அணி பயின்று வந்துள்ளது.

**தொடரைப் படித்து விடையைக் கண்டறிக.**

1. நூலின் பயன் படித்தல் எனில், கல்வியின் பயன் கற்றல்.
2. விதைக்குத் தேவை எரு எனில், கதைக்குத் தேவை கரு.
3. கல் சிலை ஆகுமெனில், நெல் சோறு ஆகும்
4. குரலில் இருந்து பேச்சு எனில், விரலில் இருந்து எழுத்து.
5. மீன் இருப்பது நீரில்: தேன் இருப்பது பூவில்.

**(சோறு, கற்றல், கரு, பூவில், எழுத்து)**

**குறிப்பைப் பயன்படுத்தி விடைதருக.**

**குறிப்பு – எதிர்மறையான சொற்கள்**

1. **மீளாத் துயர் - மீண்ட இன்பம்.**
2. கொடுத்துச் சிவந்த - கொடுக்காமல் கருத்த.
3. மறைத்துக் காட்டு - திறந்து காட்டாதே.
4. அருகில் அமர்க - தொலைவில் எழுக.
5. பெரியவரின் அமைதி - சிறியவரின் ஆரவாரம்.
6. புயலுக்குப் பின் - அமைதிக்கு முன்.

**அகராதியில் காண்க.**

அவிர்தல் - மலர்தல்.

அழல் - வெப்பம்.

உவா - கடல்

கங்குல் - இருள்.

கனலி - சூரியன்..

**காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**

இயந்திரத்தின் கட்டுக்குள்
விழுந்து விட்டாயே
இப்போதும் ஒன்றும்
கெட்டுவிட வில்லை

Padasalai.Net

சுதாரித்து எழும்பு
சுதந்திரமாய் நடையிடு
அறிவு அழகானது
அடிமைத்தனம் ஆபத்தானது.

**கலைச்சொல் அறிவோம்.**

| | | |
|---|---|---|
| Nanotechnology | - | மீநுண்தொழில்நுட்பம். |
| Space Technology | - | விண்வெளித் தொழில்நுட்பம். |
| Biotechnology | - | உயிரித் தொழில்நுட்பம். |
| Cosmic rays | - | விண்வெளிக் கதிர்கள். |
| Ultraviolet rays | - | புற ஊதாக் கதிர்கள். |
| Infrared rays | - | அகச்சிவப்புக் கதிர்கள். |

**அறிவை விரிவு செய்.**

பஞ்ச பூதங்களின் அறிவியல் - நீலமணி.
அன்றாட வாழ்வில் அறிவியல் - ச. தமிழ்ச்செல்வன்.
காலம் - ஸ்டீபன் ஹாக்கிங்.

**நிற்க அதற்குத் தக.**

- தம்பி, தொலைக்காட்சியைத் தவிர். பாடம் படி.
- தங்கையே திறன் பேசியைத்தவிர். நன்றாகப் படி.
- தோழா காணொலி விளையாட்டுகளைத் தவிர். நண்பர்களுடன் விளையாடு.
- தோழி சமூக ஊடகங்களைத் தவிர். வீட்டு வேலைகளைச் செய்.

**சொல்லும் பொருளும்.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆளா | - | அடிமை | சுடினும் | - | சுட்டாலும் |
| மாளாத | - | தீராத | மாயம் | - | விளையாட்டு |
| விசும்பில் | - | வானத்தில் | ஊழி | - | யுகம் |
| ஊழ் | - | முறை | இசையில் | - | வெடிப்பில் |
| வளி | - | காற்று | செந்தீ | - | நெருப்பு |
| தண்பெயல் | - | குளிர்ந்த மழை | உள்ளமுறை வெள்ளம் | - | முழுவதும் வெள்ளம் |
| பீடு | - | சிறப்பு | ஈண்டி | - | செறிந்து |

**இலக்கணக் குறிப்பு.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஊழ் ஊழ் | - | அடுக்குத்தொடர் | வளர்வானம் | - | வினைத்தொகை |
| செந்தீ | - | பண்புத்தொகை | வாரா | - | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
| அறுத்து | - | வினையெச்சம் | மீளா | - | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
| கிளர்ந்த | - | பெயரெச்சம் | | | |

**பகுபத உறுப்பிலக்கணம்.**

**கிளர்ந்த- கிளர் + த்(ந்) + த் + அ**

கிளர் - பகுதி
த் - சந்தி
த்(ந்) - ந் ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை

அ - பெயரெச்ச விகுதி

* * *

**கல்வி**

**இயல்**

**5 மணற்கேணி**

**பலவுள் தெரிக.**

1. **'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம்வைத்தும்'** என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி.

அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

ஆ) காப்பியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

இ) பக்தி இலக்கியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

**விடை** : அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

2. அருந்துணை என்பதைப் பிரித்தால் ................................

அ) அருமை + துணை ஆ) அரு + துணை இ) அருமை + இணை ஈ) அரு + இணை

**விடை** : அ) அருமை + துணை

3. **'இங்கு நகரப் பேருந்து நிற்குமா?'** என்று வழிப்போக்கர் கேட்டது ................. வினா.
**'அதோ, அங்கே நிற்கும்'.** என்று மற்றொருவர் கூறியது ................. விடை.

அ) ஐயவினா, வினா எதிர் வினாதல் ஆ) அறிவினா, மறை விடை

இ) அறியா வினா, சுட்டு விடை ஈ) கொளல் வினா, இனமொழி விடை

**விடை** : இ) அறியா வினா, சுட்டு விடை

4. **'அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி**
**மருளை அகற்றி மதிக்கும் தெருளை'**

- என்று இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது?

அ) தமிழ் ஆ) அறிவியல் இ) கல்வி ஈ) இலக்கியம்

**விடை** : இ) கல்வி

5. இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் ..................... இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர் .............

அ) அமைச்சர், மன்னன் ஆ) அமைச்சர், இறைவன் இ) இறைவன், மன்னன் ஈ) மன்னன், இறைவன்

**விடை** : ஈ) மன்னன், இறைவன்

**குறுவினா.**

1. **'கழிந்த பெரும் கேள்வியினான் எனக் கேட்டு முழுது உணர்ந்த கபிலன் தன் பால் பொழிந்த பெரும் காதல்மிகு கேண்மையினான் இடைக்காட்டுப் புலவன் தென்சொல்'**

- இவ்வடிகளில் கழிந்த பெரும் கேள்வியினான் யார்? காதல்மிகு கேண்மையினான் யார்?

- கழிந்த பெரும் கேள்வியினான் - குலேசபாண்டியன்.
- காதல் மிகு கேண்மையினான் - இடைக்காடனார்.

2. **செய்குதம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக்குக.**

செய்குதம்பிப் பாவலரின் முழக்கத் தொடர்கள் :

- அருளைப் பெருக்கு.

- அறிவைத் திருத்து.
- மருளை அகற்று.
- கல்வியென்றே போற்று.

3. **அமர்ந்தான் - பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

அமர் + ந்(த்) + த் + ஆன்.

- அமர் - பகுதி.
- த் - சந்தி.
- ந் - விகாரம்.
- த் - இறந்த கால இடைநிலை.
- ஆன் - ஆண்பால் விகுதி.

4. **இந்த அறை இருட்டாக இருக்கிறது. மின்விளக்கின் சொடுக்கி எந்தப் பக்கம் இருக்கிறது ? இதோ...... இருக்கிறதே! சொடுக்கியைப் போட்டாலும் வெளிச்சம் வரவில்லையே! மின்சாரம் இருக்கிறதா, இல்லையா?**

மேற்கண்ட உரையாடலில் உள்ள வினாக்களின் வகைகளை எடுத்தெழுதுக.

- அறியா வினா.
- ஐய வினா.

**சிறுவினா.**

1. **மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்புச் செய்தது ஏன்? விளக்கம் தருக.**
   - இடைக்காடனார் தனது கவிதையை மன்னனின் முன்பு பாடினார்.
   - மன்னன் அதைப் பொருட்படுத்தாமல் அவமதித்தான்.
   - புலவர் இறைவனிடம் முறையிட்டார்.
   - இறைவன், மன்னனுக்குப் பிழையை உணர்த்த எண்ணினார்.
   - கடம்பவனக் கோவிலை விட்டு நீங்கினார்.
   - இதனை அறிந்த மன்னன், இறைவனிடம் தன் பிழையைப் பொறுத்தருள வேண்டினான்.
   - அதனால் இடைக்காடனாருக்குச் சிறப்புச் செய்தான்.
   - இறைவனும் கோவிலுக்குத் திரும்பினார்.

2. **உங்களுடன் பயினும் மாணவர் ஒருவர் பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்தி வேலைக்குச் செல்ல விரும்புகிறார். அவரிடம் கற்பதன் இன்றியமையாமையை எவ்வகையில் எடுத்துரைப்பீர்கள்?**
   - கல்வி அருளைப் பெருக்கும்.
   - கல்வி அறிவைத் திருத்தும்.
   - கல்வி மருளை அகற்றும்.
   - கல்வி அறிவைத் தெளிவாக்கும்.
   - கல்வி ஆவிக்கு அருந்துணை.
   - கல்வி உனக்கு இன்பம் தரும்.
   - கல்வியைப் போற்று.

3. **ஐக்கிய நாடுகள் அவையில் மொழிபெயர்ப்பு**

**ஐ.நா. அவையில் ஒருவர் பேசினால் அவரவர் மொழிகளில் புரிந்துகொள்வதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. மொழிபெயர்ப்பு என்பது எழுதப்பட்டதை மொழிபெயர்ப்பது; ஆனால் ஒருவர் பேசும்போதே மொழிபெயர்ப்பது விளக்குவது என்றே சொல்லப்படுகிறது. ஐ.நா. அவையில் ஒருவர் பேசுவதை மொழியெர்க்கும் மொழிபெயர்ப்பாளர் பார்வையாளர்களுக்குத் தெரியாதபடி வேறு இடத்தில் இருப்பார். ஒருவர் பேசுவதைக் காதணிகேட்பியில் கேட்டபடி சில நொடிகளில் மொழிபெயர்த்து ஒலிவாங்கி வழியே பேசுவார். அவையில் உள்ள**

**பார்வையாளர் தம்முன் உள்ள காதணிகேட்பியை எடுத்துப் பொருத்திக்கொண்டு அவரது மொழியில் புரிந்துகொள்வார்.**

இப்பகுதியிலிருந்து ஐந்து வினாக்களை உருவாக்குக.

- மொழி பெயர்ப்பு என்பது என்ன?
- பேசும்போதே மொழிபெயர்ப்பது, விளக்குவது எவ்வாறு சொல்லப்படுகிறது?
- மொழிபெயர்ப்பாளர் யாருக்குத் தெரியாதபடி இருப்பார்?
- மொழிபெயர்த்து எதன் வழியே பேசுவார்?
- பத்திக்கு ஏற்றத் தலைப்பு தருக.

4. **முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை**
**இன்மை புகுத்தி விடும்.**
**இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டி விளக்குக.**

- முயற்சி செல்வத்தினைத் தரும். முயற்சியின்மை வறுமையைத் தந்து விடும்.
- தொடக்கம் முதல் முடிவு வரை நேராகவே ஆற்று நீரின் ஓட்டம் போல் பொருள் கொள்ளலாம்.
- எனவே இது 'ஆற்றுநீர்ப்பொருள்கோள்' ஆகும்.

**நெடுவினா.**

1. **இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.**

- இடைக்காடனார் தனது கவிதையை மன்னன் முன்பு பாடினார்.
- மன்னன் அதைப் பொருட்படுத்தாமல் அவமதித்தான்.
- புலவர் இறைவனிடம் முறையிட்டார்.
- இறைவன், மன்னனுக்குப் பிழையை உணர்த்த எண்ணினார்.
- குடம்பவனக் கோவிலை விட்டு நீங்கினார்.
- இதனை அறிந்த மன்னன் இறைவனிடம் தன் பிழையை பொறுத்தருள வேண்டினான்.
- ஆதனால் இடைக்காடனாருக்குச் சிறப்புச் செய்தான்.
- இறைவனும் கோவிலுக்குத் திரும்பினார்.

2. **'கற்கை நன்றே கற்கை நன்றே**
**பிச்சை புகினும் கற்கை நன்றே' என்கிறது வெற்றிவேற்கை. மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.**

- அந்த மாளிகை வீடு பென் வில்ஸனுடையது.
- கதவு திறக்கப்பட்டது. பாட்ஸி வீட்டினுள் சென்றுவிட்டார். மேரி வெளியிலேயே இருந்தாள்.
- சற்றுத் தூரத்தில் மற்றொரு சிறிய வீட்டினுள் மேரி நுழைந்திருந்தாள்.
- அங்கு ஒரு புத்தகத்தை தன் கையில் எடுத்துக்கொண்டாள்.
- "புத்தகத்தை என்னிடம் கொடு! நீ இதை எடுக்கக்கூடாது! உன்னால் படிக்க முடியாது...!" என்று வெடுக்கென்று பிடுங்கிக்கொண்டாள் ஒரு சிறுமி.
- மேரி மனம் கசந்தாள்.
- ஒரு தீர்மானத்திற்கு வந்தாள்.
- தான் படிக்க வேண்டும் என்பது தான் அது.
- மிஸ் வில்ஸன் மூலம் மேரி பட்டப்படிப்பு முடித்தாள்.
- மேரி தன்னுடைய டிப்ளொமாவை வாஞ்சையுடன் பெற்றுக்கொண்டாள்.
- மேரி மேல் படிப்பிற்காக டவுனுக்கும் போனாள்.
- அவளுடன் ஒரு பெரிய கூட்டமே பின் தொடர்ந்து சென்றது.

Padasalai.Net

- இத்தனைக்கும் காரணம் அவளுடைய கல்வியே!
- வாழ்த்தொலிகள் பெருகின! இரயில் வேகமெடுத்தது!

**3. தமிழின் இலக்கிய வளம் - கல்வி மொழி – பிறமொழிகளில் உள்ள இலக்கிய வளங்கள் - அறிவியல் கருத்துகள் - பிறதுறைக் கருத்துகள் - தமிழுக்குச் செழுமை -**

**மேற்கண்ட குறிப்புகளைக் கொண்டு செம்மொழித் தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிபெயர்ப்புக் கலை' என்ற தலைப்பில் வார இதழ் ஒன்றுக்கு நடுப்பக்கக் கட்டுரை எழுதுக.**

**முன்னுரை :**

மொழிபெயர்ப்பு தமிழுக்கு வளம் சேர்க்கும் கலையாக உள்ளது என்பதைப் பற்றிக் காண்போம்.

**தமிழின் இலக்கிய வளம் :**

பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், ஐம்பெருங்காப்பியங்கள், பக்திப் பாடல்கள், சிற்றிலக்கிய வடிவங்கள், மரபுக் கவிதைகள், சந்தப் பாடல்கள், புதுக்கவிதைகள், புதினங்கள் எனத் தமிழின் இலக்கிய வளத்திற்கு சான்றுக்கள் பலவாகும். இராமாயணம், மகாபாரதம், பெருங்கதை, சீவக சிந்தாமணி, கம்பராமாயணம், வில்லிபாரதம் முதலிய சில காப்பியங்களும் அடங்கும்.

**கல்வி மொழி :**

அனைத்துலக அறிவையும் நாம் எளிதாகப் பெறமுடிகிறது. மனித வளத்தை முழுமையாகப் பயன்படுத்த முடியும். ஒருலகத்தன்மையைப் பெற முடியும். பிறமொழிகளைக் கற்கும் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

**தமிழுக்குச் செழுமை :**

தமிழுக்குரிய நூலாக இருந்த திருக்குறள் உலக மொழிகளுக்குரியதாக மாறியது. மொழிபெயர்ப்பு இல்லாவிடில் சேக்ஸ்பியர், கம்பர், தாகூர் ஆகியோரைத் தெரிந்திருக்க முடியாது. புதினம், சிறுகதையின் படிநிலை மொழிபெயர்ப்பு மூலம் இலக்கியத் திறனாய்வு முறைகளை ஆங்கிலத்திலிருந்து பெற்றுள்ளோம்.

**பிறதுறைக் கருத்துகள் :**

மொழிபெயர்ப்பு அறிவியலும் அறிவியல் சார்ந்த துறைகளிலும் பயன்பட்டு வருகிறது. மொழிபெயர்ப்பு இல்லையெனில் ஊடகத்தின் வளர்ச்சி இல்லை. தொலைக்காட்சி, வானொலி, திரைப்படம், இதழ்கள் போன்ற ஊடகங்கள் மொழிபெயர்ப்பால்தான் வளர்ச்சி பெறுகின்றன.

**முடிவுரை :**

தமிழுக்குச் செழுமை செய்ய, பிறமொழிகளில் உள்ள சிறந்த செய்திகளையும், நூல்களையும் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட வேண்டும்.

## மொழியை ஆள்வோம்!

**தொடர்களில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க.**

கடம்பவனத்தை விட்டு இறைவன் நீங்கினான்.

**எ.கா :** அழகிய குளிர்ந்த கடம்பவனத்தை விட்டு இறைவன் நீங்கினான்.

1. மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்.
   பயன்தரும் மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்.
2. வாழ்க்கைப்பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது.
   சவாலான வாழ்க்கைப்பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது.
3. கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும்.
   அழியாத கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும்.
4. குழந்தைகள் தனித்தனியே எழுதித்தரவேண்டும்.
   செல்லக்குழந்தைகள் தனித்தனியே எழுதித்தரவேண்டும்.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**மதிப்புரை எழுதுக.**

பள்ளி ஆண்டுவிழா மலருக்காக, நீங்கள் நூலகத்தில் படித்த கதை/ கட்டுரை/ சிறுகதை/ கவிதை நூலுக்கான மதிப்புரை எழுதுக.

**குறிப்பு – நூலின் தலைப்பு – நூலின் மையப்பொருள் - மொழிநடை – வெளிப்படுத்தும் கருத்து - நூலின் நயம் - நூல் கட்டமைப்பு – சிறப்புக் கூறு – நூல் ஆசிரியர்.**

**நூலின் மதிப்புரை**

**நூலின் தலைப்பு :**

நமது பாரத, தேசத்தின் மேதகு மேனாள் குடியரசுத் தலைவரான திரு. அப்துல் கலாம் அவர்களைப் பற்றிய "கனவெல்லாம் கலாம்" என்பதாகும்.

**நூலின் மையப்பொருள் :**

மேதகு மேனாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் பற்றிய தகவல்கள்.

**மொழிநடை :** எளிய மொழி நடையில் அமைந்துள்ளது.

**வெளிப்படுத்தும் கருத்து :**

அவரின் வெற்றிக்குக் காரணம் எளிமை, இனிமை, நேர்மை. உலகப் பொதுமறையைப் படித்து அதன்படி வாழ்ந்தார். ஆகவே உலகப்புகழ் பெற்றார் என்பதைக் கூறுகிறது.

**நூலின் நயம் :**

மேதகு மேனாள் குடியரசுத் தலைவர் பற்றிய செய்திகள் சிறப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

**நூலின் கட்டமைப்பு :**

காணிக்கைக் கட்டுரைகள், இரங்கல் செய்திகள், கவிதை மாலை, கலாம் அலைவரிசை, கலாம் கருவூலம் என அருமையான ஐந்து தலைப்புகள் உள்ளன.

**சிறப்பு கூறு :** கலாம் பற்றிய செய்திகளைத் தேடித் தேடி சிறப்பாக தொகுத்துள்ளார்கள்.

**நூலாசிரியர் :**

ஒரு நூலைத் தொகுப்பதை விட அவற்றை வகுத்து முறைப்படுத்துவது கடினம், இதை நூலாசிரியர் சிறப்பாக அமைத்துள்ளார்.

**நூலக உறுப்பினர் படிவம்**

வள்ளியூர் அரசு மேல் நிலைப்பள்ளியில் 10ஆம் வகுப்பு படித்தவர் மாலா. இவரது தந்தை வேலவன். இவர் திருநெல்வேலி மாவட்ட மைய நூலகத்தில் உறுப்பினராக சேர விரும்புகிறார். தேர்வர் தன்னை மாலாவாக நினைத்து உரிய படிவத்தினைப் பூர்த்தி செய்க.

திருநெல்வேலி மாவட்ட நூலக ஆணைக்குழு

மைய கிளை ஊர்ப்புற நூலகம் வள்ளியூர் பேரூராட்சி

உறுப்பினர் சேர்க்கை அட்டை

அட்டை எண் : 8936 உறுப்பினர் எண் : 81

| | | |
|---|---|---|
| 1. | பெயர் | வே.மாலா |
| 2. | தந்தை பெயர் | வேலவன் |
| 3. | பிறந்த நாள் | 18.09.2009 |
| 4. | வயது | 15 |
| 5. | படிப்பு | பத்தாம் வகுப்பு |
| 6. | தொலைபேசி எண் | 7676869217 |
| 7. | முகவரி<br>(அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்) | 18 1, வடக்குத் தெரு,<br>வள்ளியூர், 627364. |

Padasalai.Net

நான் திருநெல்வேலி மைய நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய இத்துடன் காப்புத்தொகை ரூ 100, சந்தா தொகை ரூ 100 ஆக மொத்தம் ரூ 200 பணமாகச் செலுத்துகிறேன். நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.

இடம் : திருநெல்வேலி

நாள் : 15.05.2024

தங்கள் உண்மையுள்ள

வே. மாலா

திரு திருமதி செல்வி செல்வன் வே. மாலா அவர்களை எனக்கு நன்கு தெரியும் எனச் சான்று அளிக்கிறேன்.

பிணைப்பாளர் கையொப்பம்

(பதவி மற்றும் அலுவலகம்)

அலுவலக முத்திரை

## மொழியோடு விளையாடு

**தொழிற்பெயர்களின் பொருளைப் புரிந்துகொண்டு தொடர்களை முழுமை செய்க.**

1. நிலத்துக்கு அடியில் கிடைக்கும் புதையல் யாவும் அரசுக்கே சொந்தம். நெகிழிப் பொருள்களை மண்ணுக்கு அடியில் புதைத்தல் நிலத்தடி நீர்வளத்தைக் குன்றச் செய்யும். (புதையல் ; புதைத்தல்)
2. காட்டு விலங்குகளைச் சுடுதல் தடை செய்யப்பட்டுள்ளது. செய்த தவறுகளைச் சுட்டல் திருந்த உதவுகிறது. (சுட்டல், சுடுதல்)
3. காற்றின் மெல்லிய தொடுதல் பூக்களைத் தலையாட்டவைக்கிறது. கைகளின் நேர்த்தியான தொடுத்தல் பூக்களை மாலையாக்குகிறது. (தொடுத்தல், தொடுதல்)
4. பசுமையான காட்சி ஐக் காணுதல் கண்ணுக்கு நல்லது. (காணுதல், காட்சி)
5. பொதுவாழ்வில் நடித்தல் கூடாது நடிப்பு இல் அவரை மிஞ்ச ஆள் கிடையாது. (நடித்தல், நடிப்பு)

**அகராதியில் காண்க.**

மன்றல் - மேடை.
அடிச்சுவடு - காலடித்தடம்.
அகராதி - அகரவரிசைச் சொற்பொருள் நூல்.
தூவல் - தூவுதல்.
மருள் - மயக்கம்.

**காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**

பாலைவனத்தில் இருந்து கொண்டு
சோலைவனம் பற்றி
சொல்லிக் கொடுத்தால் போதாது
ஒவ்வொரு வரும் வரமாக
என்னை நட்டு வளர்த்தால்
உங்களையும் சந்ததியினரையும்
ஏன் அகிலத்தையும் நான் காப்பேன்.

**நிற்க அதற்கு தக.**

**பள்ளியில் நான் :**

- நேரத்தைச் சரியாகக் கடைபிடிப்பேன்.
- உடன்பயிலும் மாணவரிடம் நட்புடன் இருப்பேன்.
- ஆசிரியரை மதித்து நடப்பேன்.
- பண்பான சொற்களைப் பேசுவேன்.
- பாடங்களைக் கவனமுடன் எழுதுவேன்.

Padasalai.Net

**வீட்டில் நான் :**

- வீட்டுப் பணிகளைப் பகிர்ந்து செய்வேன்.
- பெரியோர்களை மதிப்பேன்.
- வீட்டுப் பாடங்களை எழுதுவேன்.
- அம்மாவுக்கு உதவிகள் செய்வேன்.
- தங்கையுடன் விளையாடுவேன்.

**கலைச்சொல் அறிவோம்.**

| | |
|---|---|
| Emblem | - சின்னம். |
| Intellectual | - அறிவாளர் |
| Thesis | - ஆய்வேடு |
| Symbolism | - குறியீட்டியல் |

**அறிவை விரிவு செய்.**

| | |
|---|---|
| சிறந்த சிறுகதைகள் பதின்மூன்று | - தமிழில் வல்லிக்கண்ணன் |
| குட்டி இளவரசன் | - தமிழில் வெ. ஸ்ரீராம் |
| ஆசிரியரின் டைரி | - தமிழில் எம். பி. அகிலா |

**சொல்லும் பொருளும்.**

| | |
|---|---|
| கேள்வியினான் | - நூல்வல்லான் |
| கேண்மையினான் | - நட்பினன். |
| தார் | - மாலை. |
| முனிவு | - சினம். |
| புகல | - சொல்ல. |
| அகத்து உவகை | - மன மகிழ்ச்சி. |
| தமர் | - உறவினர். |
| நீபவனம் | - கடம்ப வனம். |
| மீனவன் | - பாண்டிய மன்னன். |
| கவரி | - சாமரை. |
| பனுவல் | - செய்யுள். |
| நுவன்ற | - சொல்லிய. |

**இலக்கணக் குறிப்பு.**

| | |
|---|---|
| கேள்வியினான் | - வினையாலணையும் பெயர். |
| காடனுக்கும் கபிலனுக்கும் | - எண்ணும்மை. |

**பகுபத உறுப்பிலக்கணம்.**

| | |
|---|---|
| **தணிந்தது** | - தணி + த்(ந்) + த் + அ + து |
| தணி | - பகுதி |
| த் | - சந்தி |
| ந் | - விகாரம் |
| த் | - இறந்தகால இடைநிலை |
| அ | - சாரியை |
| து | - படர்க்கை ஒருமை வினைமுற்று விகுதி |

Padasalai.Net

* * *

## கலை, அறிவியல், புதுமை

இயல் 6

### நிலா முற்றம்

**பலவுள் தெரிக.**

1. **குளிர் காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள் ...................................**

அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள். ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்.

இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள். ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்.

**விடை** : இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள்.

2. **கூற்று 1 : போராட்டப் பண்புடனே வளர்ந்தவர் கலைஞர்.**

**கூற்று 2 : அவருக்குள் இருந்த கலைத்தன்மை வளர அது உதவியது.**

அ) கூற்று 1 சரி 2 தவறு ஆ) கூற்று 1 மற்றும் 2 தவறு

இ) கூற்று 1 தவறு கூற்று 2 சரி ஈ) கூற்று 1 மற்றும் 2 சரி.

**விடை** : ஈ) கூற்று 1 மற்றும் 2 சரி.

3. **மலர்கள் தரையில் நழுவும். எப்போது?**

அ) அள்ளி முகர்ந்தால். ஆ) தளரப் பிணைத்தால். இ) இறுக்கி முடிச்சிட்டால். ஈ) காம்பு முறிந்தால்.

**விடை** : ஆ) தளரப் பிணைத்தால்.

4. **தூக்கு மேடை என்னும் நாடகத்தின் பாராட்டு விழாவில் தான், கலைஞர் என்ற சிறப்புப்பெயர் வழங்கப்பட்டது - இத்தொடருக்கான வினா எது?**

அ) தூக்கு மேடை நாடகத்தில் நடித்தவர் யார்? ஆ) கலைஞர் என்ற சிறப்புப்பெயர் எப்போது வழங்கப்பட்டது?

இ) தூக்கு மேடை என்பது திரைப்படமா? நாடகமா? ஈ) யாருக்குப் பாராட்டு விழா நடத்தப்பட்டது?

**விடை** : கலைஞர் என்ற சிறப்புப்பெயர் எப்போது வழங்கப்பட்டது?

5. **கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?**

அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால் ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்

இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால் ஈ) அங்கு வறுமை இல்லாததால்

**விடை** : ஈ) அங்கு வறுமை இல்லாததால்

**குறுவினா.**

1. **காட்டில் விளைந்த வரகில் சமைத்த உணவு மழைக்கால மாலையில் சூடாக உண்ணச் சுவை மிகுந்திருக்கும். இத்தொடரில் அமைந்துள்ள முதற்பொருள், கருப்பொருள்களை வகைப்படுத்தி எழுதுக.**

- முதற்பொருள் - காடு. மழைக்காலம், மாலைப்பொழுது
- கருப்பொருள் - வரகு

2. **“கலைஞர், பழுமரக்கனிப் பயன்கொள்ளும் பேச்சாளர். படித்தவரைக் கவரும் ஆற்றல் கொண்ட எழுத்தாளர்” - பேராசிரியர் அன்பகழகனார். இக்கூற்றை அயற்கூற்றாக எழுதுக.**

- கலைஞரை பழுமரக்கனிப் பயன்கொள்ளும் பேச்சாளர் என்றும், படித்தவரைக் கவரும் ஆற்றல் கொண்ட எழுத்தாளர் என்றும் பேராசிரியர் அன்பழகனார் குறிப்பிடுகிறார்.

3. **உறங்குகின்ற கும்பகன்ன ‘எழுந்திராய் எழுந்திராய்’**

**காலதூதர் கையிலே ‘உறங்குவாய் உறங்குவாய்’**

கும்பகன்னனை என்ன சொல்லி எழுப்புகிறார்கள்? எங்கு அவனை உறங்கச் சொல்கிறார்கள்?

- கும்பகன்னனை 'எழுந்திராய் எழுந்திராய்' என்று சொல்லி எழுப்புகிறார்கள்.
- 'காலதூதர் கையிலே' அவனை உறங்கச் சொல்கிறார்கள்.

4. சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச்
சுமக்கின்றன ஒல்லித் தண்டுகள் - இக்கவிதை அடிகள் உணர்த்தும் உள்ளழகை எழுதுக.

- அழகிய அகன்ற உலகத்தைப் பெண் சுமக்கின்றாள்.

5. கீழ்வரும் தொடர்களில் பொருந்தாத கருப்பொருளைத் திருத்தி எழுதுக.

- உழவர்கள் மலையில் உழுதனர்.

முல்லைப் பூச் செடியைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர் :

- குரவர்கள் மலையில் கிழங்கு எடுத்தனர்.
- தாழைப் பூச் செடியைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்.

சிறுவினா.

1. வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.

- திருவடி - சிறு கிண்கிணிகளோடு சிலம்பும் கலந்து ஆடுக.
- இடை - அரைஞாண் மணியோடு வடமும் சேர்ந்து ஆடுக.
- சிறுவயிறு - தொந்தியும் சிறுவயிறும் சேர்ந்து ஆடுக.
- நெற்றி - பொட்டோடு சுட்டியும் சேர்ந்து ஆடுக.
- காது - குண்டலங்களும் குழைகளும் சேர்ந்து ஆடுக.
- தலை - உச்சிக் கொண்டையுடன் முத்துகளும் சேர்ந்து ஆடுக.
- மேனி - பவளம் போன்ற மேனியும் சேர்ந்து ஆடுக.

2. நவீன கவிதையில் வெளிப்படும் நுண்மை உள்ளம், பூத்தொடுக்கும் நாட்டுப்புறப் பாடலில் வெளிப்படுகிறது. ஒப்பிட்டு எழுதுக.

விடை:

- இரண்டு பாடல்களும் பூக்களின் மென்மையைப் பற்றியும், தொடுக்கும்விதம் பற்றியும் கூறுகிறது.

3. 'கடற்கரையில் உப்புக் காய்ச்சுதல் நடைபெறுகிறது; மலைப் பகுதிகளில் மலைப் பயிர்களும் நிலப் பகுதிகளில் உழவுத் தொழிலும் நடைபெறுகின்றன.' - காலப்போக்கில் பல மாற்றங்கள் நிகழ்ந்தபோதிலும், பண்டைத் தமிழரின் திணைநிலைத் தொழில்கள் இன்றளவும் தொடர்வதையும் அவற்றின் இன்றைய வளர்ச்சியையும் எழுதுக.

குறிஞ்சி :

மலைப் பகுதிகளில் மலைப் பயிர்களும், தேனெடுத்தலும், கிழங்கு அகழ்தலும் இன்று நவீன கருவிகள் மூலம் நடைபெறுகின்றன.

நெய்தல் :

கடற்கரையில் உப்புக் காய்ச்சுதலும், மீன்பிடித்தலும் நவீன மீன் பிடிக்கருவிகள் மூலம் நடைபெறுகின்றன.

மருதம் :

நெல்லரிதலும், களைபறித்தலும் இன்று நவீன உழவுக்கருவிகள் மூலம் நடைபெறுகின்றன.

முல்லை :

ஏறுதழுவுதலையும், நிரைமேய்த்தலையும் இன்று புதிய கோணங்களில் செயற்படுத்துகின்றனர்.

4. தமிழ்மொழிக்காகக் கலைஞர் செய்த சிறப்புகளும் நீங்கள் அறிந்துக் கொண்ட இரண்டினை எழுதுக.

- நீராரும் கடலுடுத்த எனும் பாடலை அரசுவிழாக்கள் அனைத்திலும் தொடக்கப் பாடலாகப் பாட வழிவகுத்தார்.

- தமிழ் வளர்ச்சித்துறையை உருவாக்கி அதற்குத் தமிழ் அறிஞர் ஒருவரையே அமைச்சர் ஆக்கினார்.

**நெடுவினா.**

**1. நெகிழிப் பைகளின் தீமையைக் கூறும் பொம்மலாட்டம் உங்கள் பள்ளியின் ஆண்டு விழாவில் நிகழ்த்தப்படுகிறது. அதற்குப் பாராட்டுரை ஒன்றினை எழுதுக.**

- பொம்மலாட்டம் ஒரு கலை.
- அதை மாணவர்கள் நிகழ்த்திய விதம் அருமையாக இருந்தது.
- விழிப்புணர்வு குறித்து அமைந்திருந்தது.
- நெகிழிகள் மிகவும் ஆபத்தானவைகள்.
- அவற்றை உணர்த்தும் வண்ணம் பொம்மலாட்டம் சிறப்பாக இருந்தது.
- இதை அமைத்த மாணவர்கள் பாராட்டுக்கு உரியவர்கள்.
- நெகிழிகளால் இயற்கைச் சூழல் பாதிப்பு
- கால் நடைகளுக்குப் பாதிப்பு, சுற்றுச்சூழல் பாதிப்பு
- மண்வளப் பாதிப்பு, நிலத்தடி நீர் பாதிப்பு
- இவை அனைத்தையும் ஒரு பொம்மலாட்டம் மூலம் அழகாகக் கூறியிருந்தனர்.
- இந்த மாணவர்களை மனதாரப் பாராட்டுகிறேன்.
- இவர்களை எத்தனை முறை பாராட்டினாலும் பொருந்தும்.

**2. போராட்டக் கலைஞர் - பேச்சுக் கலைஞர் - நாடகக் கலைஞர் - திரைக் கலைஞர் - இயற்றமிழ்க் கலைஞர் ஆகிய தலைப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதுக.**

முன்னுரை :

- திருவாரூர் மாவட்டத்தில் திருக்குவளை என்னும் ஊரில் முத்துவேலருக்கும், அஞ்சுகம் அம்மையாருக்கும் மகனாக 1924ஆம் ஆண்டு சூன் திங்கள் 3ஆம் நாள் பிறந்தார்.

போராட்டக் கலைஞர் :

- பள்ளி முடிந்த மாலை வேளைகளில் "வாருங்கள் எல்லோரும் போருக்குச் சென்றிடுவோம்" என்று முழங்கிய படி இந்தித் திணிப்பை எதிர்த்துப் போராடினார்.

பேச்சுக் கலைஞர் :

- 'நட்பு' என்னும் தலைப்பில் அவர் ஆற்றிய சொற்பொழிவு பலராலும் பாராட்டப்பட்டது. சிறுவர் சீர்திருத்தச் சங்கம், தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம் ஆகியவற்றைத் தொடங்கினார்.

நாடகக் கலைஞர் :

- சாமராட் அசோகன், மணிமகுடம், வெள்ளிக்கிழமை, காகிதப்பூ எனப் பல நாடகங்கள் எழுதியுள்ளார். 'தூக்கு மேடை" என்னும் நாடகத்தின் பாராட்டு விழாவில் அவருக்குக் கலைஞர் விருது வழங்கப்பட்டது.

திரைக்கலைஞர் :

- ராஜகுமாரி, மருதநாட்டு இளவரசி, மந்திரி குமாரி, நாம், மலைக்கள்ளன், பராசக்தி, திரும்பிப்பார், மனோகரா, ராஜாராணி, ரங்கூன் ராதா, மறக்க முடியுமா, பூம்புகார், உட்பட பல திரைக்கதை வசனங்களை அனைவரையும் வசீகரிக்கும் வகையில் எழுதியுள்ளார்.

இயற்றமிழ்க் கலைஞர் :

- கயிற்றில் தொங்கிய கணபதி, நளாயினி, சித்தார்த்தன் கதை, சந்தனக்கிண்ணம், தாய்மை, புகழேந்தி, அணில் குஞ்சு, ரோமாபுரிப் பாண்டியன், பொன்னர் சங்கர், தென்பாண்டிச் சிங்கம், ஒரே ரத்தம், நெஞ்சுக்கு நீதி, சங்கத்தமிழ், குறளோவியம், தொல்காப்பியப் பூங்கா போன்ற பல படைப்புகளையும இயற்றியுள்ளார்.

Padasalai.Net

முடிவுரை :

- கலைஞர் 2018 ஆம் ஆண்டு சூலை மாதம் 7ஆம் நாள் தமிழர் நெஞ்சில் என்றும் நிலைத்து நிற்கும் காவியமானார்.

**3. சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பன் என்ற தலைப்பில் இலக்கிய உரை எழுதுக.**

**அன்பும் பண்பும் கொண்ட தலைவர் அவர்களே! தேர்ந்தெடுத்த பூக்களைப் போன்று வரிசை தொடுத்து அமர்ந்திருக்கும் ஆன்றோர்களே! ஆறிஞர் பெருமக்களே! வணக்கம். இயற்கை கொலு வீற்றிருக்கும காட்சியைப் பெரிய கலைநிகழ்வே நடப்பதான தோற்றமாகக் கம்பன் காட்டும் கவி ...... தண்டலை மயில்கள் ஆட ......... இவ்வுரையைத் தொடர்க!**

சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பன் இலக்கிய உரை :

இலக்கிய மன்றத் தலைவர் அவர்களே, ஆன்றோர்களே! சான்றோர்களே! வணக்கம்.

**"தண்டலை மயில்களாடத் தாமரை விளக்கந் தாங்கக்
கொண்டல்கண் முழவினேங்கக் குவளைகண் விழித்து நோக்கத்
தெண்டிரை யெழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்
வண்டுக ளினிதுபாட மருதம் வீற்றிருக்கு மாதோ"**

என்ற இந்த பாடலின் வாயிவாக மருத நிலக் காட்சியை நம் கண் முன்னே காட்டுகிறார். இப்பாடலில் மோனை நயமும், எதுகை, இயைபு நயமும் சேர்ந்து பாடலுக்கு அழகான சந்தங்களைக் கொடுத்துள்ளது.

இதுமட்டுமல்ல..

**"வெய்யோனொளி தன்மேனியின் விரிசோதியின் மறையப்
பொய்யோவெனு மிடையாளொடு மிளையானொடும் போனான்
மையோமர கதமோமறி கடலோமழை முகிலோ
ஐயோவிவன் வடிவென்பதொ ரழியாவழ குடையான்."**

இப்பாடலிலும், மோனை, எதுகை, இயைபு நயங்கள் சேர்ந்து சந்த நயத்தைக் கூட்டுகின்றன. கம்பரின் அனைத்துப் பாடல்களுமே இவ்வாறு சந்த நயத்துடனே அமைந்துள்ளன.

இத்தகு சந்த நயமுடைய கவிதைகளை நாமும் எழுதிடுவோம் என்று கூறி விடைபெறுகிறேன். நன்றி! வணக்கம்!

## மொழியை ஆள்வோம்!

**தொடர்களை அடைப்புக்குறிக்குள் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றுக.**

எ.கா :

அழைப்புமணி ஒலித்தது. கயல்விழி கதவைத் திறந்தார்.

**(தனிச்சொற்றொடர்களைக் கலவைச் சொற்றொடராக மாற்றுக)**

அழைப்புமணி ஒலித்ததால், கயல்விழி கதவைத் திறந்தார்.

1. இன்னாசியார் புத்தகங்களை வரிசைப்படுத்தினார். அவற்றைப் புத்தக அடுக்கங்களில் அடுக்கிவைத்தார். புத்தகங்களைக் கேட்டவர்களுக்கு எடுத்துக்கொடுத்தார்.

**(தொடர் பொற்றொடராக மாற்றுக.)**

- இன்னாசியார் புத்தகங்களை வரிசைப்படுத்தி, அடுக்கங்களில் அடுக்கிவைத்து, கேட்டவர்களுக்கு எடுத்து கொடுத்தார்.

2. கலைஞர் எழுத்தைத் தமது ஆயதமாகக் கொண்டு வாழ்ந்தார். கலைஞர் எழுத்து வழியாகத் தமது எண்ணங்களைக் கடைக்கோடித் தமிழனுக்கும் கொண்டு சென்றார்.

**(கலவைச் சொற்றொடராக மாற்றுக)**



Padasalai.Net

- கலைஞர் எழுத்தைத் தமது ஆயுதமாகக் கொண்டு, எழுத்து வழியாகத் தமது எண்ணங்களைக் கடைக்கோடித் தமிழனுக்கும் கொண்டு சென்றார்.

3. முரசொலி ஏட்டைக் கையெழுத்து இதழாகத் தொடங்கி வார இதழாக்கி, நாளேடாக்கினார் கலைஞர்.

**(தனிச் சொற்றொடர்களாக மாற்றுக.)**

- முரசொலி ஏட்டைக் கையெழுத்து இதழாகத் தொடங்கினார். அதை வார இதழாக்கினார். பின்னர் அதை நாளேடாக்கினார்.

4. ஓடிக்கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றவுடன், அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைபட்டது.

**(தனிச் சொற்றொடர்களாக மாற்றுக.)**

ஓடிக்கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றது. அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைபட்டது.

**பிறமொழிச் சொற்களைத் தமிழ்ச்சொற்களாக மாற்றி எழுதுக.**

புதிர் : **உங்களிடம் ஏழு கோல்டு பிஸ்கட் உள்ளது. அதில் ஒன்று மட்டும் எடை குறைவானது. உங்களிடம் உள்ள ஒரு தராசை இரு முறைகள் மட்டுமெ யூஸ் பண்ணி வெயிட் குறைந்த கோல்டு பிஸ்கட்டைக் கண்டுபிடிக்கவும்.**

**விடை**

**தராசின் இரண்டு தட்டுகளிலும் மூன்று மூன்று கோல்டு பிஸ்கட்டுகளை வையுங்கள். இரண்டு தட்டுகளும் ஈக்வலாக இருந்தால், கையில் மிச்சம் உள்ள பிஸ்கட்டே வெயிட் குறைவானது. பட், ஒரு பக்க தராசுத் தட்டு உயர்ந்தால் அதில் உள்ள மூன்று பிஸ்கட்களில் ஒன்று வெயிட் குறைவானது. அந்த மூன்று பிஸ்கட்டுகளை மட்டும் எடுத்துவைத்துக்கொள்ளுங்கள். இரண்டு தட்டுகளிலும் ஒரு ஒரு பிஸ்கட்டைப் போட்டு இதே எக்ஸ்பெரிமெண்ட்டை ரிப்பீட் செய்து ஆன்சரைக் கண்டுபிடியுங்கள்! ஆல் தி பெஸ்ட்!**

| பிறமொழிச் சொல் : | தமிழ்ச்சொல் : |
|---|---|
| **கோல்டு பிஸ்கட்** | **தங்கக்கட்டி** |
| யூஸ் | பயன்படுத்தி |
| வெயிட் | எடை |
| பட் | ஆனால் |
| ஆல் தி பெஸ்ட் | வாழ்த்துகள் |
| ஈக்வலாக | சமமாக |
| எக்ஸ்பெரிமெண்ட்டை | பரிசோதனையை |
| ரிப்பீட் | திரும்பவும் |
| ஆன்சரை | விடையை |

**மனிதனுக்கும் மலருக்குமான மணம் வீசும் இந்த நயவுரையைத் தொடர்க.**

**வண்டுகளை ஈர்க்கும வாசனையில்**
**பூக்களிடம் வசப்படுவது மனிதர்களே!**
**பூச்சியைக் கவரும் வண்ணங்களில்**
**பூக்களிடம் விழுவது மனிதர்களே!**

மணம் வீசும் மலர்களில்
மனதைப் பறிகொடுப்பது மனிதர்களே.
பூத்துக்குலங்கும் சோலையில்
பொழுதுபோக்குவதும் மனிதர்களே
வண்ணவண்ண மலர்களையே
வகையாய்த்தொடுப்பதும் மனிதர்களே
மலரைக் கண்டதும் - முகம்

Padasalai.Net

மலர்வதும் மனிதர்களே

**கட்டுரை எழுதுக.**

**உங்கள் பகுதியில் நடைபெற்ற கலைத் திருவிழாவிற்க்கு சென்று வந்த நிகழ்வைக் கட்டுரை ஆக்குக.**

**முன்னுரை :**

கலைநிகழ்ச்சிகள் கண்ணுக்குக் குளுமையும் மனதிற்கு மகிழ்ச்சியும் தரக் கூடியது. அத்தகைய கலைத்திருவிழா பற்றி இக்கட்டுரையில் காணலாம்.

**அறிவிப்பு :**

கலைத்திருவிழா அறிவிப்பு வந்ததும் பள்ளி முழுவதும் விழாக் கோலம் கொண்டது. சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்ட போட்டிகள். ஆளாளுக்கு ஒவ்வொரு போட்டியில் சேர்ந்தோம். (ஆடல் பாடல், கரகாட்டாம், ஒயிலாட்டம், மயிலாட்டம், பரதநாட்டியம், தனிநடனம், குழுநடனம் எனப்பலவித நடனப் போட்டிகள்.)

**போட்டிகள் :**

பள்ளி அளவில் வெற்றி பெற்றவர்கள் மாவட்ட அளவில் கலந்து கொண்டோம். நான்கு சக்கர வாகனம் அமர்த்தி எங்கள் தலைமையாசிரியர் எங்களைத் தலைநகருக்கு அனுப்பி வைத்தார். மாவட்ட அளவில் வெற்றி பெற்றவர்கள் மாநிலப் போட்டிக்குத் தயாரானோம். நான் பாடல் ஒப்புவித்தல் போட்டியில் வெற்றி பெற்றேன்.

**எனது அனுபவம் :**

எனது பள்ளியில் மாநிலப் போட்டிக்குத் தேர்வான பிற மாணவர்களுடன் நானும் சென்றேன். சென்னைக்கு இரயிலில் பயணம் செய்தோம். புது அனுபவமாக, மகிழ்ச்சியாக இருந்தது. சென்னை பிரம்மாண்டமாக இருந்தது. போட்டியில் நான் வெற்றி பெற்றேன். பரிசுகளும் சான்றிதழும் வெளிநாடு சுற்றுலா வாய்ப்பும் பெற்றேன்.

**முடிவுரை :**

கலைத்திருவிழா, அடையாளம் தெரியாத என்போன்ற மாணவர்களை அடையாளம் காட்டியது.

**மொழியோடு விளையாடு!**

**தொடரில் விடுபட்ட வண்ணங்களை உங்களின் எண்ணங்களால் நிரப்புக.**

1. வானம் கருக்கத் தொடங்கியது. மழைவரும்போலிருக்கிறது.
2. அனைவரின் பாராட்டுகளால், வெட்கத்தில் பாடகரின் முகம் சிவந்தது.
3. வெள்ளை மனம் உள்ளவரை அப்பாவி என்கிறோம்.
4. கண்ணுக்குக் குளுமையாக இருக்கும் பசுமையான புல்வெளிகளில் கதிரவனின் மஞ்சள் வெயில் பரவிக் கிடக்கிறது.
5. வெயிலில் அலையாதே : உடல் கருக்கும்.

**பொருத்தாமானவற்றைச் சொற்பெட்டியில் கண்டு எழுதுக.**

(தங்கும், மரம் வீடு, அவிழும், தயங்கும், மரவீடு, பார்ப்பவர், விருது, தோற்பவர், கவிழும், விருந்து)

**1.** விரட்டாதீர்கள் - பறவைக்கு மரம் வீடு
வெட்டாதீர்கள் - மனிதருக்கு அவைதரும் மரவீடு

2. காலை ஒளியினில் மலரிதழ் அவிழும்
சோலைப் பூவினில் வண்டினம் கவிழும்.

3. மலை முகட்டில் மேகம் தங்கும் - அதைப்
பார்க்கும் மனங்கள் செல்லத் தயங்கும்.

4. வாழ்க்கையில் தோற்பவர் மீண்டும் வெல்வர் - இதைத்
தத்துவமாய்த் பார்ப்பவர் முயற்சி மேல்கொள்வர்.

5. கைதட்டலே கவிஞருக்கு விருது – அவையோரின்
ஆர்வமே அவருக்கு விருந்து.

**அகராதியில் காண்க.**

Padasalai.Net

| | | | |
|---|---|---|---|
| தால் | - நாக்கு. | உழுவை | - புலி |
| அகவுதல் | - ஒலி எழுப்புதல். | ஏந்தெழில் | - மிகுந்த அழகு. |
| அணிமை | - அழகு. | | |

**காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**

கண்ணுக்குக் காட்சியும்
மனதிற்கு இன்பமும்
தருவதே கலை
பண்பாட்டுக் கருவூலமாய்
உணர்புகளின் உறைவிடமாய்
காலத்தையும் கடந்து நிற்பது கலை.

**நிற்க அதற்கு தக.**

- என்துறைபற்றிய நூல்களைத் தமிழாக்கம் செய்வேன்.
- என்துறை சார்ந்த கலைச் சொற்களை மாற்றுவேன்.
- எனது அலுவலகத்தில் அறிவிப்புப் பலகைகளை தமிழில் வைப்பேன்.
- சந்தக் கவிதைகள் எழுதுவேன்.
- தமிழுக்குப் பெருமை சேர்க்கும் பணிகளை மேற்கொள்வேன்.

**கலைச்சொல் அறிவோம்.**

| | | | |
|---|---|---|---|
| Playwright | - நாடக ஆசிரியர் | Screen play | - திரைக்கதை |
| Storyteller | - கதை சொல்லி | Aesthetics | - அழகியல், முருகியல் |

**அறிவை விரிவு செய்.**

தக்கையின் மீது நான்கு கண்கள் - சா. கந்தசாமி.
திருக்குறள்- கலைஞர் உரை - கலைஞர் மு. கருணாநிதி.
நாட்டார் கலைகள் - அ.கா. பெருமாள்

## திருக்குறள்

**குறுவினா.**

1. **கரப்பிடும்பை இல்லார் - இத்தொடரின் பொருள் கூறுக.**
   - தன்னிடம் உள்ள பொருளை மறைத்து வைக்காதவர்.
2. **தஞ்சம் எளியர் பகைக்கு - இவ்வடிக்குரிய அசைகளையும் வாய்பாடுகளையும் எழுதுக.**

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| தஞ்/சம் | - நேர் நேர் | - தேமா. |
| எளி/யர் | - நிரை நேர் | - புளிமா. |
| பகைக்/கு | - நிரைபு | - பிறப்பு. |

3. **வறுமையின் காரணமாக உதவி கேட்டு வருபவரின் தன்மானத்தை எள்ளிநகையாடுவது குறித்துக் குறளின் கருத்து என்ன?**
   - வறுமையின் காரணமாக உதவி கேட்டு வருபவரின் தன்மானத்தை எள்ளிநகையாடுவது அவரைத் துன்புறுத்தும்.
   - உதவி செய்பவரைக் கண்டால் மனம் மகிழ்ச்சியால் பொங்கும்.
4. **பின்னவருவனவற்றுள் கூரான ஆயுதம் எது என்று செந்நாப்போதார் கூறுகிறார்? ஏன் என்பதை எழுதுக. பெரிய கத்தி, இரும்பு ஈட்டி, உழைத்ததால் கிடைத்த ஊதியம், வில்லும் அம்பும்.**
   - கூரான ஆயுதம் - உழைத்ததால் கிடைத்த ஊதியம்.

Padasalai.Net

- ஏனெனில் பகைவரை வெல்லும் கூர்மையான ஆயுதம் அதுவே.

**சிறுவினா.**

1. **வள்ளுவம், சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்துவதைக் குறள்வழி விளக்குக.**

- மனவலிமை, குடிகளைக் காத்தல், ஆட்சி முறை அறிதல்,
- நூலறிவு, விடா முயற்சி, செயலின் தன்மை அறிதல்,
- ஏற்ற காலம் அறிதல், ஏற்ற கருவி அறிதல், உலகியல் நடைமுறை அறிதல்.

அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்தும்.

2. **பலரிடம் உதவி பெற்றுக் கடின உழைப்பால் முன்னேறிய ஒருவர், அவருக்கு உதவிய நல்ல உள்ளங்களையும் சுற்றங்களையும் அருகில் சேர்க்கவில்லை. அவருக்கு உணர்த்தும் நோக்கில் வள்ளுவர் குறிப்பிடும் கருத்துகள் யாவை?**

வள்ளுவர் குறிப்பிடும் கருத்துகள் :

- பகைவரை எதிர் கொள்ள முடியாது.
- பகைக்கு எளிதில் ஆட்படுவர்.
- மனதில் துணிவு இருக்காது.
- துணை வலிமை இருக்காது.
- அறிய வேண்டியவற்றை அறிய இயலாது.

**சொல்லும் பொருளும்.**

பண்டி - வயிறு அசும்பிய - ஒளிவீசுகிற

முச்சி - தலையுச்சிக் கொண்டை

**இலக்கணக்குறிப்பு.**

குண்டலமும் குழைகாதும் - எண்ணும்மை

ஆடுக - வியங்கோள் வினைமுற்று

**பகுபத உறுப்பிலக்கணம்.**

**பதிந்து - பதி + த்(ந்) + த் + உ**

பதி - பகுதி

த் - சந்தி (ந்-ஆனது விகாரம்)

த் - இடைநிலை

உ - வினையெச்ச விகுதி

* * *

**நாகரிகம், நாடு, சமூகம்**

**இயல்**

7 **விதை நெல்**

**பலவுள் தெரிக.**

1. **சரியான அகரவரிசையைத் தேர்ந்தெடுக்க.**

அ) உழவு, மண், ஏர், மாடு ஆ) மண், மாடு, ஏர், உழவு

இ) உழவு, ஏர், மண், மாடு ஈ) ஏர், உழவு, மாடு, மண்

**விடை** : இ) உழவு, ஏர், மண், மாடு

2. **'மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்' - மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே -**

Padasalai.Net

அ) திருப்பதியும் திருத்தணியும் ஆ) திருத்தணியும் திருப்பதியும்

இ) திருப்பதியும் திருச்செந்தூரும் ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்

**விடை : அ) திருப்பதியும் திருத்தணியும்**

3. **'தன் நாட்டு மக்களுக்குத் தந்தையும் தாயும் மகனுமாக இருந்த அரசன்' என்னும் மெய்க்கீர்த்தித் தொடர் உணர்த்தும் பொருள் -**

அ) மேம்பட்ட நிருவாகத்திறன் பெற்றவர் ஆ) மிகுந்த செல்வம் உடையவர்

இ) பண்பட்ட மனிதநேயம் கொண்டவர் ஈ) நெறியோடு நின்று காவல் காப்பவர்

**விடை : இ) பண்பட்ட மனிதநேயம் கொண்டவர்**

4. **இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் ...............**

அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்

இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்

**விடை : இ) வலிமையை நிலைநாட்டல்**

5. **தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது ........................**

அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்

**விடை : ஈ) சிலப்பதிகாரம்**

**குறுவினா.**

1. **பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் – சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?**

- பாசவர் - வெற்றிலை விற்பவர் வாசவர் - வாசனைப் பொருள் விற்பவர்
- பல்நிண விலைஞர் - பலவகை இறைச்சி விற்பவர் உமணர் - உப்பு விற்பவர்

2. **மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது?**

- அரசர்களின் புகழ் காலம் கடந்தும் அழியாமல் இருக்க மெய்க்கீர்த்தி பாடப்பட்டது.

3. **வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.**

- தனது உணவிற்காக வைத்திருந்த பணத்தில் கூட புத்தகம் வாங்கிப் படித்தார்.
- இதனால் பல வேளைகளில் பட்டினியாக இருந்துள்ளார்.

4. **புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.**

**எதிரெதிர்த் திணைகள் :**

- வெட்சி X கரந்தை
- வஞ்சி X காஞ்சி
- நொச்சி X உழிஞை
- தும்பை X வாகை

5. **பொருத்தமான இடங்களில் நிறுத்தக் குறியிடுக.**

- பழங்காலத்திலே, பாண்டியன் ஆண்ட பெருமையைக் கூறி ; சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி ; சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி ; நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி ; விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன். - ம.பொ.சி.

**சிறுவினா.**

1. **'முதல்மழை விழுந்ததும்' என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா. கவி பாடுகிறார்?**

முதல் மழை விழுந்ததும் :

- மேல் மண் ஈரப்பதமானது
- உழவர்கள் காளைகளை ஓட்டிச் சென்றனர்

Padasalai.Net

- பொன் ஏர் தொழுதனர்
- புலன் வழிபட்டனர்.
- ஏரில் மாட்டைப் பூட்டினர்
- காட்டை உழுதனர்
- மண் புரளும், நிலம் சிலிர்த்திடும்.
- நாற்று நிமிர்ந்து வளரும்.

**2. அவந்தி நாட்டு மன்னன், மருதநாட்டு மன்னனுடன் போர் புரிந்து அந்நாட்டைக் கைப்பற்ற நினைகிறான் ; அப்போர் நிகழ்வைப் புறப்பொருள் வெண்பாமாலை கூறும் இலக்கணத்தின் வழி விளக்குக.**

புறப்பொருள் வெண்பாமாலை இலக்கணம் :

- மண்ணாசை காரணமாகப் பகைவர் நாட்டைக் கைப்பற்றக் கருதி வஞ்சிப்பூவைச் சூடிப் போருக்குச் செல்வது வஞ்சித்திணை ஆகும்.

**3. 'தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்' இடம் சுட்டிப் பொருள் விளக்குக.**

இடம்

**"சிற்றகல் ஒளி"** என்ற பாடத்தில் ம.பொ.சி அவர்களால் சொல்லப்பட்டது.

பொருள்

ஆந்திரத்தின் தலைநகராக சென்னை அமையும் என்ற கருத்து நிலவியது. இதையொட்டி மாநகராட்சியின் சிறப்புக் கூட்டம் கூட்டப்பட்டது. அங்கு **"தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்"** என்று ம.பொ.சி. முழங்கினார். அதுவே தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது. சென்னை மீட்கப்பட்டது.

விளக்கம் :

உயிரைக் கொடுத்தேனும் சென்னையை மீட்போம்.

**4. 'பகர்வனர் திரிதிரு நகரவீதியும் ;**
**பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்**
**கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும் ;**
**தூசும் துகிரும் ஆரமும் அகிலும்'**

அ) இவ்வடிகள் இடம்பெற்ற நூல் எது? - சிலப்பதிகாரம்

ஆ) பாடலில் அமைந்த மோனையை எடுத்து எழுதுக. - **ப**கர்வனர் **ப**ட்டினும்

இ) எதுகைச் சொற்களை அடிக்கோடிடுக. - பட்டினும் கட்டு

ஈ) காருகர் – பொருள் தருக. - நெய்பவர்

உ) இப்பாடலில் குறிப்பிடப்படும் நறுமணப் பொருள்கள் யாவை? - ஆரமும் அகிலும்

**5. பின்வரும் பத்தியைப் படித்து மையக்கருத்தை எழுதுக.**

**பேரரசனது மெய்ப் புகழை எடுத்துக்கூறுவது மெய்க்கீர்த்தி. பொதுவாக.... வமிச பரம்பரையை மிகவும் விரித்துக் கூறியள்ளன.**

**மையக்கருத்து :**

சோழ அரசர்களின் புகழையும் பெருமைகளையும் வமிசப் பரம்பரைகளையும் மெய்க்கீர்த்தி கூறுகிறது.

**நெடுவினா.**

**1. நாட்டு விழாக்கள் - விடுதலைப் போராட்ட வரலாறு – நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு – குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் 'மாணவப் பருவமும் நாட்டுப் பற்றும்' என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.**

மாணவப் பருவமும் நாட்டுப்பற்றும் மேடை உரை

**முன்னுரை**

Padasalai.Net

- அனைவருக்கும் வணக்கம். நாட்டுப்பற்று, மொழிப்பற்று என்பன அனைவருக்கும் இரு கண்களைப் போன்றது.

நாட்டு விழாக்கள் :

- விடுதலை நாள், குடியரசு நாள், காந்தி பிறந்த நாள் எனப் பல நாட்டு விழாக்களை நாம் கொண்டாடுகிறோம். அதற்குக் காரணமாக இருந்தவர்களை நாம் நினைவு கூற வேண்டும்.

விடுதலைப் போராட்ட வரலாறு

- ஆங்கிலேயர்கள் நம்மை அடிமைகளாக வைத்திருந்தனர். அதில் இருந்து நம்மைக் காக்க தியாகிகள் பலர் தங்களுடைய இன்னுயிரை ஈந்தனர். எத்தனையோ தியாகிகளின் போராட்டத்தால் நம்நாடு விடுதலை பெற்றது. அரும்பாடு பட்டு பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காப்பது நமது கடமையாகும்.

நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு

- நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல வேண்டும். கல்வி மூலம் அறியாமையைப் போக்க வேண்டும். திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். நற்பண்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். கைமாறு கருதாமல் பிறருக்கு உதவ வேண்டும். சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டும். இயற்கையைப் பேண வேண்டும். நீர் நிலைகளைப் பேண வேண்டும். எளியவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். நாட்டு நலனைக் கருத்தில் கொள்ள வேண்டும். துயரில் இருப்போருக்கும் ஆபத்தில் இருப்போருக்கும் உதவி செய்ய வேண்டும். ஆர்வத்துடன் நாட்டுநலப் பணிகளைச் செய்ய வேண்டும். நெகிழிகளைத் தவிர்க்கவும். இயற்கைகளைக் காக்கவும் வேண்டும்.

முடிவுரை

- நம் நாட்டினை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்வது நமது கடமையாகும்.

2. **பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள மெய்க்கீர்த்திப் பாடலின் நயத்தை விளக்குக.**

மெய்க்கீர்த்திப் பாடலின் நயம்

சோழன் நாட்டிலே

- யானைகள் மட்டுமே பிணிக்கப்படுவன.
- சிலம்புகள் மட்டுமே புலம்புகின்றன.
- ஓடைகள் மட்டுமே கலங்குகின்றன.
- புனல் மட்டுமே அடைக்கப்படுகின்றன.
- மாங்காய் மட்டுமே வடுப்படுகின்றன.
- மலர்கள் மட்டுமே பறிக்கப்படுகின்றன.
- காடுகள் மட்டுமே கொடியன.
- வண்டுகள் மட்டுமே கள் உண்பன.
- மூங்கில்கள் மட்டுமே வெறுமையானவை
- நெற்கதிர்கள் மட்டுமே போராகின்றன.
- மலைகள் மட்டுமே இருளாகின்றன.
- இளமான்களின் கண்கள் மட்டுமே மருள்கின்றன.
- மீன்கள் மட்டுமே பிறழ்ந்து செல்கின்றன.
- செவிலித்தாயர் மட்டுமே சினம் கொள்வர்.
- புலவர் மட்டுமே பொருள் வைப்பர்.
- பாணர் மட்டுமே கூடி ஆடுவர்.
- தந்தை இல்லாதவர்க்குத் தந்தையாய் தாய் இல்லாதவர்க்குத் தாயாய் மகனில்லாதவர்க்கு மகனாய் சோழன் இருக்கிறான்.
- உயிர்களுக்கெல்லாம் உயிராக, விழிபெற்ற பயனாக

Padasalai.Net

- மெய்பெற்ற அருளாக, மொழி பெற்ற பொருளாக
- புகழ்பெற்ற நூலாக சோழன் திகழ்கிறான்.
- புகழ் அனைத்திற்கும் தலைவனாக யாதும் புரிகிறான்.

**3.சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிடுக.**

| வ.எ | மருவூர்ப்பாக்க வணிக வீதிகள் | இக்கால வணிகவளாகங்கள் |
|---|---|---|
| 1 | வணிக வீதிகள் இருந்தன | வணிக வளாகங்களாக இருக்கின்றன. |
| 2 | கடைத்தெருக்கள் இயற்கையான சூழலில் இருந்தன. | அங்காடிகள் செயற்கை சூழலில் இருக்கின்றன. |
| 3 | முத்து மணிகளைக் குவித்து வைத்து விற்றனர் | பாதுகாப்பாக குளிரூட்டப்பட்ட கடைகளில் விற்கின்றனர் |
| 4 | கூலங்களைக் குவித்து விற்றனர் | பாக்கெட்டுகளில் அடைத்து விற்கின்றனர் |
| 5 | உற்பத்தியாளரே விற்பனையாளர் | உற்பத்தியாளர் வேறு, விற்பனையாளர் வேறு |
| 6 | புட்டு முதலான பொருட்கள் விற்றனர் | பர்கர் முதலான பொருட்களை விற்கின்றனர் |

**4. நிகழ்வுகளைத் தொகுத்து அறிக்கை எழுதுக.**

**மகளிர் நாள்விழா**

**இடம் - பள்ளிக் கலையரங்கம் நாள் - 08.03.2019**

**கலையரங்கத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள் கூடுதல் - தலைமையாசிரியரின் வரவேற்பு - இதழாளர் கலையரசியின் சிறப்புரை – ஆசிரியர்களின் வாழ்த்துரை – மாணவத்தலைவரின் நன்றியுரை.**

நிகழ்வுகளைத் தொகுத்து அறிக்கை எழுதுதல்

மகளிர் நாள் விழா 08.03.2019 ஆம் நாள் பள்ளியில் கொண்டாடப்பட்டது.
அன்று காலை 10 மணி அளவில் கலையரங்கத்தில் அனைவரும் கூடினர்.
இறைவனை வாழ்த்தி விழா இனிதாகத் தொடங்கியது.
தலைமையாசிரியர் வரவேற்பு உரை ஆற்றினார்.
இதழாளர் கலையரசி அவர்கள் சிறப்புரை ஆற்றினார்கள்.
அவர்கள் பெண்களின் மகத்துவம் குறித்துப் பேசினார்கள்.
ஆசிரியர்கள் அனைவரும் மகளிர்தின வாழ்த்துகளைக் கூறினர்.
அடுத்து மாணவத்தலைவர் அனைவருக்கும் நன்றி கூறினார்.
நாட்டுப்பாடலுடன் விழா இனிதே நிறைவு பெற்றது.

## மொழியை ஆள்வோம்!

**பின்வரும் தொடர்களைக் கொண்டு பொருத்தமான தொடர் அமைக்க.**

**வரப் போகிறேன், இல்லாமல் இருக்கிறது, கொஞ்சம் அதிகம், முன்னுக்குப் பின், மறக்க நினைக்கிறேன்.**

**எ.கா :**

இன்னும் சிறிது நேரத்தில் வரப் போகிறேன்.
தமிழ்நாட்டில் மழை இல்லாமல் இருக்கிறது.
தேர்வில் மதிப்பெண் கொஞ்சம் அதிகம்
ரவி முன்னுக்குப் பின் முரணாகப் பேசினான்.
எனது கவலைகளை மறக்க நினைக்கிறேன்.

**தொகைச் சொற்களைப் பிரித்து எழுதி, தமிழ் எண்ணுரு தருக.**

**மூவேந்தர்களால் நாற்றிசையும் போற்றி வளர்க்கப்பட்ட முத்தமிழே, உலக மொழிகளில் உயர்ந்ததென்ற செம்மாந்த கூற்றிற்கு, தமிழ் இலக்கியங்களில் அமைந்துள்ள இருதிணை அமைப்பே காரணமாகும். முப்பாலை முழுமையாகத் தந்த தமிழின் சிறப்பினை ஐந்திணைகளில் அழகுற விளக்குபவை சங்க இலக்கியங்கள்.**

Padasalai.Net

**நானிலத்தில் பசித்தவர்க்கு அறுசுவை உணவுபோல் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் படிப்பவர்க்கு மனதிற்கினிமை ஈந்து தமிழ்ப்பெருமை சாற்றுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| மூவேந்தர் | - | மூன்று + வேந்தர் | ங |
| நாற்றிசை | - | நான்கு + திசை | ச |
| முத்தமிழ் | - | மூன்று + தமிழ் | ங |
| இருதிணை | - | இரண்டு + திணை | உ |
| முப்பால் | - | மூன்று + பால் | ங |
| ஐந்திணை | - | ஐந்து + திணை | ரு |
| நானிலம் | - | நான்கு + நிலம் | ச |
| அறுசுவை | - | ஆறு + சுவை | சா |
| பத்துப்பாட்டு | - | பத்து + பாட்டு | க0 |
| எட்டுத்தொகை | - | எட்டு + தொகை | அ |

**கடிதம் எழுதுக.**

**நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி, அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.**

நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம்

அனுப்புநர்

அஅஅ,
அரசு மேனிலைப்பள்ளி,
ஆஆஆ ஊர்,
இஇஇ மாவட்டம்.

பெறுநர்

தினநாளிதழ் ஆசிரியர் அவர்கள்,
தினநாளிதழ் அலுவலகம்,
இஇஇ மாவட்டம்.

ஐயா,

**பொருள் : கட்டுரையை வெளியிட வேண்டிக் கடிதம்.**

உயர்வுடைய உழவுத் தொழில் குறித்தும் உழவர்கள் பற்றியும் 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்'
என்ற தலைப்பில் கட்டுரை எழுதி தங்கள் அலுவலகத்திற்கு அனுப்பி உள்ளேன். எனது கட்டுரையை பொங்கல் மலரில் வெளியிடுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

ஆஆஆ ஊர் இப்படிக்கு,
08-08-2024. தங்கள் உண்மையுள்ள,
அஅஅ

உறைமேல் முகவரி

பெறுநர்

தினநாளிதழ் ஆசிரியர் அவர்கள்,
தினநாளிதழ் அலுவலகம்,
இஇஇ மாவட்டம்.

Padasalai.Net

## மொழியோடு விளையாடு

**ஊர்ப்பெயர்களின் மரூஉவை எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| புதுக்கோட்டை | புதுவை | திருச்சிராப்பள்ளி | திருச்சி |
| உதகமண்டலம் | உதகை | கோயம்புத்தூர் | கோவை |
| நாகப்பட்டினம் | நாகை | புதுச்சேரி | புதுவை |
| கும்பகோணம் | குடந்தை | திருநெல்வேலி | நெல்லை |
| மன்னார்குடி | மன்னை | சைதாப்பேட்டை | சைதை |
| மயிலாப்பூர் | மயிலை | தஞ்சாவூர் | தஞ்சை |

**படம் தரும் செய்தியைப் பத்தியாகத் தருக.**

**இப்படைத் தோற்கின் எப்படை வெல்லும்**

பழங்காலந்தொட்டே வீரம் விளைந்த நாடு நம் தமிழ்த்திருநாடு. காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை ஆகிய இந்த முப்படைகள் தான் ஒரு மன்னனின் வெற்றிக்குக் காரணமாக இருந்தன.

இது வீறு கொண்டு முன்னேறும் முப்படைகள் ஆகும். இது திருநெல்வேலியில் உள்ள திருப்புடைமருதூரின் 17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சுவர் ஓவியமாகும்.

**அகராதியில் காண்க.**

மிரியல் - மிளகு

வருத்தனை, - வருமானம்

அதசி - சணல்

துரிஞ்சில் - வெளவால்

**காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**

ஏர் முனைக்கு நேர் இங்கு
எதுவுமே இல்லை
என்றும் எங்கள் வாழ்விலே
பஞ்சமே இல்லை
பொன் ஏர் தொழுது
மாட்டைப் பூட்டிக்
காட்டைக் கீறுவோம்.

**கலைச்சொல் அறிவோம்.**

Consulate - துணைத்தூதரகம் Irrigation - பாசனம்

Guild - வணிகக் குழு Document - ஆவணம்

Patent - காப்புரிமை Territory - நிலப்பகுதி

**நிற்க அதற்குத் தக.**

**கல்வெட்டுகளையும் சிற்பங்களையும் பராமரிக்கவும், பாதுகாக்கவும் உன்னால் இயன்ற செயல்களைப் பட்டியலிடுக.**

கல்வெட்டுகளையும் சிற்பங்களையும் பராமரிக்கவும், பாதுகாக்கவும் என்னால் இயன்ற செயல்கள் :

கல்வெட்டின் பெருமைகளை அனைவருக்கும் உணர்த்துவேன்.
கல்வெட்டுகளைப் பாதுகாப்பேன்.
சிற்பங்களின் பெருமைகளை எடுத்துக் கூறுவேன்
சிற்பங்களைப் பாதுகாப்பேன்.
நினைவுச்சின்னங்களைப் பாதுகாப்பேன்.

Padasalai.Net

**அறிவை விரிவு செய்.**

என் கதை - நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம்.
வேருக்கு நீர் - ராஜம் கிருஷ்ணன்
நாற்காலிக்காரர் - ந. முத்துசாமி.

**சொல்லும் பொருளும்.**

சுண்ணம் - நறுமணப்பொடி
காருகர் - நெய்பவர்
தூசு - பட்டு
துகிர் - பவளம்
வெறுக்கை - செல்வம்
நொடை - விலை
பாசவர் - வெற்றிலை விற்போர்
ஓசுநர் - எண்ணெய் விற்போர்
மண்ணுள் வினைஞர் - ஓவியர்
மண்ணீட்டாளர் - சிற்பி
கிழி - துணி

**இலக்கணக்குறிப்பு.**

வண்ணமும் சுண்ணமும் - எண்ணும்மை
பயில்தொழில் - வினைத்தொகை

**பகுபத உறுப்பிலக்கணம்.**

மயங்கிய - மயங்கு + இ(ன்) + ய் + அ
மயங்கு - பகுதி
இ - இறந்தகால இடைநிலை
ன் - புணர்ந்து கெட்டது
ய் - உடம்படுமெய்
அ - பெயரெச்ச விகுதி

* * *

**அறம், தத்துவம், சிந்தனை**

**இயல் 8** **பெருவழி**

**பலவுள் தெரிக.**

1. **மேன்மை தரும் அறம் என்பது ......................**
அ) கைமாறு கருதாமல் அறம் செய்வது ஆ) மறுபிறப்பில் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது
இ) புகழ் கருதி அறம் செய்வது ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது
**அ) கைமாறு கருதாமல் அறம் செய்வது**

2. **'வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல், இவ்வடிகள் குறிப்பிடுவது .....................**
அ) காலம் மாறுவதை ஆ) வீட்டைத் துடைப்பதை
இ) இடையறாது அறப்பணி செய்தலை ஈ) வண்ணம் பூசுவதை
**இ) இடையறாது அறப்பணி செய்தலை**

3. **உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும் பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர்**
அ) உதியன் ; சேரலாதன் ஆ) அதியன் ; பெருஞ்சாத்தன்
இ) பேகன் ; கிள்ளிவளவன் ஈ) நெடுஞ்செழியன் ; திருமுடிக்காரி
**ஆ) அதியன் : பெருஞ்சாத்தன்**

4. **காலக்கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர் ......................**

அ) இகழ்ந்தால் எம்மனம் இறந்துவிடாது ஆ) என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது

இ) இகழ்ந்தால் இறந்துவிடாது என்மனம் ஈ) என்மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்

**அ) இகழ்ந்தால் எம்மனம் இறந்துவிடாது**

5. **சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் ........................**

அ) அகவற்பா ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

**அ) அகவற்பா**

**குறுவினா.**

1. **'கொள்வோர் கொள்க ; குரைப்போர் குரைக்க ;**
**உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது'**

அ) அடியெதுகை :

- கொள்வோர்
- உள்வாய்

ஆ) இலக்கணக் குறிப்பு – கொள்க, குரைக்க. - வியங்கோள் வினைமுற்று

2. **குறள்வெண்பாவின் இலக்கணத்தை எழுதி எடுத்துக்காட்டுத் தருக.**

குறள் வெண்பாவின் இலக்கணம் :

- வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று வரும்.
- இரண்டு அடிகளில் அமையும்
- முதலடி நான்கு சீர்கள்
- இரண்டாம் அடி மூன்று சீர்கள்

எடுத்துக்காட்டு :

- 'ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
  உயிரினும் ஓம்பப் படும்'

3. **குறிப்பு வரைக – அவையம்.**

அவையம் :

- அவையம் என்பது அறம் கூறும் மன்றங்கள்.
- உறையூர் அவையம் தனிச்சிறப்பு உடையது
- மதுரை அவையம் நடுநிலை மிக்கது.

4. **காலக் கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது?**

- காலக் கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் மீண்டும் வீட்டைச் சுத்தம் செய்தார்.

5. **வஞ்சிப்பாவிற்கு உரிய ஓசை தூங்கல் ஓசை ஆகும். துள்ளல் ஓசை கலிப்பாவுக்கு உரியது. இத்தொடர்களை ஒரே தொடராக இணைத்து எழுதுக.**

- வஞ்சிப்பாவிற்குத் தூங்கல் ஓசையும் துள்ளல் ஓசை கலிப்பாவுக்கும் உரியது.

**சிறுவினா.**

1. **சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.**

சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவை :

- நீர்நிலை பெருக்கி நிலவளம் கண்டு உணவுப் பெருக்கம் காண்பதும், அதனை அனைவருக்கும் கிடைக்கச் செய்தல்.
- குற்றங்களை அறத்தின் அடிப்படையில் ஆராய்ந்து தண்டனை வழங்கல்
- தான் பெற்றதைப் பிறருக்கு வழங்கல்

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- பிறர் துன்பத்தைத் தம் துன்பமாகக் கருதி உதவுதல்
- நிலம் புடைபெயர்ந்தாலும் பொய் சொல்லக் கூடாது.

2. **ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.**

**ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் :**

- ஓசை - அகவல் ஓசை
- சீர் - இயற்சீர் மிகுதி, காய்ச்சீர் குறைவு
- தளை - ஆசிரியத்தளை மிகுதி
- அடி - மூன்றடி முதல் பல அடிகள்
- முடிவு - ஏகாரம்

3. **'சுற்றுச் சூழலைப் பேணுவதே இன்றைய அறம்' என்ற தலைப்பில், பெற்றோர் ஆசிரியர் கூட்டத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்பு ஒன்றை உருவாக்குக.**

(குறிப்பு – சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தடுக்கச் சட்டங்கள் இயற்றப்பட்டிருந்தாலும், ஒவ்வொருவரின் உள்ளத்திலும் ஏற்படும் மாற்றமே சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும்)

**'சுற்றுச் சூழலைப் பேணுவதே இன்றைய அறம்'**

- நாம் மரங்களை நட்டு வளர்க்க வேண்டும்.
- நீர்நிலைகளைப் பாதுகாக்க வேண்டும்.
- குப்பைகளை உரிய இடத்தில் போட வேண்டும்.
- எல்லா இடங்களிலும் எச்சில் உமிழ்வதை நிறுத்த வேண்டும்.
- நெகிழிகளைத் தவிர்க்க வேண்டும்.
- கழிவு நீரை உரிய இடங்களில் சேர்க்க வேண்டும்.
- ஒவ்வொருவரின் உள்ளதிலும் ஏற்படும் மாற்றமே சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும்.

4. **வாளித் தண்ணீர், சாயக் குவளை, கந்தைத் துணி, கட்டைத் தூரிகை - இச்சொற்களைத் தொடர்புப்படுத்தி ஒரு பத்தி அமைக்க.**

**பத்தி அமைத்தல்**

வாளித் தண்ணீர் எடுத்து, சாயக்குவளையில் சாயம் கலந்து, கட்டைத் தூரிகையால் சன்னல்களைச் சத்தம் செய்து, சன்னல்களுக்கு வண்ணம் பூசுவர். கந்தைத் துணியால் கைகளைத் துடைப்பர்.

## நெடுவினா.

1. **பள்ளித்திடலில் கிடைத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும் அதற்குப் பாராட்டுப் பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.**

**உறவினருக்குக் கடிதம்**

15 வடக்குத் தெரு,
அஅஅ ஊர்,
08-08-2024.

அன்புள்ள மாமாவிற்கு,

நலம், நலமறிய ஆவல்.

எங்கள் பள்ளி ஆண்டு விழாவில் ஒருவர் பணப்பையைத் தவற விட்டு விட்டார். அது என்னிடம் கிடைத்தது. அதனுள் பணமும் அடையாள அட்டைகளும், அலைபேசி எண்ணும் இருந்தது. அலைபேசியில் அவரைத் தொடர்பு கொண்டு பணப்பையை அவரிடம் ஒப்படைத்தேன். அதனால் எனக்குப் பாராட்டுகளும், வாழ்த்துகளும் குவிந்தன. இதை உங்களிடம் தெரிவிக்கவே இக்கடிதத்தை எழுதுகிறேன்.

ஆஅஅ ஊர், இப்படிக்கு,
08-08-2024. உங்கள் அன்புள்ள,

Padasalai.Net

ஆஆஆ

**உறைமேல் முகவரி**

பெறுநர்

திரு.பால்பாண்டி,
20, காந்தி நகர்,
இஇஇ – 21.

2. **காலக்கணிதம் கவிதையில் பொதிந்துள்ள நயங்களைப் பாராட்டி எழுதுக.**

கவிஞன் யானோர் காலக் கணிதம்
கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்!
புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்
பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்!
இவைசரி யென்றால் இயம்புவதென் தொழில்
இவைதவ றாயின் எதிர்ப்பதென் வேலை!
ஆக்கல் அளித்தல் அழித்தல்இம் மூன்றும்
அவனும் யானுமே அறிந்தவை: அறிக!

**திரண்ட கருத்து :**

- கவிஞர் தன்னை காலக்கணிதமாகவும், புகழுடைய தெய்வமாகவும், கூறுகிறார். கருப்பொருள்களை உருப்பட வைப்பதாகவும் அவை பொன்னை விட விலை மிகுந்தததாகவும் உள்ளது என்கிறார். சரி என்றாலும், தவறு என்றாலும் எடுத்துச் சொல்வது தனது வேலை என்கிறார்.

**மையக்கருத்து :** கவிஞரின் திறமையும் முக்கியத்துவமும் பாடப்படுகிறது.

**மோனை :** முதல் எழுத்து ஒன்றி வரும்.

- கவிஞன் - கரு
- புவியில் - பொன்னினும்
- இவைசரி - இவைதவ
- ஆக்கல் - அவனும்

**எதுகை :** இரண்டாம் எழுத்து ஒன்றி வரும்.

- கவிஞன் , புவியில், இவைசரி, இவைதவ, அவனும்

**இயைபுத் தொடை :** செய்யுளின் இறுதிச்சீர் அல்லது அசை ஒன்றி வரும்.

- கணிதம், தெய்வம், மூன்றும்.

**முரண் தொடை :**

- இவை சரி × இலை தவறு
- ஆக்கல் × அழித்தல்
- அவனும் × யானும்

**அணி :** இயல்பு நவிற்சி அணி

3. **குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் நாடகம் எழுதுக.**

மாணவன் - கொக்கைப் போல, கோழியைப் போல – உப்பைப் போல - இருக்க வேண்டும் - கொக்கு காத்திருந்து கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளும் - குப்பையைக் கிளறினாலும் தனது உணவை மட்டுமெ எடுத்துக்கொள்ளும் கோழி – கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் உப்பின் சுவையை உணரமுடியும் - ஆசிரியர் விளக்கம் - மாணவன் மகிழ்ச்சி.

**இடம் : வகுப்பறை**

**கதாபாத்திரங்கள் : கொக்கு, கோழி, உப்பு. (கொக்கு – ராமு, கோழி – ராஜா, உப்பு – செல்வி)**

Padasalai.Net

கொக்கு : என்ன கோழியாரே! நலமா.

கோழி : நலம் தான் கொக்கு அண்ணே!. என்னண்ணே இந்தப் பக்கம்.

கொக்கு : தாங்கள் குப்பையை வேகமாக கிண்டிக் கிளறிக் கொண்டிருப்பதைப் பார்த்தேன்.

கோழி : ஆமாண்ணே!. இந்த குப்பையில மக்கும் பொருள், மக்காத பொருள் எல்லாம் கலந்து கிடக்கிறது. மக்காத பொருள் வயிற்றுக்குள் போனால், நானும் என் குஞ்சுகளும் இறந்து விடுவோம்.

கொக்கு : அதனால தான் குப்பையை கிண்டி சாப்பிடுகிறாயா?

கோழி : ஆமாண்ணே!. கிண்டி கிண்டி எனக்குத் தேவையானதை மட்டும் கொத்திச் சாப்பிடுவேன்.

கொக்கு : பரவாயில்லை. குப்பையிலும் தேவையானதை மட்டும் எடுத்துக் கொள்கிறாய். நல்லது.

கோழி : 'ஓடுமீன் ஓட உறுமீன்
வருமளவும் காத்திருந்து' தானே
நீங்களும் இரையைப் பிடிக்கிறீர்கள்.

கொக்கு : ஆமாம் கோழியாரே வாய்ப்பு வந்ததும் தவற விட மாட்டேன்.

கோழி : "உப்பிலாப் பண்டம் குப்பையிலே என்பார்கள்.

உப்பு : ஆம்.!. நான் இல்லாவிட்டால் எந்த உணவும் சுவைக்காது.

கொக்கு : நீங்கள் எங்கு இருக்கிறீர்கள்?

உப்பு : இதோ! உங்கள் முன் கிடக்கும் குப்பைகளில் உள்ள உணவுத்துகள்களில்

கோழி : ஆமாண்ணே!. உப்பண்ணன் இருக்காரு அண்ணே.

மூவரும் : சரி! நாம் விடைப் பெற்றுக் கொள்வோம்.

ஆசிரியர் : மாணவர்களே, இந்த கோழியைப் போல, கொக்கைப் போல, உப்பைப் போல நீங்களும் இருக்க வேண்டும்.

மாணவர்கள் : சரி ஐயா!. நன்றி!.

## மொழியை ஆள்வோம்!

**மரபுத் தொடருக்கான பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக.**

**மரபுத் தொடர் :**

மனக்கோட்டை - மாலா கற்பனையாக **மனக்கோட்டைக்** கட்டினாள்.

கண்ணும் கருத்தும் - சாரு **கண்ணும் கருத்து**மாகப் படித்தாள்.

அள்ளி இறைத்தல் - விஜி தன் உறவுகளுக்காகப் பணத்தை **அள்ளி இறைத்தாள்.**

ஆறப்போடுதல் - எதையும் **ஆறப்போடாமல்** உடனுக்குடன் செய்ய வேண்டும்.

**மின்வாரிய அலுவலருக்குக் கடிதம்.**

**உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. அதனால் இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவன செய்யும் படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.**

அனுப்புநர்

இஇஇ,
அஅஅ ஊர்,
ஆஆஆ மாவட்டம்.

பெறுநர்

மின்வாரிய அலுவலர் அவர்கள்,
மின்வாரிய அலுவலகம்,
ஆஆஆ மாவட்டம்.

Padasalai.Net

ஐயா,

**பொருள் :** மின்விளக்குகளைப் பழுதுபார்க்க வேண்டி.

எங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. அதனால் இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு இடையூறுகள் ஏற்படுகின்றன. எனவே, மின்விளக்குகளை எரிய ஆவன செய்யும் படி பணிந்து வேண்டுகிறேன்.

நன்றி !

அஅஅ ஊர், இப்படிக்கு,
08-08-2024. தங்கள் உண்மையுள்ள,
**இஇஇ**

**உறைமேல் முகவரி :**

**பெறுநர்**

மின்வாரிய அலுவலர் அவர்கள்,
மின்வாரிய அலுவலகம்,
ஆஆஆ மாவட்டம்.

**பாநயம் பாராட்டல்.**

**கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த**
**குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே**
**ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத்தண் ணீரே**
**உகந்ததண்ணீர் இடைமலர்ந்த சுகந்தமண மலரே**
**மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே**
**மென்காற்றில் விளைசுகமே சுகத்தில்உறும் பயனே**
**ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்**
**ஆடுகின்ற அரசேஎன் அலங்கல்அணிந் தருளே.**

**திரண்ட கருத்து :**

- கோடையில் இளைப்பாற்றிக் கொள்ள கிடைத்த குளிர்மரமே நிழல், கனி தரும் மரமே, தீஞ்சுவைத் தண்ணீரே, சுகந்த மணமலரே, மெல்லிய பூங்காற்றே, விளை சுகமே, உறும் பயனே, எனை மணந்த மணவாளனே, அம்பலத்தில் ஆடும் அரசனே எனது பாமாலையை ஏற்று அருள்க.

**மையக்கருத்து:**

- இயற்கையை இறைவனாகப் பாடுகிறார் வள்ளலார்.

**மோனை** : முதல் எழுத்து ஒன்றி வரும்.

- **கோடை** , குளிர்
- மேடை, மென் காற்று
- ஓடை, உகந்த
- ஆடை, ஆடுகின்ற

**எதுகை :** இரண்டாம் எழுத்து ஒன்றி வரும்.

கோடை, ஓடை, மேடை, ஆடை, ஆடு.

**இயைபு :** செய்யுளின் இறுதிச் சீரோ, அசையோ ஒன்றிவரும்.

- கனியே (ஏ)
- தண்ணீரே (ஏ)
- மலரே (ஏ) **ஏகாரத்தில் முடிந்துள்ளது.**

- காற்றே (ஏ)
- பயனே (ஏ)
- அருளே (ஏ)

முரண் தொடை : கோடை × குளிர்

அணி : உருவக அணி அமைந்து வந்துள்ளது.

## மொழியோடு விளையாடு

**சொற்களைப் பிரித்துப் பார்த்து பொருள் தருக.**

1. கானடை
    - கான் அடை - காட்டைச்சேர்
    - கான் நடை - காட்டுக்கு நடத்தல்
    - கால் நடை - காலால் நடத்தல்
2. வருந்தாமரை
    - வரும் தாமரை - வரும் தாமரை மலர்
    - வருந்தா மரை - துன்பப்படாத மான்
    - வருந்து+ஆ+மரை- துன்புறும் பசுவும், மானும்
    - வரும் தா மரை - வரும் தாவுகின்ற மான்
3. பிண்ணாக்கு
    - பிள் நாக்கு - பிளவு பட்ட நாக்கு
4. பலகையொலி
    - பலகை ஒலி - மரப்பலகையின் ஒலி
    - பல கை ஒலி பல கரங்களின் ஒலி

**அகராதியில் காண்க.**

- ஆசுகவி - உடனே பாடுபவர்
- மதுரகவி - ஓசை நயத்துடன் பாடுபவர்
- சித்திரகவி - சொற்சுவையுடன் பாடுபவர்
- வித்தாரகவி - காப்பியம் இயற்றுபவர்

**கலைச் சொற்கள் அறிவு.**

| | | | |
|---|---|---|---|
| Belief | நம்பிக்கை | Philosopher | மெய்யியலாளர் |
| Renaissance | மறுமலர்ச்சி | Revivalism | மீட்டுருவாக்கம் |

**காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**

- ஒருவருக்குக் கொடுப்பதை
    ஒருபோதும் தடுக்காதே
  இருப்பதைக் கொடு.
    இல்லையென்று சொல்லாதே.
  இறைத்த கிணறு தான் ஊறும்.
    கொடுக்கக் கொடுக்கத் தான் பெருகும்.

**நிற்க அதற்குத் தக.**

| நாம் செய்ய வேண்டுவன | அறம் தரும் பயன்கள் |
|---|---|
| நல்ல சொற்களைப் பேச வேண்டும் | பிறர் மனம் மகிழும் |
| உண்மை பேச வேண்டும் | அறம் வளரும் |

Padasalai.Net

| | |
|---|---|
| நல்லதைச் செய்ய வேண்டும் | புகழ் பெருகும் |
| கோபத்தைக் கைவிட வேண்டும் | அன்பு நிறையும் |
| அன்புடன் பழக வேண்டும் | நல்ல நண்பர்கள் சேர்வர். |

**அறிவை விரிவு செய்.**

- அறமும் அரசியலும் - மு.வரதராசனார்
- அபி கவிதைகள் - அபி
- எண்ணங்கள் - எம்.எஸ்.உதயமூர்த்தி

* * *

**மனிதம், ஆளுமை**

**இயல் 9 அன்பின் மொழி**

**பலவுள் தெரிக.**

1. **'பிரிந்தன புள்ளின் கானில்**
 **பெரிதழுது இரங்கித் தேம்ப'**
 **பாடலடிகளில் அடிக்கோடிட்ட சொற்களின் பொருளைத் தெரிவு செய்க.**

 அ) கிளை, துளை ஆ) நிலம், வாட இ) காடு, வாட ஈ) காடு, நிலம்

 **இ) காடு, வாட**

2. **சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது**

 அ) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்தல் ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தல்
 இ) அறிவியல் முன்னேற்றம் ஈ) வெளிநாட்டு மூதலீடுகள்

 **ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தல்**

3. **பூக்கையைக் குவித்துப் பூவே புரிவொடு காக்க என்று ...................................... வேண்டினார்.**

 அ) கருணையன், எலிசபெத்துக்காக ஆ) எலிசபெத், தமக்காக
 இ) கருணையன், பூக்களுக்காக ஈ) எலிசபெத், பூமிக்காக

 **அ) கருணையன், எலிசபெத்துக்காக**

4. **வாய்மையே மழைநீராகி - இத்தொடரில் வெளிப்படும் அணி**

 அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம் இ) உருவகம் ஈ) தீவகம்

 **இ) உருவகம்**

5. **கலையின் கணவனாகவும் சமுதாயத்தின் புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன் - இக்கூற்றிலிருந்து நாம் புரிந்துகொள்வது :**

 அ) தம் வாழ்க்கையில் பெற்ற விளைவுகளைக் கலையாக்கினார்
 ஆ) சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்
 இ) அறத்தைக் கூறுவதற்காக எழுதினார் ஈ) அழகியலுடன் இலக்கியம் படைத்தார்

 **ஆ) சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்**

**குறுவினா.**

1. **தீவக அணியின் வகைகள் யாவை?**

 தீவக அணியின் வகைகள் :

 - முதல் நிலைத் தீவகம்

Padasalai.Net

- இடை நிலைத் தீவகம்
- கடை நிலைத் தீவகம்

2. நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு - இத்தொடரை இரு தொடர்களாக்குக.

இரு தொடராக :

- நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் உண்டு.
- அதற்குரிய காரணமும் உண்டு.

3. "காய்மணி யாகு முன்னர்க் காய்ந்தொனக் காய்ந்தேன்" - உவமை உணர்த்தும் கருத்து யாது?

உவமை உணர்த்தும் கருத்து :

- மழையில்லாமல் வாடிய பயிர் போலத் தானும் தாயில்லாமல் வாடியதாகக் கருணையன் கூறுகிறார்.

4. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது - இக்குறளில் பயின்று வந்துள்ள அணியின் இலக்கணம் யாது?

அணி இலக்கணம் :

- **அன்பும் அறனும்** என்ற சொற்களை நிரல் படக் கூறி, **பண்பும் பயனும்** என்ற சொற்களை நிறை படக் கூறியதால் இது நிரல் நிறை அணியாகும்.

5. 'வாழ்வில் தலைக்கனம்', 'தலைக்கனமே வாழ்வு' என்று நாகூர்ரூமி யாருடைய வாழ்வைக் குறித்துக் கூறுகிறார்.?

- 'வாழ்வில் தலைக்கனம்' தலைக் கனமே வாழ்வு என்று நாகூர் ரூமி சித்தாளின் வாழ்வைக் குறித்துக் கூறுகிறார்.

சிறுவினா.

1. "சித்தாளின் மனச்சுமைகள்
செங்கற்கள் அறியாது" - இடஞ்சுட்டிப் பொருள் தருக.

இடம் : இந்த வரிகள் நாகூர்ரூமியின் 'சித்தாளு' என்ற கவிதையில் அமைந்துள்ளது.

பொருள் : கட்டிடங்கள் உருவாக காரணமான தொழிலாளர்களின் மனச்சுமைகளை செங்கற்கள் அறிவதில்லை.

விளக்கம் : தொழிலாளர்களின் மனச்சுமைகளை சிலமனங்களும் அறிவதில்லை.

2. ஜெயகாந்தன் தம் கதைமாந்தர்களின் சிறந்த கூறுகளைக் குறிப்பிடத் தவறுவதில்லை என்று அசோகமித்திரன் கூறுகிறார். இக்கூற்றை மெய்ப்பிக்கும் செயல் ஒன்றைத் 'தர்க்கத்திற்கு அப்பால்' கதை மாந்தர் வாயிலாக விளக்குக.

கதை மாந்தர் 1: ஊர்த்திரும்புவதற்குப் பன்னிரெண்டனா போக மீதியை செலவு செய்தார். இரண்டனாவை கண்ணில்லாப் பிச்சைக்காரனுக்குப் போட்டார். ஆனால் பயணச்சீட்டு வாங்கும் இடத்தில் இன்னும் ஓரணா தேவைப்பட்டது. ஆகையால் அவர் பிச்சைக்காரன் தட்டில் இருந்து எடுக்கிறார். பிச்சைக்காரன், குருடனை ஏமாத்தாதே என்கிறான். உடனே அத்தட்டில் இரண்டணாவைப் போட்டு விட்டார்.

3. எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார்?

எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுவது:

- நான் உயிர் பிழைக்கும் வழி அறியேன்.
- இந்த உடலின் தன்மையை அறியேன்.
- உணவைத் தேடிக் கொள்ளும் வழிவகைகளை அறியேன்.
- காட்டில் செல்வதற்கான வழிகளையும் அறியேன் என்று கருணையன் கூறுகிறார்.

4. கவிஞர் தாம் கூறவிரும்பும் கருத்திற்கு ஏற்றவாறு தற்குறிப்பேற்ற அணி அமைவதை எடுத்துக்காட்டுக.

Padasalai.Net

## தற்குறிப்பேற்ற அணி

**அணி விளக்கம் :**

- இயல்பாய் நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞன் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி ஆகும்.

**எடுத்துக்காட்டு :**

- "போருழந்தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி
  வாரல் என்னபன போல் மறித்துக் கைகாட்ட"

**அணிப் பொருத்தம் :**

- கோவலனும் கண்ணகியும் மதுரை மாநகருக்குள் சென்ற போது மதிலின் மேலிருந்த கொடிகள் காற்றில் இயல்பாக அசைந்தன. ஆனால், கோவலன் மதுரையில் கொலை செய்யப்படுவான் எனக் கருதி அக்கொடிகள் "இம்மதுரைக்குள் வர வேண்டாம்" என்று கையை அசைப்பது போல் அசைந்ததாக இளங்கோவடிகள் கூறியுள்ளார். எனவே தற்குறிப்பேற்ற அணி ஆனது.

**நெடுவினா.**

**1. கருணையனின் தாய் மறைவுக்கு, வீரமாமுனிவர் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.**

**கருணையன் தாய் மறைவுக்கு வீரமாமுனிவரின் கவீதாஞ்சலி :**

- கருணையன், தன் தாயார் எலிசபெத் அம்மையாருடன் காட்டில் வாழ்ந்து வந்தான்.
- ஒரு நாள் அவன் தாயார் இறந்து விட்டார்.
- கருணையன் மலர் போன்ற கைகளைக் குவித்து, 'பூமித்தாயே! என் தாயின் உடலை நீ அன்போடு காக்க வேண்டும் என்று கூறி அழுதான்.
- குழியினுள் மலர்ப்படுக்கையைப் பரப்பினான்.
- தாயின் உடலை அடக்கம் செய்தான்.
- மலர்களையும் கண்ணீரையும் ஒன்றாகப் பொழிந்தான்.
- என் தாயின் மார்பில் மாலையென வாழ்ந்தேனே!
- இளம்பயிர் காய்ந்ததைப் போல் நானும் தாயை இழந்து வாடுகின்றேனே!
- மரக்கிளையில் இருந்து பறிக்கப்பட்ட மலரைப் போல வாடுகின்றேனே.
- தீயையும் நஞ்சையும் கொண்ட அம்பினால் புண்ணில் பாய்ச்சியது போன்றது எனது துயரம்.
- துணையைப் பிரிந்த பறவையைப் போல் ஆனேன்.
- வழுக்கு நிலத்தில் வழிதெரியாமல் தவிக்கின்றேன்.
- நான் உயிர் பிழைக்கும் வழி அறியேன்.
- உணவைத் தேடும் வழி அறியேன்.
- காட்டில் செல்லும் வழி அறியேன்.
- இந்த உடலின் தன்மையை அறியேன்.
- என்னைத் தவிக்க விட்டு விட்டு என் தாய் மட்டும் தனியாகப் போய் விட்டாளே! என்று கருணையன் கதறி அழுதான். அது கேட்டு மணம் வீசும் மலர்களும், பறவைகளும், வண்டுகளும் அவனுக்காக அழுவன போல் கூச்சலிட்டன.

**3. 'அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து எழுதுக.**

**அழகிரிசாமியின் ஒருவன் இருக்கிறான் சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர் :**

Padasalai.Net

- "ஒருவன் இருக்கிறான்" சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் வீரப்பன் ஆவார்.
- வீரப்பனும் குப்புசாமியும் நல்ல நண்பர்கள்.
- குப்புசாமிக்கு உடல் நிலை சரியில்லை.
- ஆகையால் ஊரில் தங்கவேலுவின் வீட்டிற்கு வந்தான்.
- அவன் இங்கு வந்தது தங்கவேலுவுக்குப் பிடிக்கவில்லை.
- அவன் பொது வழிப் பாதையிலேயே படுத்து உறங்கினான்.
- அவனை வீட்டிற்குள் அவன் அழைக்கவில்லை.
- அவனை அரசு மருத்துவமனையில் சேர்த்தனர்.
- வீரப்பன் ஆறுமுகம் மூலம் ஒரு கடிதமும், ஒரு மூன்று ரூபாயும் கொடுத்து அனுப்பியிருந்தான்.

**கடிதத்தில் வீரப்பன் எழுதியவை :**

- குப்புசாமி அருகில் இல்லாத போது தன் உயிரே தன்னிடம் இல்லை என்கிறான்.
- குப்புசாமியைப் பார்த்தால் தான், தான் உண்ணும் உணவு உணவாகும் என்கிறான்.
- குப்புசாமிக்காக நாள்தோறும் இறைவனிடம் வேண்டிக் கொள்கிறேன் என்கிறான்.
- தான் வேலையின்றித் தவித்த போதும் குப்புசாமிக்கு கடன் வாங்கி உதவுகிறான்.
- குப்புசாமிக்கு வீரப்பன் பலமுறை பலவிதங்களில் உதவுகிறான்.
- வீரப்பனின் மனிதம் உயர்ந்தது.

## மொழியை ஆள்வோம்!

**உவமையைப் பயன்படுத்தி சொற்றொடர் உருவாக்குக.**

1. தாமரை இலை நீர் போல **மனதில் ஒட்டாமல் பேசக்கூடாது.**
2. மழைமுகம் காணாப் பயிர்போல **அவன் தாய் இல்லாமல் வாடினான்.**
3. கண்ணினைக் காக்கும் இமை போல **என் தாய் என்னை காத்துக் கொள்வாள்.**
4. சிலை மேல் எழுத்து போல **என் தாயின் சொல் எனது மனதில் இருக்கும்.**

**வாழ்த்துரை எழுதுக.**

**உங்கள் பள்ளியில் நடைபெறும் நாட்டுநலப்பணித்திட்ட முகாமின் தொடக்க விழாவில் மாணவர்களுக்கு வாழ்த்துரை வழங்க உரை ஒன்றை உருவாக்கித் தருக.**

### வாழ்த்துரை

**அனைவருக்கும் வணக்கம்!.**

- "நன்மையை மட்டுமே செய்" என்கிறது இந்நாட்டு நலப்பணித்திட்டம். சோதனைகளைக் கடந்து சாதனை படைப்பதே இதன் நோக்கமாகும். இந்த முகாமை நான் வாழ்த்துகிறேன். இரவு பகல் பாராமல் பிறருடைய துன்பங்களைப் போக்கி இன்முகத்துடன் செயல்படுவதற்கு வாழ்த்துகிறேன். உங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். சுற்றுப்புறத் தூய்மைக்கும், சுற்றிலும் மரம் வளர்ப்பதற்கும், சுகாதார வாழ்க்கைக்கும், பணியாற்றிட வாழ்த்துகிறேன். என்றென்றும் தொடரட்டும் உங்கள் பணி.

**பாடலில் இடம்பெற்றுள்ள தமிழ்ப் புலவர்களின் பெயர்களைக் கண்டறிந்து எழுதுக.**

**கம்பனும் கண்டேத்தும் உமறுப் புலவரை எந்தக்**
**கொம்பனும் பணியும் அறம்பாடுஞ் ஜவாது ஆசுகவியை**
**காசிம்புலவரை, குணங்குடியாரை சேகனாப் புலவரை**
**செய்குதம்பிப் பாவலரைச் சீர்தமிழ் மறக்காதன்றோ**

**விடை :**



Padasalai.Net

- கம்பன், உமறுப்புலவர், ஜவாது புலவர், காசிம்புலவர், குணங்குடியார், சேகனாப்புலவர், செய்குதம்பி பாவலர்

**விண்ணப்பப் படிவத்தை நிரப்புக.**

**வேலனின் மகனான சோமு பத்தாம் வகுப்பில் 400 மதிப்பெண்கள் பெற்றுள்ளார். அவர் படித்த அதே பள்ளியான வள்ளியூர் அரசு மேனிலைப் பள்ளியில் தமிழ் வழியில் வணிகவியல் பிரிவில் சேர நினைக்கிறார். தேர்வர் தன்னைச் சோமுவாக நினைத்து 2025- 2026ஆம் கல்வியாண்டில் பதினொன்றாம் வகுப்பில் சேருவதற்கான படிவத்தை நிறைவு செய்க.**

**மேல்நிலை வகுப்பு – சேர்க்கை விண்ணப்பம்**

**சேர்க்கை எண் :** 1020 **நாள் :** 21.06-2025 **வகுப்பும் பிரிவும் :** 11 சி

1. மாணவ / மாணவியின் பெயர் : சோமு.வே
2. பிறந்த நாள் : 25-04-2010
3. தேசிய இனம் : இந்தியன்
4. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் : வேலன். மு
5. வீட்டு முகவரி : 54, வடக்குத் தெரு, வள்ளியூர்.
6. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு : 10ஆம் வகுப்பு
7. பயின்ற மொழி : தமிழ்
8. பெற்ற மதிப்பெண்கள் : 400
9. இறுதியாகப் படித்த பள்ளியின் முகவரி : அரசு மேனிலைப் பள்ளி, வள்ளியூர், திருநெல்வேலி மாவட்டம்

| தேர்வின் பெயர் | புதிவு எண் - ஆண்டு | பாடம் | மதிப்பெண் (100) |
|---|---|---|---|
| அரசுத் தேர்வு | 568970 | தமிழ் | 80 |
| | | ஆங்கிலம் | 80 |
| எஸ்.எஸ்.எல்.சி | 2024 - 2025 | கணிதம் | 80 |
| | | அறிவியல் | 80 |
| | | சமூக அறிவியல் | 80 |
| | | மொத்தம் | 400 |

10. மாற்றுச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா? : ஆம்.
11. தாய்மொழி : தமிழ்
12. சேர விரும்பும் பாடப் பிரிவும் பயிற்று மொழியும் : வணிகவியல், தமிழ்

வே.சோமு

**மாணவ/மாணவியின் கையொப்பம்**

**நன்றியுரை எழுதுக.**

**பள்ளி வாளகத்தில் நடைபெற்ற 'மரம் நடுவிழாவுக்கு' வந்திருந்த சிறப்பு விருந்தினருக்கும் பெற்றோருக்கும் பள்ளியின் 'பசுமைப் பாதுகாப்புப் படை' சார்பாக நன்றியுரை எழுதுக.**

**நன்றியுரை :** அனைவருக்கும் என் நன்றி கலந்த வணக்கம். நன்றி சொல்லுதல் என்பது நம்மோடு பிறந்தது. இவ்விழாவிற்கு வருகை தந்த சிறப்பு விருந்தினர் அவர்களுக்கு எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்விழாவிற்கு எங்களை வழிநடத்திய பள்ளித் தலைமையாசிரியருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்விழாவிற்கு வருகை தந்த பெற்றோர்களுக்கும் பள்ளி மாணவ

மாணவியருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒலிப்பெருக்கி, மின்விசிறி, விளக்குகள் அமைத்து கொடுத்தவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## மொழியோடு விளையாடு

**விளம்பரத்தை நாளிதழுக்கான செய்தியாக மாற்றியமைக்க.**

**XXXXX மாவட்டம், போக்குவரத்துக் காவல் துறையினரால் சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு கூட்டம் நடைபெறும். ‘சாலை பாதுகாப்பு என்பது ஒரு தொடர் அன்று. அது தொடரும் வாழ்க்கை முறை என்பதை உணர வேண்டும். போக்குவரத்துக்கான அடையாளக் குறியீடுகள் பற்றியும் வாகனங்களை வேகமாக ஓட்டுவதனால் ஏற்படும் விபத்துகள் பற்றியும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.**

**கீழ்க்காணும் நாள்காட்டியில் புதன் கிழமையை ஒன்றாம் தேதியாகக் கொண்டு தமிழெண்களால் நிரப்புக :**

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | க | உ | ங | ச |
| ரு | சா | ஏ | அ | கூ | க0 | கக |
| கஉ | கங | கச | கரு | கசா | கஏ | கஅ |
| ககூ | உ0 | உக | உஉ | உங | உச | உரு |
| உசா | உஏ | உஅ | உகூ | ங0 | | |

**அகராதியில் காண்க.**

குணதரன் - நற்குணம் உடையவன்
செவ்வை - நேர்மை
நகல் - பிரதி
பூட்கை - வலிமை

**காட்சியை கண்டு கவினுற எழுதுக.**

வலது கை கொடுப்பதை
இடது கைக்கு கூட
மறந்தும் சொல்லிடாதே
செல்லாக் காசைக் கொடுக்காதே
செல்பி எடுத்து பரப்பாதே
ஆதரவு இல்லார்க்கு ஆதரவாய் இருந்திடு
இல்லை என்று கேட்போருக்கு
இல்லை என்னாமல் கொடு.
தருமம் தலைகாக்கும்
தருமம் செய்வதை
தவறிக்கூட ஒரு போதும்
விளம்பரம் செய்யாதே.

**நிற்க அதற்குத்தக.**

| | |
|---|---|
| நாங்கள் செய்த உதவி | எய்திய மனநிலை |
| வகுப்பறையில் எழுதுகோல் கொடுத்தேன். | மனமகிழ்ச்சி, மனநிறைவு |
| சாலையில் முதியவருக்கு உதவினேன் | மனநிம்மதி |
| அடிப்பட்ட பறவையைக் காப்பாற்றினேன் | மன ஆறுதல் |
| தெரு நாய்க்கு ஒரு பிடி சோறு வைத்தேன் | நன்றி உணர்வைக் கண்டு மகிழ்ந்தேன் |

Padasalai.Net

| | |
|---|---|
| வழிப்போக்கருக்கு வழி காட்டினேன் | மன நிறைவு |

**கலைச்சொல் அறிவோம்.**

Humanism - மனிதநேயம்.

Cultural Boundaries - பண்பாட்டு எல்லை.

Cabinet - அமைச்சரவை.

Cultural values - பண்பாட்டு விழுமியங்கள்.

**சொல்லும் பொருளும்.**

| | | | |
|---|---|---|---|
| சேக்கை | படுக்கை | இளங்கூழ் | இளம்பயிர் |
| யாக்கை | உடல் | தயங்கி | அசைந்து |
| பிணித்து | கட்டி | காய்ந்தேன் | வருந்தினேன் |
| வாய்ந்த | பயனுள்ள | கொம்பு | கிளை |
| உய்முறை | வாழும் வழி | புழை | துளை |
| ஓர்ந்து | நினைத்து | கான் | காடு |
| கடிந்து | விலக்கி | தேம்ப | வாட |
| உவமணி | மணமலர் | அசும்பு | நிலம் |
| படலை | மாலை | துணர் | மலர்கள் |

**இலக்கணக்குறிப்பு.**

காக்கென்று - காக்கவென்று என்பதன் தொகுத்தல் விகாரம்

கணீர் - கண்ணீர் என்பதன் இடைக்குறை

காய்மணி - வினைத்தொகை

உய்முறை - வினைத்தொகை

செய்முறை - வினைத்தொகை

மெய்முறை - வேற்றுமைத் தொகை

கைமுறை - மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை

**பகுபத உறுப்பிலக்கணம்.**

1. **அறியேன் - அறி + ய் + ஆ + ஏன்**

அறி - பகுதி

ய் - சந்தி

ஆ - எதிர்மறை இடைநிலை

ஏன் - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

2. **ஒலித்து - ஒலி + த் + த் + உ**

ஒலி - பகுதி

த் - சந்தி

த் - இடைநிலை

உ - வினையெச்ச விகுதி

**அறிவை விரிவு செய்.**

யானை சவாரி - பாவண்ணன்.

கல்மரம் - திலகவதி.

அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில் - ந. முருகேசபாண்டியன்.

**படிவங்கள்.**

Padasalai.Net

**1. வள்ளியூர் அரசு மேனிலைப் பள்ளியில். பனிரெண்டாம் வகுப்பு முடித்தார் பா. அன்பு. இவருடைய தந்தை பாலு என்பவர் எறிபந்து விளையாட்டு பயிற்சிக்காக மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினராக சேர்க்க வேண்டும் என்று நினைக்கிறார். தேர்வர் தன்னை அன்புவாக நினைத்து அதற்குரிய படிவத்தைப் பூர்த்தி செய்க.**

**தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் சேர்க்கைப் படிவம்**

| | | |
|---|---|---|
| 1. மாணவரின் பெயர் | : | பா.அன்பு |
| 2. பாலினம் | : | பெண் |
| 3. பிறந்த தேதி | : | 28.02.2010 |
| 4. தேசிய இனம் | : | இந்தியன் |
| 5. இரத்த வகை | : | பி + |
| 6. உயரம் மற்றும் எடை | : | 155 செ.மீ 55 கிலோகிராம். |
| 7. பெற்றோர் பெயர் / பாதுகாவலர் பெயர் | : | க.பாலு பா.கனகா |
| 8. வீட்டு முகவரி | : | 12, கிழக்குத் தெரு, வள்ளியூர். |
| 9. தொலைபேசி / அலைபேசி எண் | : | 9363837313 |
| 10. இறுதியாகப் படித்த முடித்த வகுப்பு | : | பனிரெண்டாம் வகுப்பு |
| 11. பள்ளியின் முகவரி | : | அரசு மேல்நிலைப்பள்ளி, வள்ளியூர் |
| 12. சேர விரும்பும் விளையாட்டு | : | எறிப்பந்து |

**பா. அன்பு**

**மாணவரின் கையெழுத்து**

சேர்க்கை எண் : 110467

தேதி : 08-08–2024

**க.பாலு**

இடம் : வள்ளியூர் **பெற்றோர் பாதுகாவலரின் கையெழுத்து**

**2. மூலைக்கரைப்பட்டியைச் சேர்ந்த முருகன் என்பவரின் மகன் கண்ணன். இவர் 18.08.2000 - இல் பிறந்தவர். 10ஆம் வகுப்பு முடித்த இவர் எழுத்தர் பணி வேண்டி விண்ணப்பிக்க இருக்கிறார். ஆதற்காக அவருக்குத் தன் விவரக்குறிப்பு தேவைப்படுகிறது. தேர்வர் தன்னை கண்ணன் ஆக நினைத்து உரிய படிவத்தினைப் பூர்த்தி செய்க.**

**பணி வாய்ப்பு வேண்டிய தன்விவரப் பட்டியலை நிரப்புதல் :**

| | | |
|---|---|---|
| 1. பெயர் | - | மு.கண்ணன் |
| 2. பாலினம் | - | ஆண் |
| 3. பிறந்த தேதி | - | 18.08.2000 |
| 4. தேசிய இனம் | - | இந்தியர் |
| 5. பெற்றோர் பெயர் | - | க.முருகன் மு.செல்வி |
| 6. வீட்டு முகவரி | - | 12, கிழக்குத் தெரு, மூலைக்கரைப்பட்டி |
| 7. தொலைபேசி அலைபேசி எண் | - | 9383736313 |
| 8. பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள் | - | 400 / 500 |
| 9. தாய்மொழி | - | தமிழ் |
| 10. பயின்ற மொழிகள் | - | தமிழ், ஆங்கிலம் |
| 11. தட்டச்சு | - | ஆம் |
| 12. கணினி | - | ஆம் |

Padasalai.Net

மேற்கண்ட விபரங்கள் அனைத்தும் உண்மையென உறுதி கூறுகிறேன். துங்கள் நிறுவனத்தில் எழுத்தர் பணியினைத் தந்தால் என் பணியைச் சிறப்பாகவும் உண்மையாகவும் செய்வேன் என உறுதி அளிக்கிறேன்.

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
மு.கண்ணன்

**அணிகள்.**

### நிரல்நிறை அணி

அணி விளக்கம் :

- சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி அவ்வரிசைப் படியே பொருள் கொள்வது நிரல்நிறை அணி ஆகும்.

எடுத்துக்காட்டு :

- அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
  பண்பும் பயனும் அது.

அணிப் பொருத்தம் :

- இக்குறளில் அன்பும் அறனும் என்ற சொற்களை வரிசையாக நிறுத்தி பண்பும் பயனும் என்ற சொற்களை முறைபடக் கூறியுள்ளதால் இது நிரல் நிறை அணி ஆகும்.

### தீவக அணி

அணி விளக்கம் :

- செய்யுளின் ஓரிடத்தில் நின்ற ஒரு சொல் அச்செய்யுளின் பல இடங்களிலும் உள்ள சொற்களோடு பொருந்திப் பொருளை விளக்குவதால் இது தீவக அணி ஆகும்.

எடுத்துக்காட்டு :

- "சேந்தன வேந்தன் திருநெடுங்கண் தெவ்வேந்தர்
  ஏந்து தடந்தோள் , இழிகுருதி – பாய்ந்து
  திசை அனைத்தும், வீரச் சிலை பொழிந்த அம்பும்,
  மிசை அனைத்தும் புள்குலமும் வீழ்ந்து"

அணிப்பொருத்தம் :

- வேந்தன் கண் சேந்தன
  தெவ்வேந்தர் தோள் சேந்தன
  தினை அனைத்தும் சேந்தன
  அம்பும் சேந்தன
  மிசை அனைத்தும் சேந்தன.

**இவ்வாறு சேந்தன என்ற சொல் பல இடங்களிலும் பொருந்திப் பொருள் தருவதால் இது தீவக அணி ஆகும்.**

### தன்மை அணி

அணி விளக்கம் :

- எவ்வகைப்பட்ட பொருளாக இருந்தாலும் இயல்பாக அமைந்த அதன் உண்மையான தன்மையை உரிய சொற்களைக் கொண்டு பாடுவது தன்மை அணி ஆகும்.

எடுத்துக்காட்டு :

- "மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்
  கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும் வையைக் கோன்
  கண்டளவே தோற்றான், அக்காரிகைதன் சொற்செவியில்
  உண்டளவே தோற்றான் உயிர்."

Padasalai.Net

அணிப்பொருத்தம் :

- கண்ணகியின் துயர் நிறைந்த தோற்றத்தினை இயல்பாக உரிய சொற்கள் மூலம் கூறியதால் இது தன்மை அணி ஆகும்.

1. உவமை அணி

அணி விளக்கம் :

- உவமை, உவமேயம், உவம உருபு இம்மூன்றும் வெளிப்படுமாறு அமைவது உவமை அணி ஆகும்.

எடுத்துக்காட்டு :

- "வேலொடு நின்றான் இடுவென்றது போலும்
  கோலொடு நின்றான் இரவு"

அணிப் பொருத்தம் :

- உவமை - வேலொடு நின்றான் இடுவென்றது
- உவமேயம் - கோலொடு நின்றான் இரவு
- உவம உருபு - போலும்

**இம்மூன்றும் வெளிப்படையாக வந்ததால் இது உவமை அணி ஆகும்.**

2. உவமை அணி

அணியின் விளக்கம் :

- உவமை, உவமேயம், உவம உருபு இம்மூன்றும் வெளிப்படுமாறு அமைவது உவமை அணி ஆகும்.

எடுத்துக்காட்டு :

நச்சப் படாதவன் செல்வம் நடுஊருள்
நச்சு மரம்பழுத் தற்று

அணிப்பொருத்தம் :

- உவமை - நடுஊருள் நச்சு மரம் பழுத்தது.
- ஊவமேயம் - நச்சப்படாதவன் செல்வம்
- உவம உருபு - அற்று

**இம்மூன்றும் வெளிப்படையாக வந்ததால் இது உவமை அணி ஆகும்.**

3. உவமை அணி

அணி விளக்கம் :

- உவமை, உவமேயம், உவம உருபு இம்மூன்றும் வெளிப்படுமாறு அமைவது உவமை அணி ஆகும்.

எடுத்துக்காட்டு :

- "குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
  றுண்டாகச் செய்வான் வினை"

அணிப்பொருத்தம் :

- உவமை - குன்னேறி யானைப் போர் கண்டற்றால்
- ஊவமேயம் - தன்கைத்தொன் றுண்டாகச் செய்வான் வினை
- உவம உருபு - அற்றால்

**இம்மூன்றும் வெளிப்படையாக வந்ததால் இது உவமை அணி ஆகும்.**

4. உவமை அணி

அணி விளக்கம் :

- உவமை, உவமேயம், உவம உருபு இம்மூன்றும் வெளிப்படுமாறு அமைவது உவமை அணி ஆகும்.

எடுத்துக்காட்டு :

- "சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல்

கொல்லப் பயன்படும் கீழ்"

அணிப்பொருத்தம் :

- உவமை - கரும்பு
- ஊவமேயம் - கொல்லப்பயன்படும் கீழ்
- உவம உருபு - போல்

**இம்மூன்றும் வெளிப்படையாக வந்ததால் இது உவமை அணி ஆகும்.**

## வஞ்சிப் புகழ்ச்சி அணி

அணி விளக்கம் :

- புகழ்வது போலப் பழிப்பதும், பழிப்பது போலப் புகழ்வதும் வஞ்சிப் புகழ்ச்சி அணி ஆகும்.

எடுத்துக்காட்டு :

- "தேவர் அனையர் கயவர் அவரும்தாம்
  மேவன செய்தொழுக லான்."

அணிப் பொருத்தம் :

- கயவர்களைத் தேவர்களுக்கு இணையாகக் கூறிப் புகழ்ந்து பின் கயவர்கள் மனம் போல செயல்படுவர் என்று பழித்துக் கூறியதால் இது வஞ்சிப் புகழ்ச்சி அணி ஆகும்.

## சொற்பொருள் பின்வரு நிலையணி

அணி விளக்கம் :

- செய்யுளில் முன்னர் வந்த சொல்லும், பொருளும் மீண்டும் மீண்டும் வந்தால் அது சொற்பொருள் பின்வரு நிலையணி எனப்படும்.

எடுத்துக்காட்டு :

- "இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்
  இன்மையே இன்னா தது"

அணிபொருத்தம் :

- இன்மை என்னும் சொல் இல்லாமை என்னும் பொருளில் மீண்டும் மீண்டும் வந்து உள்ளதால் இது சொற்பொருள் பின்வரு நிலையணி எனப்படும்.

## சொல் பின்வரு நிலையணி

அணி விளக்கம் :

- செய்யுளில் முன்னர் வந்த சொல் மீண்டும் மீண்டும் வந்து வேறு வேறு பொருளைத் தந்தால் அது சொல் பின் வருநிலையணி ஆகும்.

எடுத்துக்காட்டு :

- "பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
  பொருளல்ல தில்லை பொருள்"

அணிப் பொருத்தம் :

- பொருள் என்னும் சொல் மீண்டும் மீண்டும் வந்து செல்வம், மதிப்பு என்று வேறு வேறு பொருளில் வந்துள்ளதால் இது சொல் பின் வரு நிலையணி ஆகும்.

## 1. எடுத்துக்காட்டு உவமையணி

அணி விளக்கம் :

- செய்யுளில் உவமை, உவமேயம் இவை இரண்டும் வெளிப்படையாக வந்து உவம உருபு மறைந்து வந்தால் அது எடுத்துக்காட்டு உவமை அணி ஆகும்.

எடுத்துக்காட்டு :

- "பண்என்னாம் பாடற் கியைபின்றேல் கண்என்னாம்

கண்ணோட்டம் இல்லாத கண்."

**அணிப் பொருத்தம் :**

- உவமை - பண்என்னாம் பாடற் கியைபின்றேல்
- உவமேயம் - கண்என்னாம் கண்ணோட்டம் இல்லாத கண்

**இப்பாடலில் உவமை, உவமேயம் இவை இரண்டும் வெளிப்படையாக வந்து உவம உருபு மறைந்து வந்துள்ளதால் இது எடுத்துக்காட்டு உவமை அணி ஆகும்.**

**கீழ்க்காணும் திருக்குறளை அலகிட்டு வாய்ப்பாடு தருக.**

**'உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்**
**கல்லார் அறிவிலா தார்.'**

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1 | உல / கத் / தோ | நிரை – நேர் - நேர் | புளிமாங்காய் |
| 2 | டொட் / ட | நேர் - நேர் | தேமா |
| 3 | வொழு / கல் | நிரை - நேர் | புளிமா |
| 4 | புல / கற் / றும் | நிரை - நேர் - நேர் | புளிமாங்காய் |
| 5 | கல் / லார் | நேர் - நேர் | தேமா |
| 6 | அறி / விலா | நிரை - நிரை | கருவிளம் |
| 7 | தார் | நேர் | நாள் |

இச்செய்யுள் நாள் எனும் வாய்ப்பாட்டில் முடிந்துள்ளது.

* * *

Padasalai.Net